*கவனிக்க.-2021.02.12 ஆந் திகதிய 2215 ஆம் இலக்க இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி I : தொகுதி III மற்றும் பகுதி II பிரசுரிக்கப்படவில்லை.*


# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 2216 - 2021 පෙබරවාරි මස 19 වැනි සිකුරාදා - 2021.02.19

*2216 ஆம் இலக்கம் - 2021 ஆம் ஆண்டு பெப்புருவரி மாதம் 19 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி I : தொகுதி (IIஅ) - விளம்பரங்கள்

(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்களில் தரப்பட்டுள்ளன.)


| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| பதவிகள் - வெற்றிடம் | 354 | பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும் | 377 |


**கவனிக்க.**- (i) சத்திய ஸ்ரீ கணபதி பக்தி ஜன சேவா மன்றம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் 2021, பெப்புருவரி மாதம் 12 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி II இற்கு குறைநிரப்பியாக வெளியிடப்படுகின்றது.

(ii) சிசிர ஜயக்கொடி சியபத மன்றம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் 2021, பெப்புருவரி மாதம் 12 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி II இற்கு குறைநிரப்பியாக வெளியிடப்படுகின்றது.

(iii) இலங்கை காணி அபிவிருத்தி கூட்டுத்தாபனம் (திருத்தம்) சட்டமூலம் 2021, பெப்புருவரி மாதம் 12 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி II இற்கு குறைநிரப்பியாக வெளியிடப்படுகின்றது.

### வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான
### முக்கிய அறிவித்தல்கள்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.

வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை **வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்.** இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலூன பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.

வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முன்னர், அதாவது 2021, மாச்சு மாதம் 12 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2021, பெப்புருவரி மாதம் 25 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.

**2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல் சட்டத்தின் 9 ஆம் பிரிவு**

*"ஏதேனும் பிரகடனம், விதி, ஒழுங்கு விதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டுமென ஏதேனும் சட்டம் அல்லது சட்டவாக்கம் ஏற்பாடு செய்யுமிடத்து, அப்போது, அத்தகைய விதி, ஒழுங்குவிதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் இலத்திரனியல் வடிவத்தில் வெளியிடப்படின், அத்தகைய தேவைப்பாடு திருப்திப்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்."*

**கங்கானி லியனகே,**
*அரசாங்க அழுத்தகர்.*

*அரசாங்க அச்சுத் திணைக்களம்,*
*கொழும்பு 8,*
*2021 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதி.*

*இவ்வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*


351-B 82205-5,403 (2021/ 02)

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானியில் விளம்பரப்படுத்தப்படும் அரசாங்க சேவை நியமனங்களுக்கு ஏற்புடைத்தாகும் பொது நிபந்தனைகள்

**1. வேண்டப்படும் பொதுத் தகைமைகள் :**

1.1 விண்ணப்பதாரர் ஒவ்வொருவரும் தாம் இலங்கையர் என்பதைத் திருப்திகரமான முறையில் நிரூபித்தல் வேண்டும். இலங்கையர் என்பவர் இலங்கைப் பிரசாவுரிமைச் செய்சட்டத்தினால் வரையறை செய்யப்பட்டபடி வம்சாவழியாகவோ பதிவுவழியாகவோ இலங்கைப் பிரசையாக இருப்பவராகும்.

1.2 சிரேட்ட பாடசாலைச் சான்றிதழ் பரீட்சையில் அல்லது அதற்குச் சமமான அல்லது அதைவிட உயர்ந்த பரீட்சையில் சித்தியடைந்திருத்தல் ஆகக்குறைந்த கல்வித் தகைமையாக விதிக்கப்பட்டுள்ள எந்தப் பதவிக்கும் விண்ணப்பிக்கும் வேட்பாளர் ஒருவர் சிரேட்ட பாடசாலைச் சான்றிதழ் பரீட்சையில் அல்லது அதற்குச் சமமான பரீட்சையில் அவர் சிங்களவராக இருந்து சிங்கள மொழி மூலத்தில் கல்வி கற்றவராகவிருக்குமிடத்து அல்லது தமிழராகவிருந்து தமிழ் மொழி மூலத்தில் கல்வி கற்றவராகவிருக்குமிடத்து, விடயத்துக்கேற்ப, சிங்கள மொழியில் அல்லது தமிழ் மொழியில் சித்திபெற்றிருத்தல் வேண்டும். இத்தேவைப்பாடு (1961, சனவரி 01 ஆந் தேதிக்கு முற்பட்டவொரு திகதி தொடக்கம் அரசாங்க சேவையில் இருப்பவர்களுக்கும் அரசாங்க சேவையில் பிற பதவிகளுக்கு நியமனங்களைப் பெற முயற்சி செய்பவர்களுமானவர்களுக்கும் ஏற்புடைத்தாகாது).

1.3 சிங்களத்தில் அல்லது தமிழில் கல்வி கற்காதவர்களும் விதித்துரைத்த அரச கரும மொழித் தேர்ச்சி சோதனைகளில் சித்தியடையத் தவறியமைக்காக தகுதிகாண் நிலைப்பரீட்சார்த்த நியமனங்கள் முடிவுறுத்தப்பட்டவர்களுமான "புதிய சேர்வாளர்கள்" ஆகிய அரசாங்க உத்தியோகத்தர்களினால் அனுப்பப்படும் விண்ணப்பங்கள், அவர்கள் அப்பதவிக்கு விதித்துரைக்கப்பட்ட அதியுயர் தேர்ச்சிச் சோதனையிலிருந்து விலக்களிப்பைப் பெறும் உரிமையை வழங்கக்கூடிய தகைமைகளைப் பெற்றிருந்தாலன்றி ஏற்றுக்கொள்ளப்பட மாட்டா.

**2. சேவை நிபந்தனைகள் : பொது**

2.1 நிதி ஒழுங்குவிதிகள், தாபனக்கோவை, திணைக்களக் கட்டளைகள் அல்லது ஒழுங்குவிதிகள் ஆகியவற்றுடன் அரசாங்கத்தினால் காலத்துக்குக்காலம் விதிக்கப்படும் வேறு எவையேனும் கட்டளைகள் அல்லது ஒழுங்கு விதிகளுக்கு அமைவாகவே சகல அரசாங்க சேவை உத்தியோகத்தர்களும் இருப்பர்.

2.2 அரச உத்தியோகத்தர் ஒருவர், அரசாங்க உத்தியோகத்தர் (பிணைக்) கட்டளைச் சட்டத்தின் நியதிகளின்படி பிணை செலுத்தும்படி வேண்டப்படலாம்.

அந்தப் பிணை சம்பந்தப்பட்ட அமைச்சின் செயலாளர் தீர்மானிக்கும் அத்தகைய தொகையாகவும் அத்தகைய விதத்திலும் செலுத்தப்படல் வேண்டும்.

2.3 அரச உத்தியோகத்தர் ஒருவர் தீவின் எந்தப் பகுதியிலூவது சேவையாற்றும்படி கேட்கப்படலூம்.

**3. நிரந்தர பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தர்களுக்கு ஏற்புடையதாகும் சேவை நிபந்தனைகள் :**

3.1 நிரந்தர பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தர்கள் மேலே 2 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட நிபந்தனைகளுக்கு அமைவாக இருக்க வேண்டியதுடன் பின்வரும் நிபந்தனைகளுக்கும் அமைவாக இருத்தல் வேண்டும் :-

3.1.1 சகல நியமனங்களும் ஏதாவது ஒரு பதவி தொடர்பாக நீண்ட காலம் தேவையெனக் கருதப்பட்டாலொழிய மூன்று வருடத்துக்கு தகுதிகாண் நிலையிலேயே இருக்கும். தகுதிகாண் காலத்தின் ஏதாவது ஒரு நேரத்தில் காரணம் எதுவும் கொடுக்காமலே ஒரு நியமனத்தை நிறுத்திவைக்கலாம்.

3.1.2 சகல அரசாங்க உத்தியோகத்தர்களும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் IV ஆம் அத்தியாயத்தின் ஏற்பாடுகளுக்கும் அரசாங்கத்தின் மொழிக் கொள்கையைச் செயற்படுத்துவதற்கு காலத்துக்குக் காலம் ஆக்கப்படும் எந்தச் சட்டங்களுக்கும் அல்லது ஒழுங்குவிதிகளுக்கும் அல்லது விதிகளுக்கும் அமைந்து நடக்குமாறு வேண்டப்படுவர்.

3.1.3 சிங்கள மொழி மூலத்தில் அல்லது தமிழ் மொழி மூலத்தில் அரசாங்க சேவையில் சேராத சகல அரசாங்க உத்தியோகத்தர்களும் அரசகரும மொழிகளிலொன்றில் பணியாற்றும் அறிவைப் பெற்றுக்கொள்ளுமாறு வேண்டப்படுவர்.

3.1.4 அரசாங்க சேவையில் சிங்களம் அல்லது தமிழ் தவிர்ந்த ஒரு மொழி மூலத்தில் அரசாங்க சேவையில் சேர்ந்த உத்தியோகத்தரொருவர் தகுதிகாண் நிலைக்காலம் முடிவுற்றதன் பேரில் பதவியில் உறுதிப்படுத்தல் பிறவற்றுள், அவர் அரச கரும மொழிகளிலொன்றில் நியமனத் திகதியிலிருந்து ஒரு வருடத்துக்குள் I ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் இரண்டு வருடங்களுக்குள் II ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் (ஏற்புடையவிடத்து) மூன்று வருடங்களுக்குள் III ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் சித்தியடைவதில் தங்கியிருக்கும். ஒரு தேர்வுக்கென விதிக்கப்பட்ட காலத்தினுள் அதில் சித்தியுரத் தவறினால் வேதன ஏற்றம் இடைநிறுத்தப்படும். அந்த இடைநிறுத்தம் விதிக்கப்பட்ட காலத்துக்கு மேல்வரும் ஆறு மாதங்களுள் தேர்வில் சித்தியுறத் தவறினால் நிறுத்தமாக மாற்றப்படும். அத்தகைய ஏற்ற நிறுத்தம் தேர்வில் எய்தும் வரையில் அல்லது 3.1.6 ஆம் பிரிவின் ஏற்பாடுகள் ஏற்புடைத்தாகும். அத்தகைய காலம் வரையில் செயலில் இருக்கும்.

3.1.5 அத்தகைய உத்தியோகத்தர்களுக்கு நியமனம் வழங்கப்பட்டதன் பேரில் அரசகரும மொழிகளிலொன்றில் தேர்ச்சி பெறுவதற்கு 6 மாத காலத்திற்கு முழுச் சம்பளத்துடனான வசதிகள் வழங்கப்படல் வேண்டும். அதன் பின்னர் அவர் தொடர்புடைய தேர்ச்சிப் பரீட்சையில் சித்தியடையுமாறு வேண்டப்படுவர். அவர் சித்தியடையத் தவறுமிடத்து முழுச் சம்பளத்துடனான 6 மாத காலத்திற்கு உடனடியாகப் பின்னர், அவர் தமது வழக்கமான கடமைகளை நிறைவேற்றும் வேளையில், 2 வருட காலத்திற்குள் பரீட்சையில் சித்தியடைவதற்கு அவருக்குச் சந்தர்ப்பம் வழங்கப்படும்.

3.1.6 இந்த விதித்துரைத்த 2 1/2 வருட காலத்திற்குள் பரீட்சையில் அவர் சித்தி அடையத் தவறினால் அவருடைய சேவை முடிவுறுத்தப்படும்.

3.1.7 அரசாங்க சேவையின் நிரந்தரமான பதவியொன்றில் ஏற்கனவே பதவி உறுதிசெய்யப்பட்ட அரச உத்தியோகத்தர் ஒருவர் அரசாங்க சேவையில் உள்ள வேறொரு நிரந்தர பதவியொன்றில் நியமிக்கப்படுமிடத்து அவர் இயல்பாகவே தகுதிகாண் நிலையில் இருக்க வேண்டியதில்லை.

3.1.8 தெரிவுசெய்யப்பட்ட வேட்பாளர் (அரசாங்க சேவையில் ஏற்கனவே நிரந்தர/தற்காலிக பதவிகளை வகிப்பதுடன் ஏற்கனவே வைத்திய பரீட்சைக்கு உள்ளானவர்கள் தவிர்ந்த) தீவின் எந்தப் பகுதியிலாவது சேவை செய்வதற்கு உடற்றகுதி உள்ளவர்கள் என்பதனைச் சோதனை செய்து அவர்கள் அரசாங்க மருத்துவ உத்தியோகத்தர் ஒருவரின் மருத்துவப் பரிசோதனைக்கு உட்படல் வேண்டும்.

**4. பணிக்கமர்த்தும் நியதிகள் :**

4.1 நிரந்தரமானதும் ஓய்வூதியத்திற்குரித்துடையதுமான பதவிகளுக்கு நியமிக்கப்படும் அரச உத்தியோகத்தர் அவர்களின் வேதனத்திலிருந்து அறவிடப்பட வேண்டுமென அரசாங்கத்தால் விதிக்கப்பட்டுள்ள நூற்று வீதத்துக்குச் சமமானவொரு தொகையைத் தங்களின் வேதனங்களிலிருந்து விதவைகள், அநாதைகள் ஓய்வூதியத் திட்டத்திற்கு உதவுதொகையாக வழங்குதல் வேண்டும்.

4.2 நிரந்தர அல்லது தற்காலிகப் பதவிகளுக்கு ஏற்பாட்டு நிதிய அடிப்படையில் நியமிக்கப்படும் அரச உத்தியோகத்தர்கள் தங்களின் திரட்டிய வேதனங்களின் 6% ஐ அரசாங்க சேவை ஏற்பாடு நிதியத்துக்கு உதவு தொகையாக வழங்குமாறு வேண்டப்படுவர். நிதி ஆண்டின் இறுதியில் கட்டாய உதவுதொகையாகக் குறித்த நிதியத்திற்கு வரவு வைக்கப்பட்டுள்ள தொகையின் 150% க்குச் சமமானவொரு தொகையைக் குறித்த நிதியத்துக்குத் தனது உதவுதொகையாக அரசாங்கம் செலுத்தும்.

4.3 அரசாங்க சேவையில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நியமனங்கள் வகிப்பவர்களும், உள்ளூராட்சிச் சேவையிலுள்ள ஓய்வூதியத்திற்குரித்துடைய பதவிகளுக்கும் நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படுபவர்களுக்குமான உத்தியோகத்தர்களுக்கு உள்ளூராட்சிச் சேவையில் ஓய்வூதியத்திற்குரித்துடைய பதவிகளுக்கு நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படுபவர்களுமான உத்தியோகத்தர்களுக்கு முறையே உள்ளூராட்சிச் சேவையிலும் அரசாங்க சேவையிலுமுள்ள அவர்களது பதவிகளில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நிலையளிக்கப்படும்.

4.4 ஓய்வூதியப் பிரமாணக் குறிப்புகளின்கீழ் ஓய்வூதியத்திற்குரித்துடையவையான, அரசாங்க சேவையிலுள்ள பதவிகளுக்கு நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படும் தரைப்படை, கடற்படை, வான்படை ஆகியவற்றின் நிலையப்படை ஆளணியினர்க்கு அரசாங்க சேவையிலுள்ள அவர்களது பதவிகளில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நிலையளிக்கப்படும். இப்பிரமாணக் குறிப்புகளின்கீழ் ஓய்வூதியத்திற்குரித்துடையதெனப் பிரகடனப்படுத்தப்பட்டுள்ள ஓர் அரச உத்தியோகத்தர் ஆக அளிக்கப்படுமொரு பதவியொன்றில் நியமனத்தை ஏற்பதாக விடுவிக்கப்படும், படைத்தாங்கு சேவைகளின் உறுப்பினரொருவரினது இழக்கப்படாத முழுச் சம்பள சேவைக்காலமானது இப்பிரமாணக் குறிப்புக்களிலுள்ளவற்றிற்கு மாறாக யாதேனும் இருந்தபோதிலும் இப்பிரமாணக் குறிப்புகளின்கீழ் கொடுக்கப்படற்பாலதான ஏதேனும் ஓய்வூதியத்தின் அல்லது பணிக்கொடையின் பொருட்டுக் கணக்கில் எடுத்துக்கொள்ளப்படும்.

**5. யுத்த சேவைச் சலுகை :**

5.1 ஏனைய சகல விடயங்களிலும் தகைமை கொண்டிருப்பின் ஐக்கிய இராச்சியத்தின் போர்ப்படைகளில் சேவையாற்றியவர்களுக்கும், தீயணைக்கும் படை, விமானத் தாக்கப்பாதுகாப்புப் படை, ஊர்ப்பாதுகாப்பு படை என்பனவற்றிலும் முழுநேரக் கடமையாற்றியவர்கள் அவர்கள் தாமாகவே இப்படைகளை விட்டு விலகியிருக்காவிடின், 1939 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 03 ஆந் திகதியிலிருந்து 1949 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 31 ஆந் திகதிவரையில் உள்ள அச்சேவைக்காலத்தை தகைமை நோக்கத்தின் பொருட்டு மாத்திரம் தங்கள் வயதிலிருந்து கழிக்க அனுமதிக்கப்படுவர். ஆயின், அவர்கள் குறித்த படைகளில் 1945 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 15 ஆந் திகதிக்கு முன்பு சேர்ந்திருத்தல் வேண்டும். அத்துடன் அவர்கள் பற்றிய சேவை திருப்திகரமானதாகவும் தொடர்ச்சியானதாகவும் இருத்தல் வேண்டும்.

**6. அரசசேவையில் சேவையாற்றும் உத்தியோகத்தர்கள் :**

6.1 எல்லாத் தகைமைகளையும் உடைய அரசாங்க சேவை உத்தியோகத்தர்களின் விண்ணப்பங்கள் தொடர்புள்ள திணைக்களத் தலைவர்களினூடாக அனுப்பப்படல் வேண்டும். அரசாங்க சேவையில் நிரந்தரமான பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தரின் விண்ணப்பங்களைப் பொறுத்தமட்டில் விண்ணப்பதாரர் தெரிவுசெய்யப்பட்டால் அவர்கள் புதிய பதவியை ஏற்றுக்கொள்வதற்கு அவரை விடுவிக்க முடியுமா அல்லவா என்பதைத் திணைக்களத் தலைவர்கள் தாம் விண்ணப்பங்களை அனுப்பும்போது குறிப்பிடுதல் வேண்டும்.

6.2 விண்ணப்பதாரி குறிப்பிட்ட ஒரு நேரத்திலும் இடத்திலும் நேர்முகப் பரீட்சைக்குச் சமுகம் கொடுக்கும்படி வேண்டப்படலூம். அது தொடர்பாகப் பிரயாணச் செலவோ வேறு செலவுகளோ கொடுக்கப்பட மாட்டாது.

6.3 விண்ணப்பதாரியைச் சிபாரிசு செய்ய விரும்பும் எவராயினும் ஒருவர் சான்றிதழ் ஒன்றின் மூலம் அப்படிச் செய்யலாம். விண்ணப்பதாரி ஒருவரைத் தெரிவு செய்வதற்கு எந்தவொரு விதத்திலாவது ஆதரவு தேடினால் அல்லது செல்வாக்கைப் பிரயோகிக்க எத்தனித்தால் அது அத்தகைய விண்ணப்பதாரியைத் தகைமையற்றவர் ஆக்கிவிடும்.

6.4 விண்ணப்பத்தில் கொடுக்கப்பட்டுள்ள கூற்று ஏதாவது பிழையானதாக இருந்து அப்பிழை விண்ணப்பதாரர் தெரிவு செய்யப்படுவதற்கு முன்பதாகக் கண்டுபிடிக்கப்பட்டால் அது அவரைத் தகுதியற்றவராக்குவதற்கு உட்படுத்தும். அவர் தெரிவுசெய்யப்பட்ட பின்பு அப்பிழை கண்டுபிடிக்கப்படின் அது அவர் வேலையிலிருந்து நீக்கப்படுவதற்கு உட்படுத்தும்.

6.5 விளம்பரத் தேவைகளுக்கு அமையபடாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

**7. தகைமையின் நோக்கத்துக்காக வேதனத்தின் பொருள் வரையறை :**

7.1 தகைமையின் நோக்கில் வேதனம் திரட்டிய வேதனம் மட்டும் எனப் பொருள்படும். அதில் பதில் வேதனம். படி முதலியன சேர்ந்திருக்கா.

**8. ஆட்சேர்த்தல், பதவி உயர்வு வழங்குதல் தொடர்பான புதிய தேசிய கொள்கை :**

இனிமேல் வெளியிடப்படவிருக்கும் அரசாங்க நிருவாக சுற்றறிக்கைகளின் மூலம் திருத்தங்கள் மேற்கொள்வதற்கு உட்பட்டு 1990.03.09 ஆந் திகதிய இல. 15/90, 1990.03.25 ஆந் திகதிய இல. 15/90 (i), 1990.06.15 ஆந் திகதிய 15/90 (ii) கொண்ட அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கைகளில் காட்டப்பட்டுள்ள கொள்கைகளுக்கு இணங்க அரசாங்க சேவைக்கு, மாகாண அரசாங்க சேவைக்கு, அரசாங்க கூட்டுத்தாபனங்களுக்கான ஆட்சேர்ப்புக்கள், பதவி உயர்வுகள் என்பன 1990.01.01 ஆந் திகதி தொடக்கம் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.

# பரீட்சார்த்திகளுக்கான விதிகளும் அறிவுறுத்தல்களும்

*1976 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க திருத்தச் சட்டத்துக்கமைவான, 1968 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்க பொதுப் பரீட்சைகள் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கும் காலத்துக்குக்காலம் வெளியிடப்படுகின்ற சட்டங்களுக்கும் ஒழுங்குமுறைகளுக்கும் ஏற்ப ஒழுகுவதற்கு சகல பரீட்சார்த்திகளும் கட்டுப்பட்டவர்களாவர்.*

*1976 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்கத் திருத்தச் சட்டத்துக்கமைவான, 1968 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்க பொதுப் பரீட்சைகள் சட்டத்தின் 20 ஆம் வாசகத்தின் மூலம் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்துக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களுக்கமைய கீழ்க் குறிப்பிடப்படும் நிபந்தனைகள் மற்றும் கட்டுப்பாடுகள் விதிக்கப்படுகின்றன.*

அனைத்துப் பரீட்சார்த்திகளும், கீழ்க் குறிப்பிடப்படும் விதிகளுக்கு கட்டுப்பட வேண்டும் என்பதுடன் இவ் விதிகளில் எவற்றையேனும் மீறும் பரீட்சார்த்தி ஒருவர் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தின் தீர்மானத்துக்கு அமைய கீழ்க் குறிப்பிடப்படும் தண்டனைகளில் ஒன்று அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட தண்டனைகளுக்கு உட்படுத்தப்படுவார்.

I. விசாரணைக்கு உட்படுத்தப்படுகின்ற முழுப் பரீட்சைக்கும் அல்லது அதன் ஒரு பகுதிக்கு தோற்றுவதற்குத் தடை விதித்தல்;
II. விசாரணைக்கு உட்படுத்தப்படும் பரீட்சையின் ஒரு பாடத்திற்கு அல்லது மொத்தப் பரீட்சைக்கும் தகுதியற்றவர் ஆக்குதல்;
III. இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தின் நடாத்தப்படுகின்ற அனைத்துப் பரீட்சைகளுக்கும் தோற்றுவதற்கு வாழ்நாள் தடை விதித்தல்;
IV. குறிப்பிட்ட காலப் பகுதிக்கு இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தினால் நடாத்தப்படுகின்ற பரீட்சைகளில் தோற்றுவதற்குத் தடை விதித்தல்;
V. இடைநிறுத்தப்பட்ட, பரீட்சைக்கான தடை உடன் கடிதம் ஒன்றை வழங்குதல்;
VI. குறிப்பிட்ட காலப் பகுதிக்கு சான்றிதழ் தடை செய்யப்படல்;
VII. பொதுப் பரீட்சைகள் சட்டத்தின் கீழ் குற்றவியல் வழக்கு ஒன்றைத் தாக்கல் செய்வதற்காக பரீட்சார்த்தியை காவற்றுறையிடம் ஒப்படைத்தல் அல்லது அக்குறித்த செயற்பாடு தொடர்பாக காவற்றுறையில் புகார் செய்தல்;
VIII. பரீட்சார்த்தி அரசாங்க ஊழியராக அமையும் சந்தர்ப்பத்தில் குறித்த பரீட்சார்த்தியின் செயற்பாடு தொடர்பாக (ஒழுக்காற்று நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக) குறித்த பரீட்சார்த்தியின் நியமன அதிகாரிக்கு அறிவித்தல்.

பரீட்சைக்கு முன்பு, பரீட்சை நடைபெற்றுக் கொண்டிருக்கும் போது அல்லது பரீட்சைக்கு பின்பு அல்லது வேறு எந்த ஒரு சந்தர்ப்பத்திலும் அவ்வாறான பரீட்சார்த்தி தொடர்பாக நடவடிக்கை எடுக்கும் அதிகாரத்தை பரீட்சைகள் ஆணையாளர் நாயகம், தம்வசம் கொண்டவர் ஆவார். இது தொடர்பாக அவரால் மேற்கொள்ளப்படும் தீர்மானம் இறுதியானதாகும்.

1. சகல பரீட்சார்த்திகளும் பரீட்சை மண்டபத்தினுள் மற்றும் பரீட்சை நடைபெறும் வளாகத்தினுள் பரீட்சை மேற்பார்வையாளருக்கு அவரது பணிக் குழாமுக்கு, அதே போன்று ஏனைய பரீட்சார்த்திகளுக்கு இடையூறு அல்லது தடங்கல்கள் ஏற்படாத வகையில் நடந்துகொள்ள வேண்டும். பரீட்சார்த்திகள் பரீட்சை வளாகத்தின் சொத்துகளுக்கு அல்லது பரீட்சை ஊழியர்களின் தனிப்பட்ட சொத்துகளுக்கு சேதம் ஏற்படுத்துதல் கூடாது.
2. பரீட்சார்த்திகள் பரீட்சை நடைபெற்றுக் கொண்டிருக்கும் காலப் பகுதியிலும் பரீட்சை ஆரம்பிப்பதற்கு முன்பும் அதே போன்று பரீட்சை நடைபெற்று முடிவடைந்தவுடனும் பரீட்சை மேற்பார்வையாளர் மற்றும் அவரது பணிக் குழுவின் அறிவுறுத்தல்களுக்கு ஏற்ப நடந்து கொள்ளல் வேண்டும்.
3. பரீட்சையின் போது வினாப்பத்திரத்திற்கு விடையளிப்பது ஆரம்பிக்கப்பட்டு அரை மணித்தியாலம் கழிந்த பின்னர் எந்தவொரு பரீட்சார்த்தியும் பரீட்சை மண்டபத்திற்குள் அனுமதிக்கப்பட மாட்டார்கள். மேலும் பரீட்சை முடிவடையும் வரை எந்தவொரு பரீட்சார்த்தியும் பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியே செல்வதற்கும் இடமளிக்கப்பட மாட்டாது. செயன்முறைப் பரீட்சைகள் அல்லது வாய்மொழி மூலமான பரீட்சைகளுக்கு உரிய நேரத்திற்கு சமுகம் அளிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
4. சகல பரீட்சார்த்திகளும் தமது சுட்டெண்ணுக்குரிய ஆசனம் தவிர்ந்த வேறு எந்த இடத்திலும் அமர்தல் கூடாது. பரீட்சை மேற்பார்வையாளரின் விசேட அனுமதி இன்றி தன்னுடைய இடத்தை மாற்றக் கூடாது. தனக்கு ஒதுக்கப்பட்ட ஆசனத்தைத் தவிர வேறு இடத்தில் அமர்தல் மோசடி நோக்கத்துடன் செய்யப்பட்ட செயலாகக் கருதப்பட நேரிடும்.
5. பரீட்சை மண்டபத்தில் பூரண அமைதி பேணப்பட வேண்டும். எக் காரணம் கொண்டும் பரீட்சை மண்டபத்தினுள் பரீட்சை மேற்பார்வை பணிக்குழுவில் உள்ள ஒருவரைத் தவிர பரீட்சை மண்டபத்தினுள் அல்லது வெளியே இருக்கும் எவர் ஒருவருடனும் எந்தவித காரணத்திற்காகவும் கதைத்தல் அல்லது தகவல் பரிமாறல் அல்லது வேறு எந்தவிதமான கொடுக்கல் வாங்கலிலும் ஈடுபடுதல் முற்றாகத் தடை செய்யப்பட்டுள்ளது.
6. பரீட்சை சுட்டெண்ணை மட்டும் கொண்டே பரீட்சார்த்தியின் விடைத்தாள்கள் இனங்காணப்படுகின்றமையால் விடைத்தாளில் தன்னுடைய பெயரை எழுதுதல், விடைத்தாளை இனங்கண்டு கொள்ளக்கூடிய வகையில் ஏதேனும் குறியீடு அல்லது குறிப்பு இடுதல், விடைத்தாளில் அநாகரிகமான அல்லது அவசியமற்ற விடயங்களை எழுதுதல், விடைத்தாளுடன் நாணயத்தாள்களை இணைத்தல் ஆகியவை முற்றாகத் தடை செய்யப்பட்டுள்ளன. மேலும் வேறு எவரேனும் பரீட்சார்த்தியின் சுட்டெண்ணை தன்னுடைய விடைத்தாளில் எழுதுதலும் மோசடி நடவடிக்கை ஒன்றைச் செய்வதற்கு முயன்றதாகக் கருதப்படும். இனங்கண்டு கொள்ள முடியாத வகையில் சுட்டெண் எழுதப்பட்ட விடைத்தாள்களும் நிராகரிக்கப்படும்;
7. உமக்கு பரீட்சை மண்டபத்தினுள் வழங்கப்படும் தாள்கள் (பரீட்சை நடைபெறும் திகதிக்குரிய நோக்குனரின் குறுகிய கையொப்பம் மற்றும் திகதி இடப்பட்ட விடை எழுதும் தாள்கள்) தவிர வினாத்தாளிலோ அல்லது மேசையிலோ அல்லது வேறு ஏதேனும் இடத்திலோ எவற்றையும் எழுதுதல் கூடாது. இந்த அறிவுறுத்தல்களுக்கு மாறாக செயற்படுதல் மோசடி நோக்கத்துடன் செய்யப்பட்ட செயலாகக் கருதப்படும்.
8. பரீட்சார்த்திக்கு வழங்கப்படுகின்ற தாள்களை அல்லது விடை எழுதும் புத்தகத்தை கிழித்தல் அல்லது கசக்குதல் கூடாது. பரும்படி வேலைகளை செய்து பார்ப்பதற்காக உபயோகிக்கும் சகல தாள்களையும் தெளிவாக குறுக்காக கோடிட்டு விடைத்தாளுடன் இணைத்தல் அல்லது விடைத்தாளுடன் கையளித்தல் அல்லது வழங்கப்படுகின்ற அறிவுறுத்தலின் படி செய்தல் வேண்டும். பரீட்சை மண்டபத்தில் எழுதப்பட்ட எதனையும் வெளியே கொண்டு செல்லுதல் தடை செய்யப்பட்டுள்ளது. ஒரே வினாவிற்கான விடை இரு இடங்களில் எழுதப்பட்டிருப்பின் அவசியமற்ற விடையைத் தெளிவாக வெட்டி விட வேண்டும்.
9. பரீட்சையின் போது விடையளிப்பதற்காக உமக்கு வழங்கப்படுகின்ற தாள்கள் மற்றும் வேறு பொருட்களை பரீட்சை மண்டபத்திற்கு வெளியே கொண்டு செல்லுதல் தடை செய்யப்பட்டுள்ளது. இவ்வாறான அனைத்துப் பொருட்களும் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்திற்கு சொந்தமானதுடன் இவ் விதியினை மீறுதல் ஒரு தண்டனைக்குரிய செயற்பாடாகக் கருதப்படும்.
10. பரீட்சையின் போது விடையளிப்பதற்காக தனக்கு வழங்கப்படுகின்ற காகிதாதிகள் ஒவ்வொரு பரீட்சையின் போதும் தனக்ருகே வைத்துக் கொள்ளக்கூடிய எழுத்து மூலமான அனுமதியுள்ள பொருட்கள் தவிர்ந்த ஏனைய குறிப்புப் புத்தகங்கள், குறிப்புகள் உள்ளடங்கிய தாள்கள் அல்லது கடதாசித்துண்டுகள் போன்றவை பரீட்சை மண்டபத்தினுள் பரீட்சைக்குத் தோற்றும் சந்தர்ப்பத்தில் தன் வசம் அல்லது அருகே வைத்திருத்தல் கூடாது. அது போன்றே பரீட்சை மண்டபத்தினுள் கையடக்கத் தொலைபேசி, இலத்திரனியல் தொடர்பு சாதனங்கள்/கருவிகள் (Electronic Communication Instruments/ Devices) தன் வசம் அல்லது அருகே வைத்திருத்தல் மற்றும் அந்த சாதனங்கள்/கருவிகளை உபயோகித்து வெளி நபர்களின் உதவிகளைப் பெற்றுக் கொள்ளல் மற்றும் பரீட்சை நடைபெறும் போது வேறு நபர்களுக்கு மற்றும் சமூக ஊடகங்களுக்கு தகவல் அனுப்புதல் மோசடிச் செயற்பாடு என்பதுடன் தண்டனைக்குரிய குற்றமாகும்.
11. இலத்திரனியல் தொடர்பு சாதனங்கள்/கருவிகள் மேற்குறிப்பிட்ட 10ஆவது பந்தியில் விபரிக்கப்பட்டுள்ள செயற்பாடுகள் தொடர்பாக உபயோகிக்கப்பட்டது கண்டுபிடிக்கப்பட்டால் அச் சாதனங்கள்/கருவிகள் உரிய விசாரணை நடவடிக்கைகள் முடிவடையும் வரை பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தின் வசம் எடுக்கப்படுவதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.
12. பரீட்சை மண்டபத்தில் அமர்ந்த பின்னர், பரீட்சைக்கு முன் அல்லது பரீட்சை நடைபெறும் சந்தர்ப்பத்தில் எந்தவொரு பரீட்சார்த்தியும் தன் அருகே பரீட்சைக்காக கொண்டு வருவதற்கு அனுமதிக்கப்படாத எந்தவொரு பொருளையும் அல்லது உபகரணத்தையும் வைத்திருத்தல் முற்றாகத் தடை செய்யப்பட்டுள்ளது. பரீட்சை மேற்பார்வையாளர் மற்றும் அவரது பணிக் குழாம் கட்டளையிட்டால் சகல பரீட்சார்த்திகளும் தன் வசம் உள்ளவற்றை வெளிப்படுத்துவதற்கும் மற்றும் பரிசோதிப்பதற்கும் கட்டுப்படுவதுடன் இவ்வாறான தேவைப்பாட்டினை மீறுவது மோசடியான செயற்பாட்டை செய்வதற்கு முயற்சித்ததாகக் கருதப்படும்.
13. எவரேனும் ஒரு பரீட்சார்த்தி வேறு ஒரு பரீட்சார்த்தியின் விடைத்தாளிலிருந்து அல்லது புத்தகத்திலிருந்து அல்லது தாளிலிருந்து அல்லது குறிப்பெழுதிய தாள்களிலிருந்து அல்லது சமிக்ஞைகள் மூலம் அல்லது வேறு ஏதேனும் ஒன்றிலிருந்து பார்த்து எழுதுதல் அல்லது பார்த்து எழுத முயற்சித்தல் அல்லது மோசடியாக நடந்து கொள்ளல் என்பன குற்றமாகும். வேறு பரீட்சார்த்திக்கு உதவி செய்தல், வேறு பரீட்சார்த்தியிடமிருந்து அல்லது நபரிடமிருந்து அல்லது பரீட்சை பணிக் குழுவினரிடமிருந்து உதவி பெறுதல் குற்றம் என்பதுடன் விடையளித்து முடிந்த சகல தாள்களையும் எழுதிக் கொண்டிருக்கும் தாளுக்குக் கீழே வைத்து விடையளித்தல் வேண்டும். எழுதுகின்ற தாள்களை மேசையின் மேல் பரப்பி வைத்திருத்தல் கூடாது.
14. பரீட்சை ஆரம்பிக்கப்பட்டு வினாத்தாளுக்கு விடையளிக்கும் போது எக்காரணம் கொண்டும் குறுகிய நேரத்திற்குக் கூட பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியே செல்வதற்கு எந்தவொரு பரீட்சார்த்திக்கும் இடமளிக்கப்பட மாட்டாது. எனினும், ஒரு பரீட்சார்த்திக்கு மலசலகூடத்திற்கு செல்வதற்காக பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியே செல்ல வேண்டிய அவசியம் ஏற்பட்டால் பரீட்சை மேற்பார்வையாளரின் உதவி பணிக் குழுவின் உத்தியோகத்தர் ஒருவரின் கண்காணிப்பின் கீழ் பரீட்சார்த்திக்கு சிறிது நேரம் வெளியே செல்வதற்கு அனுமதிக்கப்படுவார். அவ்வாறு வெளியே செல்லும் முன்பும், மீண்டும் பரீட்சை மண்டபத்திற்குள் வரும் போதும் அவர் சோதனைக்கு உட்படுத்தப்படல் வேண்டும்.
15. பரீட்சை மண்டபத்தில் விடையளிக்கத் தொடங்குவதற்கு முன் அல்லது பின் உரிய பரீட்சார்த்திக்குப் பதிலாக போலிப் பரீட்சார்த்தி ஒருவர் தோற்றுதல் தண்டனைக்கு உள்ளாகக்கூடிய செயற்பாடாகும். ஆளடையாள அட்டையை மாற்றுதல் அல்லது போலி அடையாள அட்டையைச் சமர்ப்பித்தல் ஒரு மோசடிச் செயற்பாடாகக் கருதப்படும்.
16. பரீட்சார்த்தி ஒருவர் அல்லது பரீட்சார்த்தி அல்லாத ஒருவர் எந்தவொரு பரீட்சார்த்திக்கும் தவறான முறையில், மோசடி செய்யும் வகையில் உதவி செய்தல் ஒரு பாரிய குற்றமாக கருதப்படும்.
17. பரீட்சார்த்தி ஒருவர் கீழ்க் குறிப்பிடப்படும் அறிவுறுத்தல்களுக்கமைய செயற்படல் வேண்டும்:
   (i) சகல பரீட்சார்த்திகளும் தனது அனுமதிப்பத்திரத்தில் கையொப்பத்தினை உறுதி செய்து கொள்வதும், விண்ணப்பிக்கப்பட்ட பாடங்கள் மற்றும் அனுமதிப்பத்திரத்தில் குறிப்பிட்டுள்ள பாடங்களுக்கிடையில் பொருந்தாத தன்மை காணப்படின் பரீட்சைத் திணைக்களத்தில் விசாரித்து பரீட்சைக்கு முன் அதைத் திருத்திக் கொள்வதும் மேற்கொள்ளப்பட வேண்டும்;
   (ii) பரீட்சை ஆரம்பிப்பதற்கு அரை (1/2) மணித்தியாலத்திற்கு முன்னர் பரீட்சை மண்டபத்திற்கு சமுகமளித்தல் உசிதமானது என்பதுடன், பரீட்சை மண்டபம் நிச்சயமாகத் தெரியாதவிடத்து பரீட்சை ஆரம்பிக்கும் தினத்திற்கு முன்னரே அது குறித்து விசாரித்து பரீட்சை மண்டபத்தை சரியாக இனங்காணல் சிறந்தது;
   (III) பரீட்சைக்குத் தோற்றும் பரீட்சார்த்தி ஒவ்வொரு பாடங்களுக்குத் தோற்றும் போதும் தனது ஆள் அடையாள அட்டையை வழங்கி தனது ஆள் அடையாளத்தை உறுதிப்படுத்திக் கொள்ளுதல் வேண்டும்.
      (a) ஆள் அடையாளத்தை உறுதிப்படுத்திக் கொள்வதற்குத் தேவையான ஆவணங்களை பரீட்சை மண்டபத்தில் சமர்ப்பிக்காவிடின், பரீட்சார்த்தியாய் இருத்தல் இரத்துச் செய்யப்பட நடவடிக்கை மேற்கொள்ளப்படுவதுடன், ஏதேனும் காரணத்தால் அதற்குத் தேவையான ஆவணங்களை பரீட்சை மண்டபத்திற்கு கொண்டு வர மறந்திருப்பின் அதனைப் பற்றி பரீட்சை மேற்பார்வையாளருக்கு அறிவித்து பரீட்சை முடிவடைவதற்கு முன்னர் அவற்றைச் சமர்ப்பிப்பதற்குரிய நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும்.
      (b) சகல பரீட்சார்த்திகளும் தனது ஆள் அடையாளம் தெளிவாக வெளிப்படுத்தும் வகையில், முழு முகத்தையும் நன்றாக அடையாளம் காணக்கூடிய வகையில் பரீட்சை நடைபெறும் கால எல்லையில் பரீட்சை மண்டபத்தில் இருக்க வேண்டும்.
   (iv) பரீட்சார்த்தி புளூடூத் (Bluetooth) போன்ற இலத்திரனியல் தொடர்பு சாதனங்கள்/கருவிகளை (Electronic Communication Devices) உபயோகிக்கவில்லை என்பதனை உறுதி செய்து கொள்வதற்காக பரீட்சை மண்டபத்தில் தனது இரு காதுகளையும் தெளிவாகத் தெரியும் வகையில் வைத்திருத்தல் வேண்டும்;
   (v) பரீட்சை மண்டபத்தில் உமக்கு வழங்கப்படுகின்ற தாள்களை விடுத்து வேறு எவ்வித கடதாசிகளையும் விடையளிப்பதற்கு உபயோகிக்கக் கூடாது. எஞ்சிய கடதாசிகளை மற்றும் வேறு பொருட்களை அசுத்தப்படுத்தாது மீண்டும் உபயோகிக்கக்கூடிய வகையில் உமது மேசையின் மேல் வைக்க வேண்டும்;
   (vi) பரீட்சார்த்திகள் தங்களது பேனா, பென்சில், அழிறப்பர், அடிமட்டம், கேத்திரகணித உபகரணங்கள், வர்ணப் பென்சில் பெட்டி, வர்ண சோக் பெட்டி போன்றவற்றைக் கொண்டு வருதல் வேண்டும்;
   (vii) நீங்கள் உபயோகிக்கும் விடையளிக்கும் புத்தகம் மற்றும் சகல தாள்களிலும் விடையெழுத தொடங்கும் போது உடனடியாக சுட்டெண்ணைத் தெளிவாகக் குறிப்பிட வேண்டும். விடைத்தாள்களின் இருபுறமும் தெளிவாக, சுத்தமாக விடையெழுத வேண்டும். வினாவொன்றின் ஒரு பகுதிக்கு விடையெழுதிய பின் அவ் வினாவின் மற்றைய பகுதியை ஆரம்பிப்பதற்கு முன் ஒரு வரியையாவது வெறுமையாக விடுதல் வேண்டும். ஒவ்வொரு வினாக்களுக்குமான விடையினைப் புதிய பக்கத்தில் ஆரம்பித்தல் வேண்டும்;
   (vIII) விடையளிக்கும் தாளின் இடதுபுற விளிம்புக்கோடு காணப்படுவது வினாக்களின் இலக்கங்களை எழுதுவதற்காகும். வலதுபுற விளிம்புக்கோடு ஒதுக்கப்பட்டிருப்பது மதிப்பிடுபவரின் உபயோகத்திற்காகும். அதனால் அவற்றில் எதுவும் எழுதுதலாகாது. உம்மால் விடையளிக்கப்பட்ட வினாக்களின் இலக்கங்களைப் பிழையாக இடுவது குழப்பத்திற்குக் காரணமாக அமையும் என்பதனால் வினா இலக்கத்தைச் சரியாக எழுதுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்;
   (ix) கணித வினாக்களுக்கு விடையளிக்கும் போது கணக்குச் செய்முறைகள் பார்த்த மற்றும் பரும்படி வேலைகள் அந்தந்த ஒழுங்கில் கணக்கிற்கான விடையைக் கண்டு பிடித்ததன் ஒரு பகுதியாகக் காட்டப்பட வேண்டும். அவசியமான இடங்களில் வரையப்படும் வரிப்படங்கள் மற்றும் படங்கள் சரியானவையாகவும் குறிப்பிடத்தக்க அளவு பெரிதானதாகவும் இருத்தல் வேண்டும்;
   (x) கட்டாயமான வினா மற்றும் தெரிவு செய்யப்பட வேண்டிய ஏனைய வினாக்கள் தொடர்பாக வினாப்பத்திரத்தில் ஆரம்பத்தில் குறிப்பிடப்பட்டுள்ள அறிவுறுத்தல்களைக் கவனமாக வாசித்தல் வேண்டும். வினாப்பத்திரத்தில் குறிப்பிடப்பட்டுள்ள அறிவுறுத்தல்களுக்கு ஏற்ப விடையளிக்கப்படாத சந்தர்ப்பங்களில் புள்ளிகள் வழங்கப்பட மாட்டாது;
   (xi) ஒவ்வொரு வினாவிற்கும் விடையளித்து முடிந்த பின் விடையளித்த புத்தகத்திற்கு மேலதிகமாக எழுதிய தாள்களை பக்க இலக்கங்களின் ஒழுங்கில் இணைத்து இடதுபுற மேல்மூலையில் கழறாத வகையில் கட்டுதல்/இணைத்தல் வேண்டும். விடைப்பத்திரத்தைக் கையளிக்கும் முன் சகல விடைத்தாள்களும் இணைக்கப்பட்டுள்ளனவா என்பதனை உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும். விடைப்பத்திரத்தைக் கையளித்த பின் பரீட்சை மண்டபத்திற்கு வெளியே கொண்டு செல்லப்பட்ட எந்தவொரு விடை எழுதிய தாளும் மதிப்பீட்டிற்கு உட்படுத்தப்பட மாட்டாது;
   (xii) உங்கள் விடைத்தாளை பரீட்சை மேற்பார்வையாளரிடம் அல்லது பணிக் குழுவின் உத்தியோகத்தர் ஒருவரிடம் கையளித்தல் வேண்டும். விடைப்பத்திரங்களை சேகரிக்கும் வரை உங்களது ஆசனத்தில் அமர்ந்திருத்தல் வேண்டும். அவ்வாறு செய்வதற்குத் தவறுவதானது, சிலவேளை உமது விடைப்பத்திரம் காணாமல் போவதற்கும் நீர் ஏதாவது பாடத்திற்கு சமுகமளிக்கவில்லை என்று கருதுவதற்கும் காரணமாக அமையும்;
   (xIII) ஏதாவது காரணத்துக்காக பரீட்சை மேற்பார்வையாளருடன் அல்லது பணிக் குழுவின் உத்தியோகத்தர் ஒருவருடன் கதைக்க வேண்டிய அவசியம் ஏற்படின், ஏனையவர்களுக்கு இடையூறு ஏற்படாத வகையில் மேசையில் இருமுறை தட்டுவதன் மூலம் சமிக்ஞை செய்தல் வேண்டும்.

பரீட்சைகள் ஆணையாளர் நாயகம்.

இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்,
பெலவத்தை,
பத்தரமுல்லை.

# பதவிகள் - வெற்றிடம்

## அரசாங்க சேவை ஆணைக்குழு

## இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துதல்களை புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழுவின் உதவிப் பணிப்பாளர் (சட்டம்) பதவிகளுக்கு உத்தியோகத்தர்களை ஆட்சேர்ப்பதற்காக விண்ணப்பங்கள் கோரல் - 2020

## Calling Applications for the Recruitment of Officers to the Post of Assistant Director (Legal) of the Commission to Investigate Allegations of Bribery or Corruption - 2020

*இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துதல்களைப் புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழுவில் சட்ட உதவிப் பணிப்பாளர் (சட்டம்) பதவிகளில் நிலவும் 14 வெற்றிடங்களுக்கு தகைமையுள்ளவர்களை தெரிவு செய்வதற்கு அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் பணிப்பின் பேரில் விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. இந்த அறிவித்தலின் இறுதியிலுள்ள மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கு அமைய தயாரிக்கப்பட்ட விண்ணப்பங்களை 2021.03.25 ஆந் திகதி அல்லது அதற்கு முன்னர் "பணிப்பாளர் நாயகம், இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துதல்களை புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழு, இல. 36, மலலசேகர மாவத்தை, கொழும்பு 07" எனும் முகவரிக்கு கிடைக்குமாறு பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும். விண்ணப்பங்கள் அனுப்பப்படும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் "உதவிப் பணிப்பாளர் (சட்டம்) பதவிக்கான விண்ணப்பம்" எனத் தெளிவாக குறிப்பிடுதல் வேண்டும்.*

*(அ) விண்ணப்பப்படிவங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதி 2021.03.25 ஆகும்.*

***குறிப்பு:-*** *விண்ணப்பமொன்று அல்லது அது தொடர்பான கடிதமொன்று தபாலில் காணாமல் போதல் அல்லது தாமதமடைதல் தொடர்பாக கிடைக்கப்பெறும் முறைப்பாடுகள் தொடர்பாக பரிசீலிக்கப்படமாட்டாது. இறுதித் திகதி வரை விண்ணப்பத்தை தாமதப்படுத்துவதனால் ஏற்படும் நட்டத்தை விண்ணப்பதாரியே பொறுப்பேற்றல் வேண்டும்.*

*01.* ***சேவைக்கு ஆட்சேர்க்கும் முறை.-*** *தகைமை மதிப்பீட்டு நேர்முகப் பரீட்சையின் மூலம் நிலவும் வெற்றிடங்களுக்கு அமைய திறமை ஒழுங்கு முறைக்கு அமைய ஆட்சேர்ப்பு செய்யப்படும். நிலவும் வெற்றிடங்களின் எண்ணிக்கை 14 ஆகும். நியமிக்கப்படும் எண்ணிக்கை மற்றும் நியமனம் செயல்வலுப்பெறும் திகதி அரசாங்க சேவை ஆணைக்குழுவின் பணிப்பிற்கமைய தீர்மானிக்கப்படும்.*

*02.* ***பதவியில் அமர்த்துவதற்கான நிபந்தனைகள் :***

I. *இப்பதவி நிரந்தரமானது. ஓய்வூதிய உரித்துடையது. தங்களுக்கு உரித்தான ஓய்வூதிய முறை தொடர்பில் அரசாங்கத்தினால் எதிர்காலத்தில் எடுக்கப்படும் கொள்கைத் தீர்மானத்திற்கு தாங்கள் கட்டுப்படுதல் வேண்டும். மேலும், விதவைகள் அநாதைகள் / தபுதாரர் அநாதைகள் நிதியத்திற்கு பங்களிப்புத் தொகை செலுத்துதல் வேண்டும். அரசாங்கத்தினால் அவ்வப்போது பணிக்கப்படும் முறைக்கு அமைய தாங்கள் உதவுதொகை செலுத்துதல் வேண்டும்.*

II. *இந்தப் பதவிக்கு நியமிக்கப்படும் உத்தியோகத்தர்கள் மூன்று (03) வருட தகுதிகாண் காலத்திற்கு உட்படுவர். அந்த மூன்று (03) வருட காலத்திற்குள் முதலாவது வினைத்திறன்காண் தடைதாண்டல் பரீட்சையில் சித்தியடைதல் வேண்டும்.*

III. *இந்த நியமனத்தைப் பொறுப்பேற்ற தினத்திலிருந்து மூன்று (03) வருடங்கள் கழிவதற்கு முன்னர் அரசாங்கத்தின் கொள்கைகளுக்கு அமைவாக அரசகரும மொழித் தேர்ச்சியைப் பெற்றுக்கொண்டுள்ளதை தாங்கள் உறுதிப்படுத்தல் வேண்டும். தாங்கள் இந்த நியமனத்திற்கு தகைமைகளைப் பூர்த்திசெய்திருப்பது சிங்கள மொழி மூலம் எனின், தங்களது மற்றைய அரசகரும மொழி தமிழாகும். அவ்வாறே தாங்கள் இந்த நியமனத்திற்கு தகைமைகளைப் பூர்த்தி செய்திருப்பது தமிழ் மொழி மூலம் எனின், தங்களது மற்றைய அரசகரும மொழி சிங்களமாகும். 2020.10.16 ஆந் திகதிய அரசாங்க நிர்வாக சுற்றறிக்கை இல. 18/2020 இன் ஏற்பாடுகள் மற்றும் அதற்கு இடைத்தேர்வான சுற்றறிக்கைகளின் ஏற்பாடுகள் இதற்கு ஏற்புடையதாகும்.*

IV. *தாங்களுக்கு வழங்கப்படும் பதவியில் கடமைகளை உரிய தினத்தில் பொறுப்பேற்கத் தவறும் மற்றும்/ அல்லது நியமிக்கப்படும் பிரதேசத்தில் கடமைகளைப் பொறுப்பேற்க மறுக்கும் அல்லது தவிர்ந்திருக்கும் விண்ணப்பதாரிகளின் நியமனங்களை இரத்துச் செய்வதற்கு அரசாங்க சேவை ஆணைக்குழுவின் கட்டளையின் பிரகாரம் அதிகாரம் உண்டு.*

V. அரசாங்க சேவை ஆணைக்குழு நடைமுறை விதிகளுக்கும், இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் தாபன விதிக் கோவைக்கும், நிதி ஒழுங்கு விதிகளுக்கும், ஆணைக்குழுவின் ஏனைய கட்டளைகளுக்கும் அரசாங்கத்தினால் அவ்வப்போது வெளியிடப்படும் சுற்றுநிருப அறிவுறுத்துரைகளுக்கும் இந்த நியமனம் உட்பட்டிருக்கும்.

03. **சம்பள அளவுத்திட்டம்** :-
இந்தப் பதவிக்கு அரசாங்க நிர்வாக சுற்றறிக்கை இல. 03/ 2016 எனும் சம்பள சுற்றறிக்கைக்கு அமைய SL - 5-2016 ரூபா 58,295.00 - 5 × 1,335-5× 1,630 - 15 × 2,170 - ரூபா 105,670.00 (மாதாந்த) சம்பள அளவுத்திட்டம் உரித்துடையதாகும்.

04. **கல்வித் தகைமைகள்**:

I. சட்டத்தரணியாக உச்ச நீதிமன்றத்தில் சத்தியப்பிரமாணம் செய்திருத்தல்.

**அனுபவம்**.- உச்ச நீதிமன்றத்தில் சட்டத்தரணியாக சத்தியப்பிரமாணம் செய்த பின்னர் மூன்று (03) வருடங்களுக்கு குறையாத முனைப்பான தொழில் அனுபவத்தைப் பெற்றிருத்தல்.

அல்லது

உச்ச நீதிமன்றத்தில் சட்டத்தரணியாக சத்தியப்பிரமாணம் செய்த பின்னர் அரசாங்க நிறுவனமொன்றில் சட்டத்துறையில் மூன்று (03) வருடங்களுக்கு குறையாத பின்வரும் செயற்பாடுகளுக்கு ஏற்புடைய அனுபவத்தைப் பெற்றிருத்தல்.

I. வழக்குகள் தொடர்பில் சட்ட நடவடிக்கைகள் மற்றும் சட்டமா அதிபர் திணைக்களத்துடன் ஒருங்கிணைப்பு பணிகளை மேற்கொள்ளல்.
II. ஒப்பந்தங்கள் தொடர்பிலான சட்ட நடவடிக்கைகள்.
III. ஏற்புடைய சட்டங்கள் தொடர்பிலான சட்ட நடவடிக்கைகள்.
IV. சட்ட மூலங்கள், சுற்றறிக்கைகள், ஒழுங்கு விதிகள் போன்ற சட்ட ரீதியிலான ஆவணங்களைத் தயாரித்தல்.
V. பல்வேறுபட்ட நியதிச்சட்ட நிறுவனங்களினால் மேற்கொள்ளப்படும் சட்ட அல்லது நீதிமன்ற நடவடிக்கைகள் அல்லது விசாரணை நடவடிக்கைகள்.

05. **வயதெல்லை**.- விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதிக்கு 22 வயதுக்கு குறையாத 45 வயதுக்கு மேற்படாதவராக இருத்தல் வேண்டும். (அதற்கமைய 1999.03.25 ஆந் திகதி அல்லது அதற்கு முன்னர் மற்றும் 1976.03.25 ஆந் திகதி அல்லது அதற்கு பின்னர் பிறந்த திகதி உள்ளவர்கள் மாத்திரம் விண்ணப்பிப்பதற்கு தகைமை பெறுகின்றனர்.)

06. **உடற் தகைமைகள்**.- சகல விண்ணப்பதாரிகளும் இலங்கையின் எப்பாகத்திலும் பணியாற்றுவதற்கு மற்றும் பதவியின் கடமைகளை நிறைவேற்றுவதற்கு போதியளவு உடல் மற்றும் உள ரீதியான தகைமையைக் கொண்டிருத்தல் வேண்டும்.

07. **ஏனைய தகைமைகள்**:

I. இலங்கைப் பிரசையாக இருத்தல் வேண்டும்;
II. நல்லொழுக்கமுள்ளவர்களாக இருத்தல் வேண்டும்;
III. விண்ணப்பதாரி அல்லது குடும்ப உறுப்பினரொருவர் இலங்கைச் சட்டத்தின் கீழ் எந்தவொரு குற்றவியல் குற்றத்திற்கும் குற்றவாளியாக்கப்பட்டிருத்தல் கூடாது;
IV. சேவைக்கு ஆட்சேர்ப்பதற்கான தேவையான சகல தகைமைகளும் விண்ணப்பங்கள் கோரப்படும் வர்த்தமானி அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள தினத்திற்கு எல்லா விதத்திலும் பூரணப்படுத்தப்பட்டிருத்தல் வேண்டும்;
V. இந்தப் பதவிக்கு தகைமை பெறுபவர்களுக்கு நியமனங்கள் வழங்குவதற்கு முன்னர் ஆணைக்குழுவின் சேவைக்கு பொருத்தமானவரா என்பதை தேடிப்பார்ப்பதற்கு பாதுகாப்பு தடைநீக்க அறிக்கை கோரப்படும்.

08. **ஆட்சேர்ப்பு முறை:**

8.1 தகைமை மதிப்பீட்டு நேர்முகப் பரீட்சை.- அரசாங்க சேவை ஆணைக்குழுவினால் நியமிக்கப்படும் நேர்முகப் பரீட்சைச் சபையொன்றினால் புள்ளிகள் வழங்கப்படும்.

8.2 தகைமை மதிப்பீட்டு நேர்முகப் பரீட்சைக்கான விரிவான புள்ளிகள் வழங்கும் திட்டம் பின்வருமாறு :

| தொடர் இல. | புள்ளிகள் வழங்கப்படும் பிரதான தலைப்புக்கள் | | உச்சப் புள்ளிகள் | தெரிவு செய்யப்படுவதற்கு பரிசீலிக்கப்படும் ஆகக் குறைந்த புள்ளிகள் |
|---|---|---|---|---|
| 01 | **மேலதிக கல்வித் தகைமைகள்**<br>அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றினால் பெற்றுக் கொண்ட சட்டம் தொடர்பான பட்டம்<br>- முதலாம் வகுப்புச் சித்திக்கு<br>- இரண்டாம் வகுப்பு மேல் சித்திக்கு<br>- இரண்டாம் வகுப்பு கீழ் சித்திக்கு<br>சட்டக் கல்லூரி இறுதியாண்டின் முதலாம் வகுப்புச் சித்திக்கு<br>சட்டக் கல்லூரி இறுதியாண்டின் இரண்டாம் வகுப்புச் சித்திக்கு<br><br>(உச்ச தகைமைகளுக்கு மாத்திரம் புள்ளிகள் வழங்கப் படும். பல்கலைக்கழகப் பட்டம் அல்லது சட்டக் கல்லூரித் தகைமைகள் என்பவற்றில் ஒன்றுக்கு மட்டுமே புள்ளிகள் வழங்கப்படும்.)<br>(உச்சப் புள்ளிகள் 25 ஆகும்.) | <br><br><br>25<br>20<br>16<br>22<br>18 | 25 | ஏற்புடையதன்று |
| 02 | **மேலதிக தொழில் அனுபவம்**<br>**சட்டத்தரணியாக சட்டத்துறை பற்றிய அனுபவம்**<br>சட்டத்தரணியாக அனுபவம் -<br>சட்டத்தரணியாக சத்தியப் பிரமாணம் செய்த திகதியிலிருந்து ஒரு வருடத்திற்கு 07 புள்ளிகள் வீதம் உச்சமாக 35 புள்ளிகள் (20 வருடங்களுக்கு குறையாத சேவைக் காலத்தை பூரணப்படுத்திய சட்டத்தரணியொருவரின் அல்லது சனாதிபதி சட்டத்தரணியொருவரிடமிருந்து அல்லது நீதித்துறை அலுவலரொருவரிடமிருந்து பெற்றுக் கொண்ட சான்றிதழொன்றின் மூலம் மேலதிக அனுபவத்தை உறுதிப்படுத்தல் வேண்டும்.)<br><br>**நீதிமன்றத்தில் வழக்குகளை வழிநடாத்தல் பற்றிய அனுபவம்**<br>ஒரு வருடத்திற்கு 07 புள்ளிகள் வீதம்<br>(20 வருடங்களுக்கு குறையாத சேவைக் காலத்தை பூரணப்படுத்திய சட்டத்தரணியொருவரின் அல்லது சனாதிபதி சட்டத்தரணியொருவரிடமிருந்து அல்லது நீதித்துறை அலுவலரொருவரிடமிருந்து பெற்றுக் கொண்ட சான்றிதழொன்றின் மூலம் மேலதிக அனுபவத்தை உறுதிப்படுத்தல் வேண்டும்.)<br><br>**சட்ட அலுவலராக சட்டமா அதிபர் திணைக்களம் தவிர்ந்த அரசாங்க நிறுவனமொன்றில் அனுபவம்**<br>ஒரு வருடத்திற்கு 07 புள்ளிகள் வீதம்<br>(நிறுவனத் தலைவர் அல்லது பிரதான சட்ட அலுவலரினால் அனுபவம் உறுதிப்படுத்தப்படல் வேண்டும்)<br><br>**சட்டமா அதிபர் சார்பில் வழக்குத் தொடுத்தல் மற்றும் மன்றில் தோன்றுதல் தொடர்பிலான அனுபவம்**<br>ஒரு வருடத்திற்கு 07 புள்ளிகள் வீதம்<br>(சட்டமா அதிபர் திணைக்களத்தின் மேற்பார்வை உத்தி யோகத்தரொருவரால் அனுபவம் உறுதிப்படுத்தப்படல் வேண்டும்)<br>(உச்சப் புள்ளிகள் 35 ஆகும்) | | 35 | |

| தொடர் இல. | புள்ளிகள் வழங்கப்படும் பிரதான தலைப்புக்கள் | | உச்சப் புள்ளிகள் | தெரிவு செய்யப்படுவதற்கு பரிசீலிக்கப்படும் ஆகக் குறைந்த புள்ளிகள் |
|---|---|---|---|---|
| 03 | **மொழித்தேர்ச்சி** | | 15 | |
| | பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட பல்கலைக்கழகமொன்றில் ஆங்கில மொழியைப் பிரதான பாடமாகப் பயின்ற பட்டமொன்றுக்காக | 15 | | |
| | பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட பல்கலைக்கழகமொன்றில் பெற்றுக்கொண்ட ஆங்கில டிப்ளோமா பாடநெறிக்காக | 10 | | |
| | க. பொ. த. (உயர் தரம்) (உள்நாட்டு அல்லது பிரித்தானிய பாடத்திட்டத்தின்கீழ்) பரீட்சையில் ஆங்கில மொழிக்கு ஆகக் குறைந்தது அதி திறமைச் சித்தி பெற்றிருத்தல் அல்லது IELTS (Acadamic) score 6.5 or above அல்லது TOEFL-IBT score 79 or above அல்லது TOEFL-CBT score 213 or above அல்லது TOEFL-PBT score 550 or above பெற்றிருத்தல் | 08 | | |
| | பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட பல்கலைக்கழகமொன்றில் அல்லது அரசாங்க நிறுவனமொன்றில் அல்லது ஏற்றுக்கொள்ளப்பட்ட தொழில்துறை நிறுவனமொன்றில் ஆங்கில மொழி தொடர்பான சான்றிதழ் பாடநெறியொன்றுக்காக. | 03 | | |
| | (உச்ச தகைமைகளுக்கு மாத்திரம் புள்ளிகள் வழங்கப் படும்) | | | |
| 04 | **தகவல் தொழில்நுட்பம் பற்றிய அறிவு** | | 10 | |
| | பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட பல்கலைக்கழகமொன்றினால் வழங்கப்படும் தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்ப சட்டத்துக்கு ஏற்புடைய பட்டப் பின் படிப்பு டிப்ளோமா அல்லது அதற்கு மேற்பட்ட தகைமைக்காக. | 10 | | |
| | பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட பல்கலைக்கழகமொன்றில் "தகவல் தொழில்நுட்பம்" "தகவல் முறைமை" "கணினி விஞ்ஞானம்" பிரதான பாடமாக பயின்ற பட்டத்துக்காக. | 09 | | |
| | பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட பல்கலைக்கழகமொன்றினால் வழங்கப்படும் "தகவல் தொழில்நுட்பம்" "தகவல் முறைமை" "கணினி விஞ்ஞானம்" தொடர்பான பட்டப் பின் படிப்பு டிப்ளோமா அல்லது அதற்கு மேற்பட்ட தகைமைக்காக. | 07 | | |
| | பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட பல்கலைக்கழகமொன்றினால் அல்லது இலங்கை சட்டக் கல்லூரியினால் வழங்கப்படும் தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்ப சட்டத்துறையில் பெற்றுக்கொண்ட டிப்ளோமாவுக்காக. | 06 | | |

| தொடர் இல. | புள்ளிகள் வழங்கப்படும் பிரதான தலைப்புக்கள் | | உச்சப் புள்ளிகள் | தெரிவு செய்யப்படுவதற்கு பரிசீலிக்கப்படும் ஆகக் குறைந்த புள்ளிகள் |
|---|---|---|---|---|
| | பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட பல்கலைக்கழகமொன்றினால் அல்லது இலங்கை சட்டக் கல்லூரியினால் அல்லது ஏற்றுக்கொள்ளப்பட்ட தொழில் நிறுவனமொன்றினால் வழங்கப்படும் தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்ப சட்டத்துறைக்கு ஏற்புடைய சான்றிதழ் பாடநெறிக்காக. (ஒரு சான்றிதழுக்கு 03 புள்ளிகள் வீதம் உச்சமாக 02 சான்றிதழ்களுக்கு மாத்திரம் புள்ளிகள் வழங்கப்படும்) | 06 | | |
| 05 | **நேர்முகப் பரீட்சையில் காட்டும் திறமை**<br>பொது அறிவு மற்றும் நுண்ணறிவு - 05<br>இலஞ்சம் அல்லது ஊழல் சட்டம் தொடர்பிலான நவீன போக்கு மற்றும் தலைப்புக்கள் பற்றிய அறிவு - 05<br>தர்க்கிக்கும் ஆற்றல், தெளிவாக மற்றும் நாவன்மையுடன் விடயங்களை விவாதிக்கம் ஆற்றல் - 05 | | 15 | |
| | மொத்தம் | | 100 | |

09. இதனுடன் வழங்கப்பட்டுள்ள விண்ணப்பப்படிவத்தை அமைய 22-29 செ.மீ. ஏ4 அளவிலான காகிதத்தில் 01 - 09 வரையிலான தகவல்களை முதல் பக்கத்தில் அமையுமாறு விண்ணபத்தை தயாரித்துக்கொள்ளல் வேண்டும். விண்ணபத்தின் தகவல்களை தெளிவாக தனது கையெழுத்தினால் பூரணப்படுத்துதல் வேண்டும். கணினி மூலம் தயாரிக்கப்பட்ட/தட்டச்சு செய்யப்பட்ட விண்ணப்பங்களைப் பயன்படுத்த முடியும். உரிய மாதிரிப் படிவத்திற்கு அமைவாக தயாரிக்கப்படாத, பூரணமற்ற விண்ணப்பங்கள் எவ்வித அறிவித்தலுமின்றி நிராகரிக்கப்படும். பூரணப்படுத்திய விண்ணப்பத்தின் ஒரு பிரதியை தம்வசம் வைத்திருக்க நடவடிக்கை எடுக்கவும். அத்தோடு பூரணப்படுத்திய விண்ணப்பம் பரீட்சை அறிவித்தலுடன் இணைக்கப்பட்டுள்ள மாதிரிப் படிவத்திற்கு அமைவானதா என்பதை விண்ணப்பதாரி சரிபார்த்துக்கொள்ளல் வேண்டும். அவ்வாறில்லாத சந்தர்ப்பத்தில் விண்ணப்பம் நிராகரிக்கப்படும் என்பதை அறியத்தருகின்றேன்.

9.1 **பரீட்சார்த்தியின் அடையாளம்**:-

பரீட்சார்த்தியின் ஆளடையாளத்தை உறுதிப்படுத்த பின்வரும் ஆவணங்களில் ஒன்றை நேர்முகப் பரீட்சை நடைபெறும் தினத்தில் நேர்முகப் பரீட்சை சபைக்கு சமர்ப்பித்தல் வேண்டும்:-

I. ஆட்களைப் பதிவு செய்யும் திணைக்களத்தினால் வழங்கப்பட்ட செல்லுபடியாகும் தேசிய ஆள் அடையாள அட்டை;

II. செல்லுபடியாகும் கடவுச் சீட்டு.

மேலும் விண்ணபதாரி நேர்முகப் பரீட்சை சபையினால் அல்லது வினவப்படும் எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வரும் ஆவணங்களின் மூலப் பிரதிகளை சமர்ப்பித்தல் வேண்டும்:-

I. கல்விச் சான்றிதழ்கள் ;

II. பிறப்பு அத்தாட்சிப் பத்திரம்;

III. தேசிய ஆளடையாள அட்டை;

IV. அனுபவம் பற்றிய சான்றிதழ் (நீதித் துறை அலுவலரொருவரால் அல்லது ஆகக்குறைந்தது 10 வருடங்களுக்கு குறையாத தொழில் தகைமையைக் கொண்டுள்ள சட்டத்தரணி ஒருவரால் வழங்கப்படும் சான்றிதழ்கள் மூலம் உறுதிப்படுத்தல் வேண்டும்) ;

V. நடத்தை பற்றிய இரண்டு சான்றிதழ்கள் (அதில் கிராம அலுவலரிடமிருந்து பெறப்படுதல் வேண்டும்).

**கவனத்திற்கொள்க :**

(அ) விண்ணப்பத்துடன் எவ்வித ஆவணத்தையோ அல்லது பிரதியையோ இணைத்தல் ஆகாது ;

(ஆ) ஆவணங்களை சமர்ப்பிக்குமாறு அறிவிக்கும் சந்தர்ப்பங்களில் ஏற்புடைய ஆவணங்களை சமர்ப்பிக்க தவறும் பரீட்சார்த்திகளின் விண்ணப்பங்கள் பரிசீலனைக்கு உட்படுத்தப்படமாட்டாது.

10. அரசாங்க சேவையிலுள்ள உத்தியோகத்தர்கள் தனது விண்ணப்பத்தை பணியாற்றும் திணைக்களத் தலைவர் அல்லது அவரால் அதிகாரம் அளிக்கப்படும் உத்தியோகத்தரொருவர் ஊடாக அனுப்புதல் வேண்டும். அவ்வாறு அல்லாத விண்ணப்பதாரிகள் தனது கையொப்பத்தை அரசாங்க பாடசாலையொன்றின் அதிபர்/ஓய்வுபெற்ற உத்தியோகத்தர், பிரிவின் கிராம அலுவலர், சத்தியப் பிரமாண ஆணையாளர், சட்டத்தரணி, பிரசித்திபெற்ற நொத்தாரிசு, முப்படைகளின் அதிகாரம் பெற்ற உத்தியோகத்தர், அரசாங்க சேவையில் நிரந்தர பதவியொன்றை வகிக்கும் ரூபா 415,260.00 அல்லது அதற்கு கூடிய வருடாந்த திரட்டு சம்பளத்தைப் பெறுகின்ற அரசாங்க நிரந்தர உத்தியோகத்தர் ஒருவர் மூலம் அல்லது பௌத்த விகாரை தலைமைப் பிக்கு அல்லது பிற மதத் தளங்களுக்குப் பொறுப்பான மதத் தலைவர்கள் மூலம் உறுதிப்படுத்திக்கொள்ளல் வேண்டும்.

11. அரசாங்க சேவைகள் ஆணைக்குழு நடைமுறை விதிகள், அவ்வப்போது அரசாங்க சேவை தொடர்பாக வெளியிடப்படும் சுற்றுநிருபங்கள், சேவைப் பிரமாணக் குறிப்புகள் மற்றும் அவற்றுக்கு செய்யப்பட்டுள்ள திருத்தங்கள் என்பன இப்பதவிக்கு ஏற்புடையதாகும்.

12. வெற்றிடங்களை நிரப்புதல் அல்லது ஒரு பகுதியை நிரப்புதல் பற்றிய இறுதித் தீர்மானம் எடுக்கும் அதிகாரம் அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவுக்கு உரியது.

13. சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில மொழிகளில் பிரசுரிக்கப்படும் இந்த வர்த்தமானி அறிவித்தலில் பதப்பிரயோகங்களுக்கு மத்தியில் முரண்பாடு எழுமிடத்து சிங்கள மொழி அறிவித்தலுக்கு அமைய நடவடிக்கை எடுக்கப்படும்.

அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் பணிப்பிற்கமைய

டபிள்யூ. கே. தமித் விஜேரத்ன,
பணிப்பாளர் நாயகம்.

இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துதல்களைப் புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழு,
இல.36, மலலசேகர மாவத்தை,
கொழும்பு 07.
2021, சனவரி 18.

மாதிரி விண்ணப்பப்படிவம்

**இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துதல்களை புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழுவின் உதவிப் பணிப்பாளர் (சட்டம்) பதவிகளுக்கு உத்தியோகத்தர்களை ஆட்சேர்ப்பதற்காக விண்ணப்பங்கள் கோரல் - 2020**

**Calling Applications for the Recruitment of Officers to the Post of Assistant Director (Legal) of the Commission to Investigate Allegations of Bribery or Corruption - 2020**

01. முதலெழுத்துக்கள் இறுதியில் அமையுமாறு முதலெழுத்துக்களுடன் பெயர் (ஆங்கில பெரிய எழுத்துக்களில்):
(உதா:- NIMAL A.B.C.D.)..................................................................................................
....................................................................................................................................
..................................................................................

02. முதலெழுத்துக்களால் குறிப்பிடப்படும் பெயர்கள் (ஆங்கிலத்தில்): ..........................................................
....................................................................................................................................
....................................................................

03. முழுப் பெயர் (சிங்களம்/தமிழ்) : ................................................................................................
....................................................................................................................................
.........................................................................

04. (i) நிரந்தர முகவரி (ஆங்கில பெரிய எழுத்துக்களில்) : (அனுமதி அட்டை இந்த முகவரிக்கு அஞ்சல் செய்யப்படும்)
..............................................................................................................................................
..............................................................................................................................................
..............................................................................................................................................

(ii) உத்தியோகபூர்வ முகவரி (அரசாங்க சேவையில் இருப்பவரெனின்) : ..................................................................
..............................................................................................................................................
..............................................................................................................................................
..............................................................................................................................................

05. பால்நிலை : ஆண் - 0
பெண் - 1 ☐
(உரிய இலக்கத்தைக் கூட்டினுள் எழுதுக.)

06. தேசிய ஆளடையாள அட்டை இல : ☐☐☐☐☐☐☐☐☐☐☐☐

07. இனம் : ( சிங்களவர் 1, - தமிழர் 2, - இந்தியத் தமிழர் 3, - முஸ்லிம் 4, - வேறு 5) ☐

(உரிய இலக்கத்தைக் கூட்டினுள் எழுதுக.)

08. பிறந்த திகதி :

ஆண்டு : ☐☐☐☐ மாதம்: ☐☐ திகதி: ☐☐

2021.03.25 ஆந் திகதிக்கு வயது:

வருடங்கள்: ☐☐ மாதங்கள்: ☐☐ நாட்கள் : ☐☐

09. தொலைபேசி இல. : கையடக்க: ☐☐☐☐☐☐☐☐☐☐

நிலையான: ☐☐☐☐☐☐☐☐☐☐

10. கல்வித் தகைமைகள் :
(பட்டமொன்று இருப்பின்)
பட்டப் பாடநெறி :............................
பல்கலைக்கழகம் :............................
பட்டம் பற்றிய விபரம் :............................

தொழில் தகைமைகள் :
2021.03.25 ஆந் திகதிக்கு அனுபவம் :
வருடங்கள் :............ மாதங்கள் :................... நாட்கள் :.................

வேறு தகைமைகள் :
1. ..........................
2. ..........................
3. ..........................

11. அரசாங்க சேவையிலிருந்து பதவி நீக்கம் செய்யப்பட்ட அல்லது பதவி விலகிய ஒருவரா என்பது பற்றி : ஆம் / இல்லை

12. ஏதேனும் குற்றத்திற்கு நீதிமன்றத்தினால் தண்டிக்கப்பட்டவரா? ..........................................................................
பதில் ஆம் எனின், விபரங்களைத் தருக. : ..........................................................................................
..............................................................................................................................................

13. தாங்கள் தற்போது தொழில் புரிபவராயின் அது பற்றிய விபரம் :..........................................................................................

நிறுவனம் : .....................................................

முதல் நியமனத் திகதி : .....................................................

பதவி : .....................................................

சம்பளம் : .....................................................

14. தாங்கள் தொடர்பில் தகவல் வழங்க முடியுமான உறவினர் அற்ற இருவரது பெயர்கள் மற்றும் முகவரிகளைக் குறிப்பிடுக.

(I) ....................................................................... (II) .......................................................................

....................................................................... .......................................................................

....................................................................... .......................................................................

இவ்விண்ணப்பப்படிவத்தில் என்னால் வழங்கப்பட்டுள்ள விபரங்கள் யாவும் சரியானதும் உண்மையானதுமென உறுதிப்படுத்துகின்றேன். என்னால் இங்கு வழங்கப்பட்டுள்ள ஏதேனும் தகவல்கள் பொய்யானதென நிரூபிக்கப்பட்டால் நியமிக்கப்படுவதற்கு முன் தகுதியற்றவனாவேன் என்பதையும் நியமிக்கப்பட்டதன் பின் எந்தவித நஷ்டஈடும் இன்றி சேவையிலிருந்து நீக்கப்படுவதற்கும் ஆளாவேன் எனவும் நான் அறிவேன்.

...................................................................

விண்ணப்பதாரியின் கையொப்பம்.

திகதி : -..........................

**விண்ணப்பதாரியின் கையொப்பத்தை உறுதிப்படுத்தல்:-**

இவ்விண்ணப்பப்படிவத்தைச் சமர்ப்பிக்கின்ற.......................................... வசிக்கும் ...................................... என்பவரை நான் தனிப்பட்ட முறையில் அறிவேன் என்றும், அவர் 2021, ...... மாதம் ........ ஆந் திகதி என் முன்னிலையில் அவரது கையொப்பத்தை இட்டார் என்றும் உறுதிப்படுத்துகின்றேன்.

.................................................................

கையொப்பம்.

பெயர் மற்றும் பதவிப் பெயர் .............................

பதவி முத்திரை :........................

திகதி : ..........................

**குறிப்பு** – தற்போது அரசாங்க சேவையில் உள்ளவர்கள் தமது கையொப்பத்தை ஏற்புடைய திணைக்களத் தலைவர் மூலம் அல்லது அவருக்கு பதிலாக அதிகாரம் பெற்ற உத்தியோகத்தர் ஒருவர் மூலம் உறுதிப்படுத்தல் வேண்டும்.

விண்ணப்பதாரி அரசாங்க உத்தியோகத்தர் எனின்:-

**திணைக்களத் தலைவரின் உறுதியுரை : -**

இந்த விண்ணப்பத்தை சமர்ப்பிக்கும் திரு./திருமதி/ செல்வி .................................. தற்போது இந்த அமைச்சில்/ திணைக்களத்தில் /அலுவலகத்தில் நிரந்தர/தற்காலிக பதவியில் கடமை புரிகின்றார் என்றும் உத்தியோகத்தரின் சுயவிபரக் கோவை மற்றும் ஏனைய ஆவணங்களுக்கு அமைய அவர் வழங்கியுள்ள தகவல்கள் உண்மையானவை மற்றும் சரியானவை என்றும் உறுதிப்படுத்துகின்றேன். அவர் இந்தப் பதவிக்கு தெரிவு செய்யப்படுமிடத்து அவரை சேவையிலிருந்து விடுவிக்க முடியும் / முடியாது என்பதையும் அறியத்தருகின்றேன்.

..........................................

திணைக்களத் தலைவரின் கையொப்பம்.

திகதி : ..........................

பெயர் : .........................

பதவி : .......................

திணைக்களம் : ..........................

(தேவையற்ற சொற்களை வெட்டிவிடவும்)

2-305

## ஆரம்ப சுகாதார சேவைகள், தொற்றுநோய்கள் மற்றும் கொவிட் நோய் கட்டுப்பாட்டு அலுவல்கள் இராஜாங்க அமைச்சு

சமூக சேவைகள் திணைக்களம்

### வாழ்க்கைத் தொழில் போதனாசிரியர் (தரம் III)

சமூக சேவைகள் திணைக்களத்தினால் மட்டக்களப்பு மாவட்டத்தில் அங்கவீனமுற்ற நபர்களுக்காக ஆரம்பிக்கப்படவுள்ள வாழ்க்கைத் தொழிற்பயிற்சி நிறுவனத்திற்கு வாழ்க்கைத் தொழில் போதனாசிரியர் பதவிகள் 02 தொடர்பில் ஆட்சேர்ப்புச் செய்வதற்கு இலங்கைப் பிரஜைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. பின்வருமாறு காட்டப்பட்டுள்ள விண்ணப்பப் படிவத்திற்கமைவாக தயாரிக்கப்பட்டுள்ள விண்ணப்பங்களினை, பணிப்பாளர், சமூக சேவைகள் திணைக்களம், 02 வது மாடி, II வது கட்டம் செத்சிறிபாய, பத்தரமுல்ல என்ற முகவரிக்கு 2021.03.05 ஆந் திகதிக்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு பதிவுத் தபாலில் அனுப்பப்படுதல் வேண்டும். விண்ணப்பப் படிவத்தினை வைத்து அனுப்பும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில், "வாழ்க்கைத் தொழில் போதனாசிரியர் (தரம் III) தொடர்பில் ஆட்சேர்ப்புச் செய்தல்" எனக் குறிப்பிடப்பட்டிருத்தல் வேண்டும். www.socialservices.gov.lk என்ற இணையத் தளத்தினூடாக மாதிரிப் படிவம் மற்றும் விபரங்களினைப் பெற்றுக்கொள்ள முடியும்.

இப்பதவிக்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான தகைமைகள்

1. **வாழ்க்கைத் தொழில் போதனாசிரியர் (மின்சாதனம், தையல்)**

1.1 **வயது வரையறை**

விண்ணப்பப் படிவங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினத்தன்று 18 வயதிற்குக் குறையாமலும் 35 வயதிற்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.

1.2 **கல்வித் தகைமைகள் .-**

(அ) வாழ்க்கைத் தொழில் போதனாசிரியர் (மின்சாதனம்,தையல்) பதவிகளுக்கான கல்வித் தகைமைகள்

(i) சிங்களம்/தமிழ் மொழி, கணிதம் மற்றும் மேலும் இரண்டு பாடங்களில் திறமைச் சித்தியுடன் ஒரே அமர்வில் (06) பாடங்களில் க.பொ.த. (சா.த.) பரீட்சையில் சித்தி பெற்றிருத்தல். மற்றும்

(ii) கல்விப் பொது தராதரப் பத்திர (உயர் தர) பரீட்சையில் வேண்டிய பாட விதானமொன்றில் சகல பாடங்களிலும் (சாதாரண பொதுப் பரீட்சையினைத் தவிர்த்து) சித்தி பெற்றிருத்தல், மூன்றாம் நிலைக் கல்விப் பாடநெறியொன்றினைத் தொடர்வதற்குத் தேவையான செயற்திறன் மட்டத்தினைப் பெற்றிருத்தல்.

1.3. **தொழில் தகைமைகள்**

உரிய வாழ்க்கைத் தொழில் தொடர்பில் இலங்கை தொழில்நுட்பக் கல்லூரியில் அல்லது ஜேர்மன் தொழில்நுட்பப் பயிற்சி நிறுவனத்தில் இரண்டு வருடங்கள் அல்லது அதனிலும் கூடிய வருடச் சான்றிதழ் அல்லது

சிறு கைத்தொழில் திணைக்களத்தில் அல்லது ஆடைக்கைத்தொழில் திணைக்களத்தில் இரண்டு வருடங்கள் அல்லது அதனிலும் கூடிய வருடச் சான்றிதழ் அல்லது

சமூக சேவைகள் திணைக்களம் அல்லது தேசிய இளைஞர் சேவைகள் மன்றம் அல்லது அதனுடன் இணைந்த நிறுவனங்களினூடாக நடாத்தப்பட்ட இரண்டு வருடங்கள் அல்லது அதனிலும் கூடிய வருடப் பாடநெறிச் சான்றிதழ் அல்லது

வாழ்க்கைத் தொழிற் பயிற்சி அதிகார சபை அல்லது அதனுடன் இணைந்த நிறுவனமொன்றிலிருந்து பெறப்பட்ட உரிய வாழ்க்கைத் தொழில் தொடர்பிலான இரண்டு வருடங்கள் அல்லது அதனிலும் கூடிய வருடச் சான்றிதழ் அல்லது

மூன்றாம் நிலை மற்றும் வாழ்க்கைத் தொழிற் கல்வி ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட தேசிய வாழ்க்கைத் தொழிற் திறன் (NVQ) ஐந்தாவது (05) மட்டத்திற்கு உள்ளடக்கப்பட்ட தொழில்நுட்பப் பாடநெறி அல்லது அதற்குச் சமம் என மூன்றாம்நிலை மற்றும் வாழ்க்கைத் தொழிற் கல்வி ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பாடநெறியொன்றினை வெற்றிகரமாக முன்னெடுத்து சான்றிதழினைப் பெற்றிருத்தல்.

*1.4* **அனுபவம்**

தொடர்பற்றது

*1.5* **உடற் தகுதிகள்**

ஒவ்வொரு விண்ணப்பதாரரும் இலங்கையின் எப் பாகத்திலும் பணியாற்றுவதற்கும், பதவியின் கடமைகளினை நிறைவேற்றுவதற்கும் போதிய உடல் மற்றும் உள ஆரோக்கியத் தகுதியினைக் கொண்டவராக இருத்தல் வேண்டும்.

*1.6* **பிற**

i. இலங்கைப் பிரஜையாக இருத்தல்;

ii. விண்ணப்பதாரர் சிறந்த நன்னடத்தையினைக் கொண்டவராக இருத்தல்;

iii. பதவிக்கு ஆட்சேர்ப்புச் செய்தல் தொடர்பில் 1.1 தொடக்கம் 1.6 வரையான சகல தகைமைகளினையும், அத்தகைமைகள் பூர்த்தி செய்யப்படுதல் வேண்டும் என விண்ணப்பங்கள் கோரப்படும் அறிவித்தலில்/ வர்த்தமானி அறிவித்தலில் குறிப்பிடப்பட்ட தினத்தன்று அனைத்து வகையிலும் பூர்த்தி செய்யப்பட்டிருத்தல் வேண்டும்.

*1.7* **ஆட்சேர்ப்பு முறைமை**

எழுத்துமூல மற்றும் வாழ்க்கைத் தொழில் பரீட்சை பெறுபேற்றினை அடிப்படையாகக் கொண்டு ஆட்சேர்ப்புச் செய்யப்படுவர். எழுத்து மூலப் பரீட்சையில் தேர்ச்சி பெற்றவர்களில் அதிகூடிய மதிப்பெண்களினைப் பெற்ற திறன் ஒழுங்கு முறையின் பிரகாரம் நிலவும் வெற்றிடங்களின் எண்ணிக்கைக்கு, இருமடங்கினர் சாதாரண நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படுவர். சாதாரண நேர்முகப் பரீட்சையில் தகைமைகளினைப் பெற்றவர்கள் மாத்திரமே வாழ்க்கைத் தொழில் பரீட்சைக்கு முன்வைக்கப்படுவர்.

வாழ்க்கைத் தொழில் பரீட்சையில் தேர்ச்சி பெற்றவர்கள், அவர்கள் எழுத்து மூலப் பரீட்சையில் பெற்றுக்கொண்ட புள்ளிகளினதும், வாழ்க்கைத் தொழில் பரீட்சையில் பெற்றுக் கொண்ட புள்ளிகளினதும் மொத்தக் கூட்டுத்தொகையின் பிரகாரம், திறன் ஒழுங்கு முறையில் வெற்றிட எண்ணிக்கைக்கு சமமான எண்ணிக்கை பயிற்சிப் பாடநெறிக்குத் தெரிவு செய்யப்படுவர். அத்தொகுதியினர் 03 மாதங்கள் கற்பித்தல் முறைமை தொடர்பில் பயிற்சிப் பாடநெறியொன்றினை முன்னெடுத்து வெற்றிகரமாக நிறைவு செய்து சான்றிதழ் ஒன்றினைப் பெற்றுக் கொள்ளுதல் வேண்டும். அவ்வாறு சான்றிதழ்களைப் பெற்றுக் கொள்ளும் விண்ணப்பதாரர்கள் மாத்திரமே பதவிக்கு ஆட்சேர்ப்புச் செய்யப்படுவர்.

*1.7.1* **எழுத்துமூலப் பரீட்சை.-**

| விடயங்கள் | நேரம் | ஆகக்கூடிய மதிப்பெண்கள் | தேர்ச்சி மதிப்பெண்கள் |
|---|---|---|---|
| உளச்சார்புப் பரீட்சை | 01 மணி நேரம் | 100 | 40 |
| விளங்கிக்கொள்ளுதல் | 01 மணி நேரம் | 100 | 40 |

*1.8* **சம்பள அளவுத் திட்டம்**

பொ.நி.சு. 03/2016 இன் பிரகாரம் MT- 01 -2016

சம்பள அளவு ரூபா 29,840-10×300-11 × 350-10 × 560-10 × 660-ரூபா 48,890.00 ஆகும்.

*1.9* **சேவை நிபந்தனைகள் :-**

இப்பதவி நிரந்தரமானது, ஓய்வூதியத்தினைக் கொண்டது, ஓய்வூதியத் திட்டம் தொடர்பில் அரசினால் எதிர்வரும் காலங்களில் எடுக்கப்படும் கொள்கைசார் தீர்மானத்திற்கு அமைவாக இருத்தல் வேண்டும் என்பதுடன், விதவைகள் மற்றும் அநாதைகள் ஓய்வூதியப் பங்களிப்பு நிதியினைச் செலுத்துதலும் வேண்டும். பொ.நி.சு. 01/2014மற்றும் அதனுடன் தொடர்பான சுற்றுநிருபங்களின் பிரகாரம், ஐந்து வருடங்களினுள் வேண்டப்பட்ட அரசகரும மொழித் தேர்ச்சியினைப் பெற்றிருத்தல் வேண்டும்.

**குறிப்பு**

- சமூக சேவைகள் பணிப்பாளரினால் தீர்மானிக்கப்படும் நிறுவனமொன்றினூடாக எழுத்து மூலப் பரீட்சை கொழும்பில் நடாத்தப்படும்.

- மேற்குறிப்பிட்ட தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ள விண்ணப்பதாரர்கள் மாத்திரம் விண்ணப்பித்தல் வேண்டும் என்பதுடன், தெரிவு செய்யப்பட்ட விண்ணப்பதாரர்கள் உரிய வெற்றிடங்களினைக் கொண்ட நிறுவனத்தில் ஆகக்குறைந்தது ஐந்து வருடங்கள் கட்டாயச் சேவையின் பின்னர் மாத்திரமே வருடாந்த இடமாற்றத்தினைக் கோருவதற்கு தகைமையினைப் பெறுவர்.

**சந்தன ரணவீர ஆரச்சி,**
சமூக சேவைகள் பணிப்பாளர்.

சமூக சேவைகள் திணைக்களம்,
2 வது மாடி,
II வது கட்டம்,
செத்சிறிபாய,
பத்தரமுல்ல.
2021.02.12.

மாதிரி விண்ணப்பப்படிவம்

**ஆரம்ப சுகாதார சேவைகள், தொற்றுநோய்கள் மற்றும் கொவிட் நோய் கட்டுப்பாட்டு அலுவல்கள் இராஜாங்க அமைச்சு**

.........................................பதவி தொடர்பில் ஆட்சேர்ப்புச் செய்யும் விண்ணப்பப் படிவம்

மொழி ஊடகம் [ ]

01. முதலெழுத்துக்களுடன் பெயர் :-.................................................................................................

02. முதலெழுத்துக்கள் சுட்டிநிற்கும் பெயர் :-.......................................................................................

..........................................................................................................................................................

03. முகவரி :-...........................................................................................................................

04. தொலைபேசி இலக்கம் :-..................................................................................................

05. தேசிய அடையாள அட்டை இலக்கம் :-...........................................................................

06. பிறந்த திகதி :-.........................................................................................................................

07. விண்ணப்பப் படிவம் ஏற்றுக் கொள்ளப்படும் இறுதித் தினத்தன்று வயது :-

வருடங்கள்:-............ மாதங்கள் :-........... நாட்கள் :-................

08. திருமணமானவர்/திருமணமாகாதவர் :-...........................................................................

09. ஆண் /பெண் பாகுபாடு :-..................................................................................................

*10.* கல்வித் தகைமைகள் :-

I. க.பொ.த. (சாதாரண தரம்)
வருடம் :- ........................... பரீட்சை சுட்டெண்:- ...........................

| பாடங்கள் | தரம் | பாடங்கள் | தரம் |
|---|---|---|---|
| கணிதம் | | | |
| சிங்களம்/தமிழ்/ஆங்கிலம் | | | |
| | | | |
| | | | |
| | | | |

II க.பொ.த. (உயர் தரம்)
வருடம் :- ........................... பரீட்சை சுட்டெண்:- ...........................

| பாடங்கள் | தரம் | பாடங்கள் | தரம் |
|---|---|---|---|
| | | | |
| | | | |
| | | | |
| | | | |

*11.* வாழ்க்கைத் தொழில் மற்றும் பிற தகைமைகள் :-

| பாடநெறியின் பெயர் | நிறுவனம் | பாடநெறியின் காலப்பகுதி |
|---|---|---|
| | | |
| | | |

*12.* அனுபவம் :-

..........................................................................................................................................................
..........................................................................................................................................................
.............................................................................................................................

இவ் விண்ணப்பப் படிவத்தில் என்மூலம் வழங்கப்பட்டுள்ள தகவல்கள், எனது அறிவு மற்றும் நம்பிக்கையின் பிரகாரம் உண்மையானது என்றும் மற்றும் சரியானது என்றும் உறுதிப்படுத்துகின்றேன்.

.............................................
விண்ணப்பதாரரின் கையொப்பம்.

*02-667*

### பல்கலைக்கழக வைத்தியசாலை

### ஜெனரல் சேர் ஜோன் கொத்தலாவல பாதுகாப்புப் பல்கலைக்கழக வெற்றிடங்கள்

ஜெனரல் சேர் ஜோன் கொத்தலாவல பாதுகாப்புப் பல்கலைக்கழகத்தினால் பின்வரும் பதவிகளுக்காக தகுதிவாய்ந்த அதிகாரிகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

### 1. வைத்திய நிபுணர்கள்

- வைத்திய நிபுணர் உடலியல் பொது மருத்துவம்
- வைத்திய நிபுணர் அவசர சிகிச்சை
- வைத்திய நிபுணர் அதிதீவிர சிகிச்சை
- வைத்திய நிபுணர் உணர்விழப்பு
- வைத்திய நிபுணர் தீவிரசிகிச்சை
- வைத்திய நிபுணர் குழந்தைகள் இருதயம்
- வைத்திய நிபுணர் பிளாஸ்டிக் சத்திர சிகிச்சை
- வைத்திய நிபுணர் சத்திர சிகிச்சை (சிறுநீரகம்,ஈரல், மற்றும் பித்தச்சுரப்பி மாற்றீட்டுக்கான இயலுமை)
- வைத்திய நிபுணர் கண் சத்திர சிகிச்சை
- வைத்திய நிபுணர் வாய் மற்றும் முகம் தாடை சத்திர சிகிச்சை
- வைத்திய நிபுணர் பல் மறுசீரமைப்பு

**தகைமைகள்.-**

i. 2018 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க (திருத்தப்பட்ட) சட்டத்தின் கீழ் இலங்கை மருத்துவ சபையில் பதிவுசெய்யப்பட்ட/ பதிவுசெய்யப்படக்கூடிய வைத்திய அதிகாரிகள் மற்றும் பல் வைத்தியர்கள்.

அல்லது

ii. இலங்கை மருத்துவ சபையின் (SLMC) செல்லுபடியாகும் முழுப்பதிவுடைய மருத்துவ அதிகாரிகள்/ பல் மருத்துவர்கள்

அல்லது

iii. இலங்கை,கொழும்பு பல்கலைக் கழக மருத்துவப் பட்டப்பின் படிப்பு நிறுவக சபையினால் சான்றிதழளிக்கப்பட்டதாக குறித்த துறையில் நிபுணத்துவம் பெற்ற மருத்துவத்தில் டாக்டர் பட்டம்/ சத்திரசிகிச்சையில் டாக்டர் பட்டம் பெற்றிருத்தல் (இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் 2014.10.11 ஆந் திகதிய 1883/17 ஆம் இலக்கம் கொண்ட அதிவிசேட வர்த்தமானியில் இணைப்பு II இல் குறிப்பிடப்பட்ட)

அத்துடன்

iv. இலங்கை மருத்துவ சபையின் (SLMC) நன்னடத்தை தகுதிச் சான்றிதழ்

**வயதெல்லை.-**

30 வயதுக்குக் குறையாமலும் 45 வயதுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.

**சம்பள அளவுத்திட்டம்**.- MC 1-2- (ரூபா 91,645 – 12 x 2,700 - ரூபா 124,045)

* தரம் I வைத்திய நிபுணர்கள் MC 1-2 இன் முதலாம் படி நிலையில் வைக்கப்படுவர்.

### 2. வைத்திய அதிகாரி - தரம் I

**தகைமைகள்:**

i. வைத்திய அதிகாரியாக செயற்படுவதற்காக இலங்கை மருத்துவ சபையின் (SLMC) செல்லுபடியாகும் முழுப் பதிவை உடைய மருத்துவ அதிகாரி

அத்துடன்

ii. சுகாதார அமைச்சின் கீழுள்ள நிறுவனமொன்றில் அல்லது இலங்கை சுகாதார அமைச்சின் தனியார் சுகாதார சேவைகள் ஒழுங்குபடுத்தல் சபையின் “ தனியார் வைத்தியசாலைகள், தாதியர் இல்லங்கள், மற்றும் மகப்பேற்று இல்லங்கள் ” என்ற வகுதிக்குள் அடங்கும் பதிவுசெய்யப்பட்ட வைத்தியசாலைகளில் தரம் II மருத்துவ அதிகாரியாக குறைந்தது ஆறு (06) வருடகால அனுபவம்

அத்துடன்

iii. இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் 2014.10.11 ஆந் திகதிய 1883/17 ஆம் இலக்கம் கொண்ட அதிவிசேட வர்த்தமானியில் இணைப்பு II இல் குறிப்பிடப்பட்ட ஏற்றுக்கொள்ளப்பட்ட பட்டப்பின் படிப்புத் தகைமை

அத்துடன்

iv. இலங்கை மருத்துவ சபையின் (SLMC) நன்னடத்தை தகுதிச் சான்றிதழ்

**வயதெல்லை:** 25 வயதுக்குக் குறையாமலும் 45 வயதுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.

**சம்பள அளவுத்திட்டம்**: MO 1-1 (ரூபா 58,675 - 3 x 1,375 - 7x 1,385 – 2 x 1,910 – 10 x 2,270 - ரூபா 99,015)

* தரம் I வைத்திய நிபுணர்கள் MO 1-1 ரூபா 78,585.00 இன் 14 ஆம் படி நிலையில் வைக்கப்படுவர்.

## 3. பல்மருத்துவ அதிகாரி - தரம் I

**தகைமைகள்:**

i. பல் மருத்துவ அதிகாரியாக செயற்படுவதற்காக இலங்கை மருத்துவ சபையின் (SLMC) செல்லுபடியாகும் முழுப்பதிவுடைய பல் மருத்துவ அதிகாரி

அத்துடன்

ii. சுகாதார அமைச்சின் கீழுள்ள நிறுவனமொன்றில் அல்லது இலங்கை சுகாதார அமைச்சின் தனியார் சுகாதார சேவைகள் ஒழுங்குபடுத்தல் சபையின் “தனியார் வைத்தியசாலைகள், தாதியர் இல்லங்கள், மற்றும் மகப்பேற்று இல்லங்கள் ” என்ற வகுதிக்குள் அடங்கும் பதிவுசெய்யப்பட்ட வைத்தியசாலைகளில் தரம் IIமருத்துவ அதிகாரியாக குறைந்தது ஒன்பது (09) வருடகால அனுபவம்

அத்துடன்

iii. இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் 2014.10.11 ஆந் திகதிய 1883/17 ஆம் இலக்கம் கொண்ட அதிவிசேட வர்த்தமானியில் இணைப்பு II இல் குறிப்பிடப்பட்ட ஏற்றுக்கொள்ளப்பட்ட பட்டப்பின் படிப்பு தகைமை

அத்துடன்

iv. இலங்கை மருத்துவ சபையின் (SLMC) நன்னடத்தை தகுதிச் சான்றிதழ்

**வயதெல்லை:**
25 வயதுக்குக் குறையாமலும் 45 வயதுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.

**சம்பள அளவுத்திட்டம்**: MO 1-1 (ரூபா 58,675 - 3 x 1,375 - 7x 1,385 – 2 x 1,910 – 10 x 2,270 - ரூபா 99,015)

*தரம் I பல்வைத்திய நிபுணர்கள் MO 1-1 ரூபா 78,585.00 இன் 14 ஆம் படி நிலையில் வைக்கப்படுவர்.

## 4. வைத்திய அதிகாரி - தரம் II

**தகைமைகள்:**

i. மருத்துவ அதிகாரியாக செயற்படுவதன் பொருட்டு இலங்கை மருத்துவ சபையின் (SLMC) செல்லுபடியாகும் முழுப்பதிவுடைய மருத்துவ அதிகாரியாக இருத்தல்

அத்துடன்

ii. சுகாதார அமைச்சின் கீழுள்ள நிறுவனமொன்றில் அல்லது இலங்கை சுகாதார அமைச்சின் தனியார் சுகாதார சேவைகள் ஒழுங்குபடுத்தல் சபையின் “ தனியார் வைத்தியசாலைகள், தாதியர் இல்லங்கள், மற்றும் மகப்பேற்று இல்லங்கள் ” என்ற வகுதிக்குள் அடங்கும் பதிவுசெய்யப்பட்ட வைத்தியசாலைகளில் மருத்துவ அதிகாரியாக குறைந்தது இரு (02) வருடகால அனுபவம்

அத்துடன்

iii. இலங்கை மருத்துவ சபையின் (SLMC) நன்னடத்தை தகுதிச் சான்றிதழ்

**வயதெல்லை:** 25 வயதுக்குக் குறையாமலும் 45 வயதுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.

**சம்பள அளவுத்திட்டம்**: MO 1-1 (ரூபா 58,675 - 3 x 1,375 - 7x 1385 – 2 x 1,910 – 10 x 2,270 - ரூபா 99,015.00)

* தரம் II வைத்திய அதிகாரிகள் MO 1-1 ரூபா 64,185.00 இன் 5 ஆம் படி நிலையில் வைக்கப்படுவர்.

## 5. பல்வைத்திய அதிகாரி - தரம் II

**தகைமைகள்:**

i. பல் மருத்துவ அதிகாரியாக செயற்படுவதற்காக இலங்கை மருத்துவ சபையின் (SLMC) செல்லுபடியாகும் முழுப்பதிவுடைய பல் மருத்துவ அதிகாரி

அத்துடன்

ii. இலங்கை மருத்துவ சபையின் (SLMC) நன்னடத்தை தகுதிச் சான்றிதழ்

**வயதெல்லை:** 25 வயதுக்குக் குறையாமலும் 45 வயதுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.

**சம்பள அளவுத்திட்டம்** : MO 1-1 (ரூபா 58,675 - 3 x 1,375 - 7x 1,385 – 2 x 1,910 – 10 x 2,270 - ரூபா 99,015.00)

* தரம் IIபல்வைத்திய அதிகாரிகள் MO 1-1 ரூபா 58,675.00 இன் 1ஆம் படி நிலையில் வைக்கப்படுவர்.

## 6. வைத்திய அதிகாரி - ஆரம்ப தரம்

**தகைமைகள்:**

i. மருத்துவ அதிகாரியாக செயற்படுவதற்காக இலங்கை மருத்துவ சபையின் (SLMC) செல்லுபடியாகும் முழுப்பதிவுடைய மருத்துவ அதிகாரி

அத்துடன்

ii. இலங்கை மருத்துவ சபையின் (SLMC) நன்னடத்தை தகுதிச் சான்றிதழ்

**வயதெல்லை:** 25 வயதுக்குக் குறையாமலும் 45 வயதுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.

**சம்பள அளவுத்திட்டம்** : MO 1-1 (ரூபா 58,675 - 3 x 1,375 - 7x 1,385 – 2 x 1,910 – 10 x 2,270 - ரூபா 99,015.00)

* ஆரம்பத்தரவைத்திய அதிகாரிகள் MO 1-1 ரூபா 60,050.00 இன் 2 ஆம் படி நிலையில் வைக்கப்படுவர்.

## 7. துணை மருத்துவ சேவை - விசேட தரம்

- கதிரியக்கவியலாளர் (நோயறிதல்)
- கதிரியக்கவியலாளர் (சிகிச்சை)
- ஆய்வுகூடத் தொழில்நுட்பவியலாளர்
- உடற்பயிற்சி சிகிச்சையாளர்
- மருந்தாளர்
- கண்தொழில்நுட்ப வல்லுனர்

**தகைமைகள்:**

i. தரம் I சேவை வகுதிக்குள் ஆகக் குறைந்தது பத்து (10) வருட திருப்திகரமான சேவைக்காலத்தைப் பூர்த்தி செய்திருத்தல்.

அத்துடன்

ii. சுகாதார அமைச்சின் கீழ் பணியாற்றியிருப்பின், அனைத்து வினைத்திறன்காண் பரீட்சைகளிலும் சித்தி எய்தியிருப்பதுடன் பத்து (10) சம்பள ஏற்றங்களை பெற்றிருத்தல் வேண்டும்.

**வயதெல்லை:** 22 வயதுக்குக் குறையாமலும் 55 வயதுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.

**சம்பள அளவுத்திட்டம்** : MT 8 (ரூபா 50,970 – 10 x 1,385 – 8 x 1,910 – ரூபா 80,100.00 )

* விசேட தர துணைமருத்துவர்கள் MT 8 - ரூபா 53,740.00 இன் 3 ஆம் படிநிலையில் அமர்த்தப்படுவர்.

### 8. செவிலி - தாதிய உத்தியோகத்தர் விசேட தரம்

**தகைமைகள்:**

i. விசேட தரமுடைய தாதிய உத்தியோகத்தர்களாக இருத்தல் வேண்டும்.

அத்துடன்

ii. வார்ட் மேற்பார்வையும் முகாமைத்துவமும்/போதித்தலும் மேற்பார்வையும்/பொதுச் சுகாதார தாதியல் மற்றும் குடும்பநலம்/உளச்சிகிச்சை அடங்கலாக தாதியல் கற்கைகளுக்கான தேசிய நிறுவகத்தினால்/அடிப்படை தாதியல் பின்படிப்புப் பாடசாலையால் நடாத்தப்படும் 1 1/2 வருட டிப்ளோமாவைப் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும் அத்துடன் தரம் I தாதிய உத்தியோகத்தராக (வைத்தியாசாலை சேவை, கல்வி, பொதுச்சுகாதாரம்) 05 வருட காலம் சேவையாற்றிருத்தல் வேண்டும்.

அத்துடன்

iii. 3 ஆவது வினைத்திறன்காண் பரீட்சையில் சித்தியடைந்திருத்தல்

அத்துடன்

iv. அனைத்து சம்பள ஏற்றங்களையும் பெற்றிருத்தல் அத்துடன் தொடர்ச்சியான 05 வருட அண்மித்த காலப்பகுதியில் திருப்திகரமாக சேவையாற்றியிருத்தல்

அத்துடன்

v. அங்கீகரிக்கப்பட்ட வினையாற்றுகை நடவடிக்கை முறைக்கு ஏற்ப பதவியுயர்வுக்கு முன்னரான 05 வருடகாலத்தில் திருப்திகரமாக வினையாற்றுகை செய்திருத்தல்.

**வயதெல்லை:** 25 வயதுக்குக் குறையாமலும் 55 வயதுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.

**சம்பள அளவுத்திட்டம்:** MT - 8 ரூபா (50,970.00 – 10 x 1,385 – 8 x 1,910 – ரூபா 80,100.00)

* செவிலிகள் (விசேட தரம்) MT - 8 ரூபா – 55,125 இன் 4 ஆம் படிநிலையில் வைக்கப்படுவர்.

### 9. தாதிய சகோதரி

**தகைமைகள்:**

i. தரம் 1 இனைச் சேர்ந்த தாதிய உத்தியோகத்தராக இருத்தல் வேண்டும்.

அத்துடன்

ii. வார்ட் மேற்பார்வையும் முகாமைத்துவமும்/போதித்தலும் மேற்பார்வையும்/ பொதுச் சுகாதார தாதியல் மற்றும் குடும்பநலம்/தாதியல் உளச் சுகாதாரம் அடங்கலாக தேசிய தாதியல் பயிற்சிப் பாடசாலையால் அல்லது பின்படிப்பு ஆரம்ப தாதியல் பயிற்சிப் பாடசாலையால் நடாத்தப்படும் 1 1/2 வருட டிப்ளோமாவைப் பூர்த்தி செய்துள்ள தாதி உத்தியோகத்தராக இருத்தல் வேண்டும்.

அத்துடன்

iii. 2 ஆவது வினைத்திறன்காண் பரீட்சையில் சித்தியடைந்திருத்தல்

அத்துடன்

iv. அனைத்து சம்பள ஏற்றங்களையும் பெற்றிருத்தல் அத்துடன் தொடர்ச்சியான அண்மித்த 05 வருட காலப்பகுதியில் திருப்திகரமாக சேவையாற்றியிருத்தல்

அத்துடன்

v. அங்கீகரிக்கப்பட்ட வினையாற்றுகை நடவடிக்கை முறைக்கு ஏற்ப பதவியுயர்வுக்கு முன்னரான 05 வருடகாலத்தில் திருப்திகரமாக வினையாற்றுகை செய்திருத்தல்.

**வயதெல்லை:** 25 வயதுக்குக் குறையாமலும் 55 வயதுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.

***சம்பள அளவுத்திட்டம்*** : MT - 7 ரூபா 33,295 – 10 x 445 – 11 x 660 – 10 x 730 – 5x 750 – ரூபா 59,805 )

* செவிலிகள் (விசேட தரம்) MT - 7 ரூபா – 45,735.00 இன் 23 ஆம் படிநிலையில் வைக்கப்படுவர்.

### *10. தாதிய உத்தியோகத்தர்*

***தகைமைகள்:***

i. தாதியல்BSc பட்டத்தைப் பெற்றிருத்தல் அல்லது அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றிலிருந்து அல்லது சுகாதார அமைச்சிலிருந்து தாதியல் டிப்ளோமாவைப் பெற்றிருத்தல்.

அத்துடன்

ii. க.பொ.த (உ./ த.) உயிரியல் அல்லது கணிதம் அல்லது விவசாய பாடத்துறையில் (பொது அறிவு பரீட்சை உள்ளடங்காமல்) அனைத்துப் பாடங்களிலும் ஒரே அமர்வில் சித்தி எய்தியிருத்தல் அல்லது குறிப்பிட்ட துறைகளில் பழைய பாடத்திட்டத்தில் ஒரே அமர்வில் 03 பாடங்களில் சித்தி எய்தியிருத்தல்

அத்துடன்

iii. க.பொ.த (சா/த) பரீட்சையில் இரு அமர்வுக்கு மேற்படாமல் கணிதம்,விஞ்ஞானம், ஆங்கிலம், சிங்களம்/தமிழ்மொழி ஆகிய பாடங்களில் நான்கு (04) திறமைச்சித்திகள் உள்ளடங்கலாக (06) பாடங்களில் சித்திபெற்றிருத்தல்.

**வயதெல்லை:** 22 வயதுக்குக் குறையாமலும் 45 வயதுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.

***சம்பள அளவுத்திட்டம்***: MT - 7 ரூபா 33,295.00 – 10 x 445 – 11 x 660 – 10 x 730 – 5x 750 – ரூபா 59,805.00)

* தாதி உத்தியோகத்தர் MT - 7 , 1 ஆம் படிநிலையில் வைக்கப்படுவர்.

### *11. மருந்தாளர்*

***தகைமைகள்:***

i. க.பொ.த (சா/த) பரீட்சையில் ஒரே அமர்வில் கணிதம்,விஞ்ஞானம், ஆங்கிலம், சிங்களம்/தமிழ் ஆகிய மொழி பாடங்களுடன்,(04) திறமைச்சித்திகள் உள்ளடங்கலாக இரு அமர்வுகளுக்கு மேற்படாதவாறு ஆங்கிலம் உட்பட ஆறு (06) பாடங்களில் சித்திபெற்றிருத்தல்.

அத்துடன்

ii. க.பொ.த (உ/த) இரசாயனவியல் பாடத்தில் திறமைச்சித்தியுடன் இணைந்த கணிதம், உயிரியல், பௌதீகவியல், அல்லது விவசாயம் ஆகிய ஏதேனும் இரு பாடங்கள் அடங்கலாக மூன்று பாடங்களில் சித்தி எய்திருத்தல்.

அத்துடன்

iii. a. பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் பட்டம் வழங்கும் நிறுவனமொன்றாக அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக் கழகமொன்றிலிருந்து அல்லது நிறுவகம் ஒன்றிலிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட மருந்தியல்/ விஞ்ஞானம் (மருந்தியல்) பட்டம்

அல்லது

b. சுகாதார அமைச்சால் நடாத்தப்படும் மருந்தாக்கவியல் தொடர்பான முழு நேர இரு வருட டிப்ளோமா பாடநெறியைப் பூர்த்தி செய்திருத்தல்.

அத்துடன்

iv. மருந்தாளராக பணியாற்றுவதற்காக இலங்கை மருத்துவச் சபையின் (SLMC) பதிவைப் பெற்றிருத்தல்.

**வயதெல்லை:** 22 வயதுக்குக் குறையாமலும் 45 வயதுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.

**சம்பள அளவுத்திட்டம்** : MT – 6 ரூபா 32,850 – 10 x 445 – 11 x 660 – 10 x 730 – 10x 750 – ரூபா 59,360.00)

* மருந்தாளர்கள் MT 6 , 1 ஆம் சம்பளப் படிநிலையில் அமர்த்தப்படுவார்கள்.

### 12. கதிரியக்கவியலாளர் (சிகிச்சை)

**தகைமைகள்:**

i. க.பொ.த (சா/த) பரீட்சையில் ஒரே அமர்வில் கணிதம், விஞ்ஞானம், சிங்களம்/தமிழ் ஆகிய மொழி பாடங்கள் அடங்கலாக நான்கு (04) திறமைச் சித்திகளுடன் இரு தடவைக்கு மேற்படாத அமர்வில் ஆங்கிலம் உட்பட (06) பாடங்களில் சித்திபெற்றிருத்தல்.

அத்துடன்

ii. க.பொ.த (உ/த) பௌதீகவியல் பாடத்தில் திறமைச்சித்தியுடன் இணைந்த கணிதம், உயிரியல், இரசாயனவியல் அல்லது விவசாயம் ஆகிய ஏதேனும் இரு பாடங்கள் அடங்கலாக மூன்று பாடங்களில் சித்தி எய்திருத்தல்.

அத்துடன்

iii. a. பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் பட்டம் வழங்குவதற்காக ஏற்றுக்கொள்ளப்பட்ட பல்கலைக்கழகம் அல்லது நிறுவகம் ஒன்றிலிருந்து கதிரியக்க சிகிச்சை/கதிரியக்கவியல் பட்டமொன்றைப் பெற்றிருத்தல்.

அல்லது

b. சுகாதார அமைச்சால் நடாத்தப்படும் கதிரியக்கம் தொடர்பான இரு வருட டிப்ளோமா பாடநெறியைப் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.

iv. a. கதிரியக்கவியலாளராக பணியாற்றுவதற்கு இலங்கை மருத்துவச் சபையின் (SLMC) பதிவைப் பெற்றிருத்தல் வேண்டும்.

b. விண்ணப்பதாரி வெளிநாட்டுப் பட்டத்தைப் பெற்றிருந்தால் இலங்கையில் கதிரியக்கவியலாளராக பணியாற்றுவதற்கு இலங்கை மருத்துவச் சபையின் பதிவைப் பெற்றிருத்தல் வேண்டும்.

**வயதெல்லை:** 22 வயதுக்குக் குறையாமலும் 45 வயதுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.

**சம்பள அளவுத்திட்டம்** : MT – 6 ரூபா 32,850 – 10 x 445 – 11 x 660 – 10 x 730 – 10x 750 – ரூபா 59,360.00 )

* கதிரியக்கவியலாளர் MT 6 , 1 ஆம் சம்பளப் படிநிலையில் அமர்த்தப்படுவர்.

### 13. தொழில்முறை தெரபிஸ்ட்

**தகைமைகள்:**

i. க.பொ.த (சா/த) பரீட்சையில் ஒரே அமர்வில் கணிதம், விஞ்ஞானம், சிங்களம்/தமிழ் மொழி ஆகிய பாடங்களுடன் நான்கு (04) திறமைச் சித்திகள் உள்ளடங்கலாக இரு தடவைக்கு மேற்படாத அமர்வில் ஆங்கிலம் அடங்கலாக (06) பாடங்களில் சித்திபெற்றிருத்தல்.

அத்துடன்

ii. க.பொ.த (உ/த) பௌதீகவியல் பாடத்தில் திறமைச்சித்தியுடன் இணைந்த கணிதம், உயிரியல், இரசாயனவியல் அல்லது விவசாயம் ஆகிய ஏதேனும் இரு பாடங்கள் அடங்கலாக மூன்று பாடங்களில் சித்தி எய்திருத்தல்

அத்துடன்

iii. a. பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் பட்டம் வழங்குவதற்காக ஏற்றுக்கொள்ளப்பட்ட பல்கலைக்கழகம் அல்லது நிறுவகம் ஒன்றிலிருந்து தொழில்முறை தெரபிஸ்ட் பட்டமொன்றைப் பெற்றிருத்தல்

அல்லது

b. சுகாதார அமைச்சால் நடாத்தப்படும் தொழில்முறை தெரபிஸ்ட் தொடர்பான முழு நேர இரு வருட டிப்ளோமா பாடநெறியைப் பூர்த்தி செய்திருத்தல்.

iv. a தொழில்முறை தெரபிஸ்ட் ஆக பணியாற்றுவதற்கு இலங்கை மருத்துவச் சபையின் (SLMC) பதிவைப் பெற்றிருத்தல் வேண்டும்.

b. விண்ணப்பதாரி வெளிநாட்டுப் பட்டத்தைப் பெற்றிருந்தால் இலங்கையில் கதிரியக்கவியலாளராக பணியாற்றுவதற்கு இலங்கை மருத்துவச் சபையின் பதிவைப் பெற்றிருத்தல் வேண்டும்.

**வயதெல்லை:** 22 வயதுக்குக் குறையாமலும் 45 வயதுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.

**சம்பள அளவுத்திட்டம்** : MT – 6 ரூபா 32,850.00 – 10 x 445 – 11 x 660 – 10 x 730 – 10x 750 – ரூபா 59,360 .00

* தொழில்முறை தெரபிஸ்ட் MT 6, 1 ஆம் சம்பளப் படிநிலையில் அமர்த்தப்படுவர்.

### 14. பல் சிகிச்சை தொழில்நுட்பவியலாளர்

**தகைமைகள்:**

i. க.பொ.த. (சா/த) பரீட்சையில் கணிதம், விஞ்ஞானம், சிங்களம்/தமிழ் மொழிப் பாடங்கள் அத்துடன் ஏனைய ஏதேனும் ஒரு பாடத்தில் திறமைச்சித்திகளுடன் ஆங்கிலம் உட்பட இரு தடவைக்கு மேற்படாத அமர்வில் (06) பாடங்களில் சித்திபெற்றிருத்தல்.

அத்துடன்

ii. க.பொ.த. (உ/த) விஞ்ஞானப் பிரிவில் இரசாயனவியல் பாடத்தில் திறமைச்சித்தியுடன் இணைந்த கணிதம், உயிரியல்,பௌதீகவியல் அல்லது விவசாயம் ஆகிய ஏதேனும் இரு பாடங்கள் அடங்கலாக மூன்று பாடங்களில் ஒரே அமர்வில் சித்தி எய்திருத்தல்

அத்துடன்

iii. பேராதெனிய பல்கலைக் கழகத்தின் பல் மருத்துவ பீடத்தினால் நடாத்தப்படும் பல் மருத்துவ தொழில்நுட்பவியலாளர் தொடர்பான முழு நேர இரு வருட டிப்ளோமா பாடநெறியைப் பூர்த்தி செய்திருத்தல்.

அத்துடன்

iv. இலங்கை மருத்துவச் சபையின் (SLMC) பதிவைப் பெற்றிருத்தல்.

**வயதெல்லை:** 22 வயதுக்குக் குறையாமலும் 45 வயதுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.

**சம்பள அளவுத்திட்டம்** : MT – 6 ரூபா 32,850.00 – 10 x 445 – 11 x 660 – 10 x 730 – 10x 750 – ரூபா 59,360

பல் மருத்துவ தொழில்நுட்பவியலாளர் MT 6 – ரூபா 32,850.00, 1 ஆம் சம்பளப் படிநிலையில் அமர்த்தப்படுவர்.

### 15. கண் மருத்துவ தொழில்நுட்பவியலாளர்

**தகைமைகள்:**

i. க.பொ.த. (சா./த.) பரீட்சையில் கணிதம், விஞ்ஞானம், சிங்களம்/ தமிழ் மொழி ஆகிய பாடங்கள் அத்துடன் ஏனைய ஏதேனும் ஒரு பாடத்தில் திறமைச் சித்திகளுடன் ஆங்கிலம் உட்பட இரு தடவைக்கு மேற்படாத அமர்வில் (06) பாடங்களில் சித்திபெற்றிருத்தல்.

அத்துடன்

ii. க.பொ.த. (உ./த.) பௌதீகவியல் பாடத்தில் திறமைச் சித்தியுடன் இணைந்த கணிதம், உயிரியல், இரசாயனவியல் அல்லது விவசாயம் ஆகிய ஏதேனும் இரு பாடங்கள் அடங்கலாக மூன்று பாடங்களில் ஒரே அமர்வில் சித்தி எய்தியிருத்தல் வேண்டும்.

அத்துடன்

iii. சுகாதார அமைச்சால் நடாத்தப்படும் கண் மருத்துவ தொழில்நுட்பவியலாளர் தொடர்பான முழு நேர இரு வருட டிப்ளோமா பாடநெறியைப் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.

அத்துடன்

iv. a. கண் மருத்துவ தொழில்நுட்பவியலாளராக இலங்கையில் பணியாற்றுவதற்காக இலங்கை மருத்துவச் சபையின் (SLMC) பதிவைப் பெற்றிருத்தல்வேண்டும்.

அல்லது

b. விண்ணப்பதாரி வெளிநாட்டு பட்டத்தைப் பெற்றிருப்பின் இலங்கையில் கண் தொழில்நுட்பவியலாளராக பணியாற்றுவதற்காக இலங்கை மருத்துவச் சபையின் பதிவைப் பெற்றிருத்தல் வேண்டும்.

**வயதெல்லை:** 22 வயதுக்குக் குறையாமலும் 45 வயதுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.

**சம்பள அளவுத்திட்டம்** : MT – 6 (ரூபா 32,850 – 10 x 445 – 11 x 660 – 10 x 730 – 10x 750 – ரூபா 59,360 )

பல் மருத்துவ தொழில்நுட்பவியலாளர் MT 6 , 1 ஆம் சம்பளப் படிநிலையில் அமர்த்தப்படுவர்.

### 16. கண்மருத்துவ உதவியாளர்

**தகைமைகள்:**

i. கண்மருத்துவ தொழில்நுட்பவியலாளராக சேவையில் நிரந்தரமாக்கப்பட்டிருத்தல்

அத்துடன்

ii. சேவைக்கு உரித்தான வினைத்திறன் காண் தடை தாண்டல் பரீட்சைகளில் சித்தியடைந்திருப்பதுடன் தரம் II ஐச் சேர்ந்தவராக அல்லது அதற்கு மேற்பட்ட தரமுடையவராக இருத்தல் வேண்டும். விண்ணப்ப முடிவுத் திகதியன்று திருப்திகரமாக ஐந்து (05) வருடகால சேவையாற்றியிருத்தல் வேண்டும்.

அத்துடன்

iii. இலங்கை தேசிய கண் வைத்தியசாலையால் நடாத்தப்படும் 06 மாதகாலப் பயிற்சியைப் பூர்த்தி செய்திருப்பதுடன் இறுதிப்பரீட்சையில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

அத்துடன்

iv. இலங்கை மருத்துவச் சபையின் (SLMC) பதிவைப் பெற்றிருத்தல்.

**வயதெல்லை:** 22 வயதுக்குக் குறையாமலும் 45 வயதுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.

**சம்பள அளவுத்திட்டம்** : MT – 6 (ரூபா 32,850 – 10 x 445 – 11 x 660 – 10 x 730 – 10x 750 – ரூபா 59,360 )
கண் மருத்துவ உதவியாளர் MT 6 , 1 ஆம் சம்பளப் படிநிலையில் அமர்த்தப்படுவர்.

### 17. பேச்சு சிகிச்சையாளர்

**தகைமைகள்:**

i. பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக் கழகமொன்றினால் அல்லது நிறுவனமொன்றால் வழங்கப்படும் பேச்சு சிகிச்சை தொடர்பில் முழு நேர இரு வருட டிப்ளோமா பாடநெறியைப் பூர்த்தி செய்திருத்தல்

**வயதெல்லை:** 22 வயதுக்குக் குறையாமலும் 45 வயதுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.

**சம்பள அளவுத்திட்டம்** : MT – 6 (ரூபா 32,850 – 10 x 445 – 11 x 660 – 10 x 730 – 10x 750 – ரூபா 59,360 )

*பேச்சு சிகிச்சையாளர் MT – 6 , 1ஆம் படிநிலையில் அமர்த்தப்படுவர்

### 18. பொதுச் சுகாதார பரிசோதகர்

**தகைமைகள்:**

i. க.பொ.த (சா/த) பரீட்சையில் கணிதம், விஞ்ஞானம், சிங்களம்/தமிழ் மொழி பாடங்கள் உட்பட ஏனைய ஏதேனும் ஒரு பாடத்தில் திறமைச்சித்தியுடன் இரு தடவைக்கு மேற்படாத அமர்வில் ஆங்கிலம் உட்பட் (06) பாடங்களில் சித்திபெற்றிருத்தல்.

அத்துடன்

ii. க.பொ.த (உ./த.) உயிரியல் அல்லது இணைந்த கணித பாடத்தில் திறமைச்சித்தியுடன் இரசாயனவியல்,

பௌதீகவியல் அல்லது விவசாயம் ஆகிய ஏதேனும் பாடமொன்று உள்ளடங்கலாக இரு பாடங்களில் ஒரே அமர்வில் சித்தி எய்திருத்தல்

அத்துடன்

iii. சுகாதார அமைச்சால் நடாத்தப்படும் பொதுச் சுகாதார பரிசோதகர்கள் டிப்ளோமா பாடநெறியைப் பூர்த்தி செய்திருத்தல் அத்துடன் பாடநெறிக்காலம் 1 ½ வருடங்களைக் கொண்டிருத்தல் வேண்டும்.

அத்துடன்

iv. ஆண்களுக்கு மாத்திரம் விண்ணப்பிக்க முடியும்.

**வயதெல்லை:** 22 வயதுக்குக் குறையாமலும் 55 வயதுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.

***சம்பள அளவுத்திட்டம்*** : MT – 5 (ரூபா 32,405 – 10 x 445 – 11 x 660 – 10 x 730 – 10x 750 – ரூபா 58,915 )

பொதுச் சுகாதார பரிசோதகர்கள் MT 5, 1 ஆம் சம்பளப் படிநிலையில் அமர்த்தப்படுவர்.

### 19. குடும்ப நல சுகாதார உத்தியோகத்தர்

**தகைமைகள்:**

i. க.பொ.த. (சா./த.) பரீட்சையில் கணிதம், விஞ்ஞானம், சிங்களம்/தமிழ் மொழி ஆகிய பாடங்களுடன் ஏனைய ஏதேனும் ஒரு பாடம் அடங்கலாக திறமைச்சித்திகளுடன் இரு தடவைக்கு மேற்படாத அமர்வில் ஆங்கிலம் உட்பட (06) பாடங்களில் சித்திபெற்றிருத்தல்.

அத்துடன்

ii. க.பொ.த. (உ./த.) உயிரியல்,இரசாயனவியல், பௌதீகவியல், இரசாயனவியல் அல்லது விவசாயம் ஆகிய ஏதேனும் மூன்று பாடங்களில் ஒரே அமர்வில் சித்தி எய்திருத்தல்

அத்துடன்

iii. சுகாதார அமைச்சால் நடாத்தப்படும் 1 ½ வருடங்களைக் கொண்ட குடும்ப நல சுகாதார முழுநேர டிப்ளோமா பாடநெறியைப் பூர்த்தி செய்திருத்தல்

அத்துடன்

iv. பெண்களுக்கு மாத்திரம் விண்ணப்பிக்க முடியும்.

**வயதெல்லை:** 22 வயதுக்குக் குறையாமலும் 55 வயதுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.

***சம்பள அளவுத்திட்டம்*** : MT – 5 (ரூபா 32,405 – 10 x 445 – 11 x 660 – 10 x 730 – 10x 750 – ரூபா 58,915 )

*குடும்ப நல சுகாதார உத்தியோகத்தர்கள் MT 5, 1 ஆம் சம்பளப் படிநிலையில் அமர்த்தப்படுவர்.

### 20. முகாமைத்துவ உதவியாளர் (தொழில்நுட்பம் - சாராத)

**தகைமைகள்:**

i. க.பொ.த. (சா./த.) பரீட்சையில் கணிதம், சிங்களம்/தமிழ் மொழி மற்றும் ஆங்கிலம் உட்பட நான்கு (04) திறமைச்சித்திகளுடன் இரு தடவைக்கு மேற்படாத அமர்வில் (06) பாடங்களில் சித்திபெற்றிருத்தல்.

அத்துடன்

ii. க.பொ.த. (உ./த.) மூன்று பாடங்களில் (பொது அறிவுப் பரீட்சை உள்ளடங்காமல்) ஒரே அமர்வில் சித்தி எய்திருத்தல் வேண்டும்.

**மேலதிக தகைமைகள் :** ஆங்கிலம் பேசுவதற்கும் எழுதுவதற்குமான இயலுமை அத்துடன் நேர்முகப் பரீட்சையில் தமிழ் மொழி விசேட தகுதியாக கருதப்படும்.

**வயதெல்லை:** 18 வயதுக்கு குறையாமலும் 45 வயதுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.

***சம்பள அளவுத் திட்டம்***: MA 1-2 (ரூபா 27,910 – 10x300 – 7x350 – 12x600 – 12x710 – ரூபா 49,080)

*முகாமைத்துவ உதவியாளர் (தொழில்நுட்பம் சாராத) MA 1-2 , 1 ஆம் படி நிலையில் வைக்கப்படுவார்கள்.

## 21. சாரதி

**தகைமைகள்:**

i. க.பொ.த (சா./த.) பரீட்சையில் இரு அமர்வுகளுக்கு மேற்படாதவாறு இரண்டு (02) திறமைச்சித்திகள் உட்பட ஆறு (06) பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

**தொழிற் தகைமைகள்:**

i. மோட்டார் போக்குவரத்து ஆணையாளர் நாயகத்தினால் வழங்கப்பட்ட பாரவூர்திகளுக்குரித்தான சாரதி அனுமதிப்பத்திரத்தைக் கொண்டிருத்தல் வேண்டும். (பழைய திட்டத்திற்கமைய "A" வாகன வகுதிக்குள்ளான "A" வகுப்பு சாரதி அனுமதிப்பத்திரம் அல்லது புதிய நடைமுறைக்கமைய "D" வகுப்பு சாரதி அனுமதிப்பத்திரத்தைக் கொண்டிருத்தல் வேண்டும்)

**அனுபவம்**

i. சாரதி அனுமதிப்பத்திரம் பெற்றதன் பின்னர் வாகனம் ஓட்டுவதில் ஆகக்குறைந்தது மூன்று வருடகால அனுபவத்தைப் பெற்றிருத்தல்.

**உடற்தகைமைகள்:**

i. பகல் வேளையிலோ இரவு வேளையிலோ எந்ததொரு சந்தர்ப்பத்திலும் பணியாற்றுவதற்குரித்தான உடல் உள ஆரோக்கியத்தைக் கொண்டிருத்தல் வேண்டும் அத்துடன் தேவைப்பட்டால் 24 மணி நேர கடமை மாற்றத்துக்கேற்ப பணியாற்ற இயலுமாயிருத்தல் வேண்டும்.
ii. ஆகக்குறைந்தது 5 அடி 2 ½ அங்குல உயரம் உடையதாக இருத்தல் வேண்டும்.

**பார்வைத் திறன்**

i. சாரதிகளுக்காக கண் மருத்துவ நிபுணர்கள் சங்கத்தினால் அங்கீகரிக்கப்பட்ட பார்வைத் திறன் நியமத்துக்கேற்ப இரு கண்களினதும் 6/9 பார்வைத் திறன்களைக் கொண்டிருத்தல் வேண்டும்.

ii. கண் மருத்துவ நிபுணர்கள் சங்கத்தினால் அங்கீகரிக்கப்பட்ட நியமங்களுக்கேற்ப நிறக்குருடு அற்றதாக இருத்தல் வேண்டும்.

**வயதெல்லை:** 18 வயதுக்கு குறையாமலும் 45 வயதுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.

**சம்பள அளவுத் திட்டம்:** PL 3 (ரூபா 26,290 – 10x270 – 10x300 – 10x330 – 12x350 – ரூபா 39,490)

*சாரதிகள் PL 3, 1 ஆம் படி நிலையில் வைக்கப்படுவார்கள்.

## 22. சுகாதார பராமரிப்பாளர்

**தகைமைகள்:**

i. க.பொ.த (சா./த.) பரீட்சையில் இரு அமர்வுகளுக்கு மேற்படாதவாறு மூன்று (03) திறமைச் சித்திகள் உள்ளடங்கலாக ஆறு பாடங்களில் (06) சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

**வயதெல்லை**

i. 18 வயதுக்கு குறையாமலும் 45 வயதுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.

**சம்பள அளவுத்திட்டம்:** PL 2 (ரூபா 25,750 – 10x270 – 10 x 300 – 10 x 330 – 12 x 350 – ரூபா 38,950)

*சுகாதார உதவியாளர்கள் PL – 2 இன் 1 ஆம் சம்பள படிநிலையில் அமர்த்தப்படுவார்கள்.

**பொது நிபந்தனைகள்:**

i. இலங்கைப் பிரஜையாக இருத்தல் வேண்டும்.

ii. பல்கலைக்கழக நிர்வாகத்தினால் தீர்மானிக்கப்படும் எந்தவொரு பிரதேசத்திலும் அத்துடன் ஜெனரல் ஸ்ரீமத் ஜோன் கொத்தலாவல பாதுகாப்புப் பல்கலைக்கழக வைத்தியசாலை பதவிக்குரித்தான கடமைகளை புரியும் பொருட்டு உடல் உள வலிமையைக் கொண்டிருத்தல் வேண்டும்.

iii. நல்லொழுக்கமுள்ளவராக இருத்தல் வேண்டும்.

iv. விண்ணப்ப முடிவுத் திகதியன்று அல்லது அதற்கு முன்னர் அனைத்துத் தகைமைகளையும் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.

v. இந்தப் பதவிகள் நிரந்தரமானவை என்பதுடன் ஆரம்ப தர – மருத்துவ துறை சாராத உத்தியோகத்தர்கள் மூன்று (03) வருட தகுதிகாண் காலத்திற்கு உட்படுதல் வேண்டும் என்பதுடன், ஏனைய விசேட தரப்பதவிகள் மற்றும் அரசாங்க சேவையிலுள்ள மருத்துவ நிபுணர், மருத்துவ அதிகாரி தரம் I, பல்மருத்துவ அதிகாரி தரம் I, மருத்துவ அதிகாரி தரம் II, பல்மருத்துவ அதிகாரி தரம் II ஆகியோர் ஒரு வருட தகுதிகாண் காலத்திற்கு உட்படுதல் வேண்டும்.

vi. வைத்தியபீடத்தின் பீடாதிபதி மற்றும் இணைந்த சுகாதார பீடத்தின் பீடாதிபதி ஆகியோர்களின் மேற்பார்வையின் கீழ் வைத்தியபீட மற்றும் இணைந்த சுகாதார பீட மாணவர்களுக்கு கற்பிப்பதற்கும் பயிற்சியளிப்பதற்கும் மருத்துவ நிபுணர்கள் தேவைப்படுத்தப்படலாம்.

vii. ஊழியர் சேமலாப நிதிக்கு (EPF) ஊழியர் 10 %பங்களிப்புச் செய்தல் வேண்டும் என்பதுடன் 15 % ஊழியர் சேமலாப நிதியும் (EPF), 10 % ஊழியர் நம்பிக்கை நிதியும் (ETF) பல்கலைக் கழகத்தினால் பங்களிப்புச் செய்யப்படும்.

viii. சரியாக பூர்த்திசெய்யப்பட்ட விண்ணப்பத்துடன் சம்பந்தப்பட்ட சான்றிதழ்களின் பிரதிகள் உறுதிப்படுத்தப்பட்டு இணைக்கப்பட்டு " நிறைவேற்றுப் பணிப்பாளர், ஜெனரல் சேர் ஜோன் கொத்தலாவல பாதுகாப்புப் பல்கலைக்கழக வைத்தியசாலை, வேரஹெர" என்ற முகவரிக்கு 2021.03.08 இற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு பதிவுத்தபாலில் அனுப்பி வைக்கப்படுதல் வேண்டும். விண்ணப்பித்த பதவியை கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் குறிப்பிடுதல் வேண்டும்.

ix. எதிர்பார்க்கும் விண்ணப்பதாரர்களை தேர்ந்தெடுத்து பட்டியலிடுவதற்கான உரிமையை ஜெனரல் ஸ்ரீமத் ஜோன் கொத்தலாவல பாதுகாப்புப் பல்கலைக்கழகம் கொண்டுள்ளது.

x. சரியாகப் பூரணப்படுத்தப்படாத அல்லது காலதாமதமாகி அனுப்பி வைக்கப்படும் விண்ணப்பங்களும் குறிப்பிடப்பட்டதற்கிணங்க தயாரித்து அனுப்பாத விண்ணப்பங்களும் நிராகரிக்கப்படும்.

xi. விண்ணப்பம் மற்றும் ஏனைய தகவல்களை கொபாப வலைத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்து கொள்ளலாம்.

ஜெனரல் கமல் குணரத்ன (ஓய்வுபெற்ற)
டப்டப்வீ ஆர்டப்பீ ஆர்எஸ்பீ யூஎஸ்பீ என்டீசீ பீஎஸ்சீ எம்பில்
செயலாளர்
பாதுகாப்பு அமைச்சு.

2-723

# பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும்

## நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சு

## அரசாங்க தொழிற்சாலைகள் திணைக்களத்தின் முகாமைத்துவ உதவியாளர் - தொழில்நுட்பம் சாரா - வகுதி 2 அலுவலர் தொகுதியைச் சேர்ந்த பதவிகளுக்கு ஆட்சேர்ப்பு செய்வதற்கான மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சை - 2020 (2021)

அரசாங்க தொழிற்சாலைகள் திணைக்களத்தில் பின்வரும் பதவிகளில் காணப்படுகின்ற வெற்றிடங்களை நிரப்புவதற்கு பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தினால் 2021, மே மாதம் கொழும்பில் நடாத்தப்படவுள்ள மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சைக்கு இலங்கைப் பிரசைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. குறித்த தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ள அபேட்சகர்கள் இம்மூன்று பதவிகளுக்கும் விண்ணப்பிக்கலாம்.

| பதவி | வெற்றிடங்களின் எண்ணிக்கை |
|---|---|
| வேலைத்தள உதவியாளர் | 04 |
| வேலைத்தள இலிகிதர் | 02 |
| நேர இலிகிதர் | 04 |

1. **சம்பளம் :**

1.1 சம்பளக் குறியீட்டு இல. : MN 1-2016

1.2 சம்பள அளவுத்திட்டம் : ரூபா 27,140 - 10 × 300 - 11 ×350 - 10 × 495 - 10 × 660 - ரூபா 45,540.00.

2. **ஆட்சேர்ப்புச் செய்யும் தரம் : தரம்** III

3. **கல்வித் தகைமைகள் :** ஆரம்ப தரத்தைச் சேர்ந்த அரசாங்க தொழிற்சாலைகள் திணைக்களத்தின் நிபுணத்துவம்சாரா, பகுதியளவிலான நிபுணத்துவத்தைக் கொண்ட மற்றும் நிபுணத்துவத் தரங்களில் சேவையாற்றுதல் வேண்டும்.

மற்றும்

கல்விப் பொதுத் தராதரப் பத்திர (சாதாரண தர) ப் பரீட்சையில் ஒரே அமர்வில் மொழி மற்றும் கணிதம் ஆகிய இரண்டு பாடங்களுக்கும் (02) திறமைச் சித்தியுடன் ஒரே அமர்வில் ஆறு (06) பாடங்களில் சித்தியடைந்திருத்தல்.

4. **தொழில்சார் தகைமைகள் :** கணினிப் பிரயோகம்/ தட்டச்சு பற்றிய தொழில் மற்றும் தொழில் கல்வி ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட, 03 மாதங்களுக்குக் குறையாத காலப்பகுதிக்கான பாடநெறியை கற்றிருத்தல்.

5. **உடல்சார் தகைமைகள் :** ஏற்புடையதன்று.

6. **வேறு தகைமைகள் :**

(i) பதவிக்கு ஆட்சேர்ப்புச் செய்யத் தேவையான சகல தகைமைகளையும் பூர்த்தி செய்ய வேண்டும் என்று விண்ணப்பம் கோரப்படுகின்ற அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள திகதியன்று சகல வகையிலும் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.

(ii) விண்ணப்பதாரிகள் அரசாங்க தொழிற்சாலையில் நிரந்தர நியமனமொன்றை வகித்தல் வேண்டும் என்பதுடன் அப்பதவியில் நிரந்தரமாக்கப்பட்டவராக இருத்தல் வேண்டும்.

(iii) உரிய திகதிக்கு முன்னரான நிரந்தர நியமனம் ஒன்றில் ஆகக் குறைந்தது 05 வருடகாலம் தொடர்ச்சியான திருப்திகரமான சேவைக் காலத்தைப் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும் என்பதுடன், அது பற்றி திணைக்களத் தலைவர் சான்றுப்படுத்தியிருத்தல் வேண்டும்.

7. **ஆட்சேர்ப்பு ஒழுங்குமுறை:** எழுத்துமூலப் பரீட்சையில் விண்ணப்பதாரர்கள் பெற்றுக்கொண்ட புள்ளிகளின் தேர்ச்சி ஒழுங்குவரிசை மற்றும் விண்ணப்பதாரிகளின் விருப்பத்தையும் கவனத்தில் கொண்டு மேற்படி பதவிகளுக்கு ஆட்சேர்ப்புச் செய்யப்படுவார்கள்.

8.

8.1 **எழுத்துமூலப் பரீட்சை :**

| | பாடம் | நேரம் | உச்ச புள்ளி | சித்தியடைய பெற வேண்டிய புள்ளி |
|---|---|---|---|---|
| 1 | மொழித் தேர்ச்சியும், புரிந்துணர்வும் | 01 மணித்தியாலம் | 100 | 40 |
| 2 | கூட்டல் உள்ளடங்களாக கணிதம் மற்றும் நுண்ணறிவுப் பரீட்சை | 01 மணித்தியாலம் | 100 | 40 |

8.2 **எழுத்துமூலப் பரீட்சையின் பாடவிதானம் :**

| வினாப்பத்திரத்தின் பெயர் | பாடவிதானம் |
|---|---|
| மொழித்தேர்ச்சியும், புரிந்துணர்வும் | வேட்பாளரின் கருத்து வெளியிடல், புரிந்துணர்வு, எழுத்துப்பிழையின்றி எழுதுதல், பொதுவான இலக்கணப் பயன்பாடு மற்றும் பொழிப்புரையாக்குவது பற்றிய வினாக்களைக் கொண்டது. சகல வினாக்களுக்கும் விடையளித்தல் வேண்டும். |
| கூட்டல் உள்ளிட்ட கணிதம் மற்றும் நுண்ணறிவுப் பரீட்சை | வேட்பாளரின் புள்ளிவிபரவியல் திறன், தர்க்கரீதியான திறன், பொது அறிவு, தீர்மானம் மேற்கொள்ளும் சக்தியை நிர்ணயிப்பதற்கான வினாக்களைக் கொண்டது. சகல வினாக்களுக்கும் விடையளித்தல் வேண்டும். |

8.3 **வயது**: ஏற்புடையதல்ல.

8.4 **சாதாரண நேர்முகப் பரீட்சை** : புள்ளி வழங்கப்பட மாட்டாது என்பதுடன் தகைமைகளை பரிசீலிப்பது மாத்திரம் இடம்பெறும்.

9. மேலுள்ள தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ள விண்ண்ணப்பதாரிகள் இத்துடன் இணைக்கப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப்படிவத்துக்கு அமைவாக, A4 அளவான கடதாசியின் இரு பக்கங்களையும் பயன்படுத்தி விண்ணப்பப்படிவத்தின் இலக்கம் 01 முதல் 08 வரையான தலைப்புக்களை முதலாவது பக்கத்திலும், இலக்கம் 09 முதல் 12 வரையான தலைப்புக்களை இரண்டாம் பக்கத்திலும், எஞ்சிய இலக்கங்களை மூன்றாவது பக்கத்திலும் உள்ளடக்கும் வகையில் தயார் செய்துகொள்ளல் வேண்டும் என்பதுடன், பரீட்சைக்குத் தோற்ற உத்தேசித்துள்ள மொழி மூலம் தமது கையெழுத்தினால் விண்ணப்பப்படிவத்தைப் பூர்த்தி செய்தல் வேண்டும். விண்ணப்பப்படிவத்தில் குறிப்பிடப்பட்டுள்ள பரீட்சையின் பெயர் சிங்கள மொழிக்கு மேலதிகமாக ஆங்கில மொழியிலும், தமிழ் மொழி மூலமான விண்ணப்பப்படிவங்கள் தமிழ் மொழிக்கு மேலதிகமாக ஆங்கில மொழயிலும் குறிப்பிடப்பட்டிருத்தல் வேண்டும். இவ்வாறு பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப்படிவங்களை 2021.03.19 ஆந் திகதி அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு “பரீட்சைகள் ஆணையாளர் நாயகம், ஒழுங்குபடுத்தல் மற்றும் வெளிநாட்டுப் பரீட்சைகள் கிளை, இலங்கைப் பரீட்சைகள் திணைக்களம், த. பெ. இல. 1503, கொழும்பு” எனும் முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பி வைத்தல் வேண்டும். மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கு ஏற்புடையதாக இல்லாத மற்றும் பூரணமற்ற விண்ணப்பப்படிவங்கள் அறிவித்தலின்றி நிராகரிக்கப்படும். எனவே, விண்ணப்பப்படிவம், மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கு ஏற்புடையதாக உள்ளதா என்பது பற்றியும், சகல தகவல்களும் உள்ளடக்கப்பட்டு விண்ணப்பப்படிவம் சரியாக பூர்த்தி செய்யப்பட்டுள்ளதா என்பது பற்றியும், பரீட்சைக் கட்டணம் செலுத்துவது தொடர்பிலான பற்றுச்சீட்டு விண்ணப்பப்படிவத்தின் உரிய இடத்தில் அகன்று போகாதவாறு ஒட்டப்பட்டுள்ளதா என்பது பற்றியும் கவனம் செலுத்தல் வேண்டும். விண்ணப்பப்படிவத்தின் மற்றும் பரீட்சைக் கட்டணம் செலுத்தியமை தொடர்பிலான பற்றுச்சீட்டின் பிரதிகளை தம்வசம் வைத்திருப்பது பயனுள்ளதாக இருக்கும்.

10. பரீட்சை சிங்கள, தமிழ் மற்றும் ஆங்கிலம் ஆகிய மொழிகளில் மாத்திரம் நடைபெறும் என்பதுடன், விண்ணப்பிக்கின்ற மொழி மூலத்தை பின்னர் மாற்றியமைக்க இடமளிக்கப்படமாட்டாது.

11. **பரீட்சைக் கட்டணம்.-** பரீட்சைக் கட்டணம் ரூபா 750.00 ஆகும். மேற்படி பரீட்சைக் கட்டணத்தை பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தின் வருமானத் தலைப்பு 20-03-02-13 இற்கு செலவு வைக்கப்படக்கூடியவாறு எந்தவொரு தபால்/ உப தபால் அலுவலகத்திலும்/ மாவட்ட செயலகத்திலும்/ பிரதேச செயலகத்திலும் காசாகச் செலுத்தி விண்ணப்பதாரியின் பெயரில் வழங்கப்படுகின்ற பற்றுச்சீட்டை விண்ணப்பப்படிவத்திலுள்ள உரிய கூண்டில் அகன்றுபோகாதவாறு உறுதியாக ஒட்ட வேண்டும்.

இந்தப் பரீட்சைக் கட்டணத்திற்கு மேலதிகமாக வேறு எவ்வித கட்டணமும் அறவிடப்படமாட்டாது. பரீட்சைக் கட்டணத்திற்கு காசுக் கட்டளை அல்லது முத்திரைகள் ஏற்றுக்கொள்ளப்படுவதில்லை என்பதுடன், பரீட்சைக்காகச் செலுத்தப்பட்ட கட்டணம் எந்தவொரு காரணத்தினாலும் திருப்பிச் செலத்தப்படவோ அல்லது வேறு பரீட்சைக்கு மாற்றப்படவோ மாட்டாது. பற்றுச்சீட்டின் பிரதியை எதிர்கால உபயோகத்திற்காக தம்வசம் வைத்திருப்பது பயனுள்ளதாகலாம்.

12.

12.1 மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கு இசைவாக இல்லாத விண்ணப்பப்படிவங்களும், பூரணமற்ற தகவல்களைக் கொண்டுள்ள விண்ணப்பப்படிவங்களும் அறிவித்தலின்றி நிராகரிக்கப்படும். பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப்படிவங்களின் பிரதியை தம்வசம் வைத்திருப்பது பயனுள்ளதாகலாம். வர்த்தமானி அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளைக் கொண்டுள்ளவர்கள் மாத்திரம் விண்ணப்பித்துள்ளார்கள் எனும் கருதுகோளின் அடிப்படையில் அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள வயதெல்லைக்கு உட்பட்ட, விண்ணப்பம் ஏற்றுக்கொள்ளும் இறுதித் திகதி அல்லது அதற்கு முன்னர் உரிய பரீடசைக் கட்டணத்தைச் செலுத்தி, அதற்கான பற்றுச்சீட்டுடன் சரியாக பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப்படிவங்களை அனுப்பியுள்ள விண்ணப்பதாரர்களுக்கு பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் பரீட்சை அனுமதிச்சீட்டை அனுப்பிவைப்பார். பரீட்சை அனுமதிச்சீட்டு அனுப்பப்பட்டவுடன் அது பற்றிக் குறிப்பிட்டு பத்திரிகை அறிவித்தலொன்று இலங்கைப் பரீட்சைகள் திணைக்களத்தினால் வெளியிடப்படும். அறிவித்தல் வெளியிடப்படு 02 அல்லது 03 நாட்கள் கடந்த பின்னரும் தமது அனுமதிச்சீட்டுக்கள் கிடைக்காத அபேட்சகர்கள் இருப்பின், அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு அது பற்றி இலங்கைப் பரீட்சைகள் திணைக்களத்தின் ஒழுங்குபடுத்தல் (நிறுவன மற்றும் வெளிநாட்டுப் பரீட்சைகள்) கிளையிடம் வினவ வேண்டும். அவ்வாறு வினவும் போது விண்ணப்பதாரி தாம் விண்ணப்பித்துள்ள பரீட்சையின் பெயர், விண்ணப்பதாரியின் முழுப் பெயர், முகவரி, தேசிய ஆள் அடையாள அட்டை இலக்கம் மற்றும் முகவரியை சரியாகக் குறிப்பிடுதல் வேண்டும். விண்ணப்பதாரி கொழும்புக்கு வெளியே உள்ள பிரதேசத்தைச் சேர்ந்தவராயின், உங்களது மேற்படி விபரங்களுடன், பெக்ஸ் மூலம் அனுமதிச்சீட்டின் பிரதியை துரிதமாக பெற்றுக்கொள்வதற்காக உங்களின் பெக்ஸ் இலக்கத்தையும் குறிப்பிட்டு உங்களின் கோரிக்கைக் கடிதத்தை இலங்கைப் பரீட்சைகள் திணைக்களத்திற்கு பெக்ஸ் மூலம் அனுப்பி வினவுவது உகந்ததாகும். அவ்வாறு வினவும் போது பரீட்சைகள் திணைக்களம் கோருகின்ற ஏதும் தகவல்களை உறுதி செய்வதற்காக உங்கள் வசம் வைத்திருக்கும் விண்ணப்பப்படிவத்தின் பிரதி, பரீட்சைக் கட்டணம் செலுத்தியமைக்கான பற்றுச்சீட்டின் பிரதி மற்றும் விண்ணப்பப்படிவத்தை தபால் மூலம் அனுப்பும் போது பதிவு செய்தமைக்கான பற்றுச்சீட்டையும் ஆயத்தப்படுத்தி வைத்திருப்பது பயனுள்ளதாக இருக்கும்.

12.2 அபேட்சகருக்கு பரீட்சைக்கான பரீட்சை அனுமதிச்சீட்டை வழங்குவதானது, அவர் பரீட்சைக்குத் தோற்றுவதற்கு அல்லது குறித்த பதவிக்கான தகைமைகளைப் பூர்த்தி செய்திருப்பதற்கான அங்கீகாரமாக கருதப்படக்கூடாது.

13.

13.1 விண்ணப்பப்படிவம் கிடைத்ததாக அறிவிக்கப்படுவதில்லை. விண்ணப்பப்படிவத்தை இட்டு அனுப்பும் கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் "அரசாங்க தொழிற்சாலைகள் திணைக்களத்தின் கண்காணிப்பு முகாமைத்துவ உதவியாளர் தொழில்நுட்பம் சாராத - வகுதி 2 அலுவலர் தொகுதியைச் செர்ந்த பதவிக்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சை 2020 - (2021)" எனத் தெளிவாகக் குறிப்பிடுதல் வேண்டும்.

13.2 பரீட்சைக்குத் தோற்றும் முதலாவது தினத்தன்று பரீட்சை மண்டப மேற்பார்வையாளரிடம் தமது கையொப்பத்தை சான்றுப்படுத்திக் கொண்ட அனுமதிச்சீட்டை சமர்ப்பித்தல் வேண்டும்.

14. கையொப்பத்தை சான்றுபடுத்திக் கொள்ளல்

* திணைக்களத் தலைவர் ஊடாக விண்ணப்பப்படிவங்களை சமர்ப்பித்தல் வேண்டும் என்பதுடன், உரிய பரீட்சைக் கட்டணத்தைச் செலுத்தி அதற்கான பற்றுச்சீட்டை உரிய இடத்தில் ஒட்டியிருத்தல் வேண்டும்.
* பரீட்சை அபேட்சகர் பரீட்சை மண்டபத்தினுள் தாம் தோற்றும் ஒவ்வொரு பாடத்திற்கும் பரீட்சை மண்டப மேற்பார்வையாளர் திருப்தியடையக்கூடியவாறு தமது ஆள் அடையாளத்தை உறுதி செய்தல் வேண்டும். இதற்குப் பின்வரும் ஆவணங்களில் ஏதேனுமொன்று ஏற்றுக்கொள்ளப்படும்.

(i) தேசிய ஆள் அடையாள அட்டை ;
(ii) செல்லுபடியான வெளிநாட்டுக் கடவுச்சீட்டு ;
(iii) செல்லுபடியான சாரதி அனுமதிப்பத்திரம்.

மேலும் பரீட்சை அபேட்சகர்களின் ஆள் அடையாளத்தை உறுதி செய்துகொள்ளக்கூடியவாறு முகம் மற்றும் இரு கைகளையும் மூடிமறைக்காதவாறு பரீட்சை மண்டபத்தினுள் பிரவேசித்தல் வேண்டும். அவ்வாறு தமது ஆள் அடையாளத்தை உறுதி செய்ய நிராகரிக்கும் அபேட்சகர்கள் பரீட்சை மண்டபத்திற்குள் அனுமதிக்கப்படமாட்டார்கள். மேலும் பரீட்சை மண்டபத்திற்குள் பிரவேசித்தது முதல் பரீட்சை நிறைவடையும் வரை பரீட்சை அதிகாரிகளுக்கு விண்ணப்பதாரியை இனங்காணக்கூடியவாறு முகம் மற்றும் இரு கைகளையும் மூடிமறைக்காதிருத்தல் வேண்டும்.

14.1 பரீட்சையை நடாத்துவது மற்றும் பெறுபேறுகளை வெளியிடுவது தொடர்பில் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தினால் விதிக்கப்படுகின்ற சட்டங்கள் மற்றும் விதிகளுக்கும் பரீட்சை அபேட்சகர் கட்டுப்படுகின்றார். மேற்படி சட்டங்கள் மற்றும் விதிகளை மீறும் பட்சத்தில் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தினால் விதிக்கப்படுகின்ற தண்டனைக்கு அவர் உட்பட வேண்டி ஏற்படும்.

14.2 **பொய்யான தகவல்களுக்கான தண்டனை**.- விண்ணப்பங்களை நிரப்பும் போது மிகவும் கவனமாக சரியான தகவல்களை வழங்க வேண்டும். இப்பரீட்சையின் சட்டங்கள், விதிகளுக்கு அமைய யாராயினுமொரு அபேட்சகர் தகுதியற்றவர் என்பது வெளிப்படுத்தப்படுமாயின் பரீட்சைக்கு முன்னர் அல்லது பரீட்சை நடைபெறும் போது அல்லது பரீட்சையின் பின்னர் அல்லது எந்தவொரு சந்தர்ப்பத்திலும் அவரின் அபேட்சகர் அந்தஸ்தை ரத்துச் செய்ய முடியும்.

14.3 **பரீட்சைப் பெறுபேறு**.- ஒவ்வொரு பாடத்திற்கும் 40% புள்ளிக்கு குறையாதவாறு புள்ளிகளைப் பெற்றுக்கொள்ளும் விண்ணப்பதாரர்களின் தேர்ச்சி ஒழுங்குவரிசையின் அடிப்படையில் தயார் செய்யப்படுகின்ற பெறுபேறு ஆவணம் "பணிப்பாளர் நாயகம், அரசாங்க தொழிற்சாலைகள் திணைக்களம், கொலன்னாவை" இற்கு பெற்றுக்கொடுக்கப்படும். பரீட்சைக்குத் தோற்றிய சகல விண்ணப்பதாரிகளுக்கும், பெறுபேறுகள் தனிப்பட்ட வகையில் அனுப்பிவைக்கப்படும் அல்லது இலங்கை பரீட்சைகள் திணைக்களத்தின் இணையத்தளத்தின் மூலம் www.results.exam.gov.lk பெறுபேறுகள் பகிரங்கப்படுத்தப்படும்.

14.4 இந்த அறிவித்தலின் சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில மொழி மூலமான அறிவித்தல்களுக்கு இடையே ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில், சிங்கள மொழி மூலமான அறிவித்தலே மேலோங்கி நிற்கும்.

பணிப்பாளர் நாயகம்,
அரசாங்க தொழிற்சாலைகள் திணைக்களம்.

அரசாங்க தொழிற்சாலைகள் திணைக்களம்,
கொலன்னாவ வீதி,
கொலன்னாவ.
2021.02.09.

மாதிரி விண்ணப்பப்படிவம்

**அரசாங்க தொழிற்சாலைகள் திணைக்களத்தின் கண்காணிப்பு முகாமைத்துவ உதவியாளர் தொழில்நுட்பம் சாரா - வகுதி 2 அலுவலர் தொகுதியைச் சேர்ந்த பதவிகளுக்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சைக்கான விண்ணப்பப்படிவம் - 2020 (2020)**

அலுவலக உபயோகத்திற்கு மட்டும்

| |
|---|
| |

பரீட்சைக்குத் தோற்றும் மொழிமூலம் : ☐
சிங்களம் - 2, தமிழ் - 3, ஆங்கிலம் - 4 (உரிய இலக்கத்தை கூட்டில் குறிப்பிடுக.)

**விண்ணப்பிக்கின்ற பதவி** : விண்ணப்பதாரியின் விருப்பத்தின் ஒழுங்குவரிசையின் அடிப்படையில் பதவிகளை இலக்கம் 1, 2, 3 எனக் குறிப்பிடுக.

| பதவி இலக்கம் | பதவி |
|---|---|
| 01 | வேலைத்தள உதவியாளர் |
| 02 | வேலைத்தள இலிகிதர் |
| 03 | நேர இலிகிதர் |

| விருப்பம் | பதவி இலக்கம் |
|---|---|
| முதலாவது | |
| இரண்டாவது | |
| மூன்றாவது | |

01. விண்ணப்பதாரியின் பெயர் (ஆங்கில பெரிய எழுத்தில்):
.............................................................................................................................................
.............................................................................................................................................

02. பரீட்சை அனுமதிச்சீட்டை அனுப்ப வேண்டிய முகவரி :

(i) ஆங்கிலத்தில் : (IN BLOCK LETTERS)
..........................................................................................................................................................
..........................................................................................................................................................

(ii) சிங்களம்/தமிழில் : ..........................................................................................................................
..........................................................................................................................................................

03. பால் : ஆண் - 0 / பெண் - 1 ☐

(உரிய இலக்கத்தைக் கூட்டினுள் குறிப்பிடுக.)

04. தேசிய ஆளடையாள அட்டை இல : ☐☐☐☐☐☐☐☐☐☐☐☐

05. செல்லிடத் தொலைபேசி இல. : ☐☐☐☐☐☐☐☐☐☐

06. முகவரி :

(i) தனிப்பட்ட முகவரி : ..........................................................................................................................
..........................................................................................................................................................

(ii) மாவட்டம் : ..........................................................................................................................

07. பிறந்த திகதி :

ஆண்டு: ☐☐☐☐ மாதம்: ☐☐ திகதி: ☐☐

08. விவாகமானவரா/விவாகமாகாதவரா என்பது :..................................................................

09. கல்வித் தகைமைகள் :

I. க. பொ. த. (சா./த.) பரீட்சை :

பரீட்சை சுட்டெண். : .............................. ஆண்டு: ...................... மொழி மூலம் :...................

| | சித்தியடைந்த பாடங்கள் | தரம் | | சித்தியடைந்த பாடங்கள் | தரம் |
|---|---|---|---|---|---|
| (1) | ................................................ | ................ | (6) | ................................................ | ................ |
| (2) | ................................................ | ................ | (7) | ................................................ | ................ |
| (3) | ................................................ | ................ | (8) | ................................................ | ................ |
| (4) | ................................................ | ................ | (9) | ................................................ | ................ |
| (5) | ................................................ | ................ | (10) | ................................................ | ................ |

II. க. பொ. த. (உ./த.) பரீட்சை :

பரீட்சை சுட்டெண் : .............................. ஆண்டு: ...................... மொழி மூலம் :...................

| | சித்தியடைந்த பாடங்கள் | தரம் |
|---|---|---|
| (1) | ................................................ | ................ |
| (2) | ................................................ | ................ |
| (3) | ................................................ | ................ |
| (4) | ................................................ | ................ |

10. தொழில்சார் தகைமைகள் பற்றிய விபரம்:

| தொடர் இல. | பாடநெறியின் பெயர் | நிறுவகம் | கால எல்லை | பெறுபேறு |
|---|---|---|---|---|
| (1) | | | | |
| (2) | | | | |
| (3) | | | | |

11. வேறு தகைமைகள் : ..............................................................................................................
.............................................................................................................................................

12. தற்போது ஏதும் பதவியை வகிப்பவராயின் அது பற்றிய விபரம் :-

(I) பதவியும், தரமும் : ....................................................................

(II) நியமனம் பெற்ற திகதி : ......................................................................

(III) நிறுவனம் : .....................................................................

(IV) ஓய்வூதிய உரித்துடைய பதவியொன்றா என்பது :......................................................................

**விண்ணப்பதாரியின் உறுதியுரை.-**

இந்த விண்ணப்பப்படிவத்தில் நான் குறிப்பிட்டுள்ள தகவல்கள் எனது அறிவுக்கு எட்டிய வகையில் உண்மையானவை என்றும் சரியானவை என்றும் உறுதி செய்கின்றேன். இந்தத் தகவல்கள் உண்மைக்கு முரணானது அல்லது தவறானது என்பது நியமனம் செய்யப்பட முன்னர் உறுதி செய்யப்படும் பட்சத்தில் நான் தகுதியற்றவராவேன் என்றும், நியமனம் செய்யப்பட்ட பின்னர் உண்மைக்கு முரணானது அல்லது தவறானது என்பது உறுதி செய்யப்படும் பட்சத்தில் நியமனம் இரத்துச் செய்யப்பட முடியும் என்பதையும் அறிவேன். மேலும் பரீட்சையை நடாத்துவது மற்றும் பெறுபேறுகளை வெளியிடுவது தொடர்பில் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தினால் விதிக்கப்படுகின்ற சட்டங்கள், விதிகளுக்கும் நான் கட்டுப்படுகின்றேன் என்றும் தெரிவிக்கின்றேன்.

..................................................................

விண்ணப்பதாரியின் கையொப்பம்.

திகதி : .........................

13. பரீட்சைக் கட்டணம் செலுத்தியமை பற்றிய விபரம் :

13.1 செலுத்தப்பட்ட பரீட்சைக் கட்டணம் ரூபா (எழுத்தில்) ..................................................

13.2 பற்றுச்சீட்டு இலக்கம் : ..................................................

13.3 வெளியிட்ட அலுவலகம் : ..................................................

13.4 திகதி : ..................................................

பற்றுச்சீட்டினை கழன்றுபோகாதவாறு இங்கே உறுதியாக ஒட்டவும். (பணம் செலுத்திய பற்றுச்சீட்டின் பிரதியை உங்கள் வசம் வைத்திருக்கவும்.)

14. **நிறுவனத் தலைவரின் சான்றுப்படுத்தல் :**

14.1 இந்த விண்ணப்பப்படிவத்தை சமர்ப்பித்துள்ள திரு./திருமதி/ செல்வி ................................. என்பவர் இந்தத் திணைக்களத்தில் சேவையாற்றி வருகின்றார் என்றும், ............... ஆந் திகதிக்கு முன்னரான ஐந்து வருடங்களில் திருப்திகரமான சேவைக் காலத்தைப் பூர்த்தி செய்துள்ளார் என்றும், விண்ணப்பப்படிவத்தில் குறிப்பிட்டுள்ள தகவல்கள் இந்தத் திணைக்களத்தில் காணப்படுகின்ற அறிக்கைகளின் அடிப்படையில் சரியானவை என்றும் குறித்த அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ளார்/பூர்த்தி செய்யவில்லை என்றும் உரிய பரீட்சைக் கட்டணம் செலுத்தப்பட்டுள்ளது என்றும், அதற்கான பற்றுச்சீட்டு ஒட்டப்பட்டுள்ளது என்றும் சான்றுப்படுத்துகின்றேன்.

...........................................

திணைக்களத் தலைவரின் கையொப்பம் மற்றும் பதவி முத்திரை.

சான்றுப்படுத்துபவரின் பெயர் : ........................

பதவி : ......................

முகவரி : .........................

பதவி முத்திரை: .........................

திகதி : .........................

02-585/1

## நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சு

## அரசாங்க தொழிற்சாலைகள் திணைக்களம்

## அரசாங்க தொழிற்சாலைகள் திணைக்களத்தின் முகாமைத்துவ உதவியாளர் - தொழில்நுட்பம் சாரா - வகுதி 2 அலுவலர் தொகுதியைச் சேர்ந்த பதவிகளுக்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சை - 2020 (2021)

அரசாங்க தொழிற்சாலைகள் திணைக்களத்தில் பின்வரும் பதவிகளில் காணப்படுகின்ற வெற்றிடங்களை நிரப்புவதற்கு பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தினால் 2021, மே மாதம் கொழும்பில் நடாத்தப்படவுள்ள திறந்த போட்டிப் பரீட்சைக்கு இலங்கைப் பிரசைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. குறித்த தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ளவர்கள் இம்மூன்று பதவிகளுக்கும் விண்ணப்பிக்கலாம்.

| பதவி | வெற்றிடங்களின் எண்ணிக்கை |
|---|---|
| வேலைத்தள உதவியாளர் | 04 |
| வேலைத்தள இலிகிதர் | 02 |
| நேர இலிகிதர் | 04 |

1. **சம்பளம் :**

1.1 சம்பளக் குறியீட்டு இல. : MN 1-2016

1.2 சம்பள அளவுத்திட்டம் : ரூபா 27,140 - 10 × 300 - 11 ×350 - 10 × 495 - 10 × 660 - ரூபா 45,540.00.

2. **ஆட்சேர்ப்புச் செய்யும் தரம் : தரம்** III

3. **கல்வித் தகைமைகள் :** கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர் தர) ப் பரீட்சையில் ஆகக்குறைந்தது ஒரு பாடத்திலேனும் (சாதாரண பொதுப் பரீட்சை தவிர) சித்தியடைந்திருத்தல்.

மற்றும்

சிங்களம்/தமிழ்/ஆங்கில மொழி மற்றும் கணிதம் உள்ளடங்களாக மேலும் இரண்டு பாடங்களுக்கு திறமைச் சித்தியுடன் ஒரே தடவையில் ஆறு (06) பாடங்களில் கல்விப் பொதுத் தராதரப் பத்திர (சாதாரண தர) ப் பரீட்சையில் சித்தியடைந்திருத்தல்.

4. **தொழில்சார் தகைமைகள் :** கணினிப் பிரயோகம்/ தட்டச்சு பற்றிய தொழில் மற்றும் தொழில் கல்வி ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட, 03 மாதங்களுக்குக் குறையாத காலப்பகுதிக்கான பாடநெறியை கற்றிருத்தல்.

5. **உடல்சார் தகைமைகள் :** ஒவ்வொரு விண்ணப்பதாரியும் இலங்கையில் எந்தவொரு பிரதேசத்திலும் சேவையாற்றுவதற்கும், பதவியின் கடமைகளை நிறைவேற்றுவதற்கும் போதியளவிலான உடல் மற்றும் உளரீதியான தகைமையைக் கொண்டவராக இருத்தல் வேண்டும்.

6. **வேறு தகைமைகள் :**

(i) இலங்கைப் பிரசையாக இருத்தல் வேண்டும்.

(ii) சிறந்த நன்னடத்தையுடையவராக இருத்தல் வேண்டும்.

(iii) பதவிக்கு ஆட்சேர்ப்புச் செய்யத் தேவையான சகல தகைமைகளையும் விண்ணப்பம் கோரும் அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள திகதிக்கு சகல வகையிலும் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.

7. **வயது:**

7.1 **ஆகக்குறைந்த வயதெல்லை:** 18 வயதுக்கு குறையாதவராக இருத்தல்.

7.2 **உச்ச வயதெல்லை :** 30 வயதுக்கு மேற்படாதவராக இருத்தல். (அதற்கமைய 2003.03.19 ஆந் திகதி அல்லது அதற்கு முன்னர் மற்றும் 1991.03.19 ஆந் திகதிக்கு அல்லது அதற்கு பின்னர் பிறந்துள்ளவர்கள் மாத்திரம் இதற்கு விண்ணப்பிக்க தகைமை பெறுவார்கள்.)

*8.* **ஆட்சேர்ப்பு ஒழுங்குமுறை** : எழுத்துமூலப் பரீட்சையில் விண்ணப்பதாரர்கள் பெற்றுக்கொண்ட புள்ளிகளின் தேர்ச்சி ஒழுங்குவரிசை மற்றும் விண்ணப்பதாரிகளின் விருப்பத்தையும் கவனத்தில் கொண்டு மேற்படிப் பதவிக்கு ஆட்சேர்ப்புச் செய்யப்படுவார்கள்.

*9.*

*9.1* **எழுத்துப் பரீட்சை** :

| | *பாடம்* | *நேரம்* | *உச்ச புள்ளி* | *சித்தியடைய பெற வேண்டிய புள்ளி* |
|---|---|---|---|---|
| 1 | மொழித் தேர்ச்சியும், புரிந்துணர்வும் | 01 மணித்தியாலம் | 100 | 40 |
| 2 | நுண்ணறிவுப் பரீட்சை | 01 மணித்தியாலம் | 100 | 40 |

*9.2* **எழுத்துப் பரீட்சையின் பாடவிதானம்** :

| *வினாப்பத்தரத்தின் பெயர்* | *பாடவிதானம்* |
|---|---|
| மொழித்தேர்ச்சியும், புரிந்துணர்வும் | வேட்பாளரின் கருத்து வெளியிடல், புரிந்துணர்வு, எழுத்துப்பிழையின்றி எழுதுதல், பொதுவான இலக்கணப் பயன்பாடு மற்றும் பொழிப்புரையாக்குவது பற்றிய வினாக்களைக் கொண்டது. |
| நுண்ணறிவுப் பரீட்சை | வேட்பாளரின் புள்ளிவிபரவியல் திறன், தர்க்கரீதியான திறன், பொது அறிவு, தீர்மானம் மேற்கொள்ளும் சக்தியை நிர்ணயிப்பதற்கான வினாக்களைக் கொண்டது. |

*9.3* **பொது நேர்முகப் பரீட்சை** : புள்ளி வழங்கப்பட மாட்டாது என்பதுடன் தகைமைகளை பரிசீலிப்பது மாத்திரம் இடம்பெறும்.

*10.* மேலுள்ள தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ள விண்ண்ணப்பதாரிகள் இத்துடன் இணைக்கப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப்படிவத்துக்கு அமைவாக, A4 அளவான கடதாசியின் இரு பக்கங்களையும் பயன்படுத்தி விண்ணப்பப்படிவத்தின் இலக்கம் 01 முதல் 05 வரையான தலைப்புக்களை முதலாவது பக்கத்திலும் எஞ்சிய இலக்கங்களை ஏனைய பக்கங்களிலும் உள்ளடக்கும் வகையில் தயார் செய்துகொள்ளல் வேண்டும் என்பதுடன், பரீட்சைக்குத் தோற்ற உத்தேசித்துள்ள மொழி மூலம் தமது கையெழுத்தினால் விண்ணப்பப்படிவத்தைப் பூர்த்தி செய்தல் வேண்டும். விண்ணப்பப்படிவத்தில் குறிப்பிடப்பட்டுள்ள பரீட்சையின் பெயர் சிங்கள மொழிக்கு மேலதிகமாக ஆங்கில மொழியிலும், தமிழ் மொழி மூலமான விண்ணப்பப்படிவங்கள் தமிழ் மொழிக்கு மேலதிகமாக ஆங்கில மொழயிலும் குறிப்பிடப்பட்டிருத்தல் வேண்டும். இவ்வாறு பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பபப்படிவங்களை 2021.03.19 ஆந் திகதி அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு “பரீட்சைகள் ஆணையாளர் நாயகம், ஒழுங்குபடுத்தல் மற்றும் வெளிநாட்டுப் பரீட்சைகள் கிளை, இலங்கைப் பரீட்சைகள் திணைக்களம், த. பெ. இல. 1503, கொழும்பு” எனும் முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பி வைத்தல் வேண்டும். மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கு ஏற்புடையதாக இல்லாத மற்றும் பூரணமற்ற விண்ணப்பப்படிவங்கள் அறிவித்தலின்றி நிராகரிக்கப்படும். எனவே விண்ணப்பப்படிவம், மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கு ஏற்புடையதாக உள்ளதா என்பது பற்றியும், சகல தகவல்களும் உள்ளடக்கப்பட்டு விண்ணப்பப்படிவம் சரியாக பூர்த்தி செய்யப்பட்டுள்ளதா என்பது பற்றியும், பரீட்சைக் கட்டணம் செலுத்துவது தொடர்பிலான பற்றுச்சீட்டு விண்ணப்பப்படிவத்தின் உரிய இடத்தில் அகன்று போகாதவாறு ஒட்டப்பட்டுள்ளதா என்பது பற்றியும் கவனம் செலுத்தல் வேண்டும். விண்ணப்பப்படிவத்தின் மற்றும் பரீட்சைக் கட்டணம் செலுத்தியமை தொடர்பிலான பற்றுச்சீட்டின் பிரதிகளை தம்வசம் வைத்திருப்பது பயனுள்ளதாக இருக்கும்.

*11.* பரீட்சை சிங்கள, தமிழ் மற்றும் ஆங்கிலம் ஆகிய மொழிகளில் மாத்திரம் நடைபெறும் என்பதுடன், விண்ணப்பிக்கின்ற மொழி மூலத்தை பின்னர் மாற்றியமைக்க இடமளிக்கப்படமாட்டாது.

*12.* மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கு ஏற்புடையதாக இல்லாத விண்ணப்பப்படிவங்களும், பூரணமற்ற தகவல்களைக் கொண்டுள்ள விண்ணப்பப்படிவங்களும் அறிவித்தலின்றி நிராகரிக்கப்படும். மேலும், பரீட்சைக் கட்டணம் செலுத்துவது தொடர்பிலான பற்றுச்சீட்டு விண்ணப்பப்படிவத்தின் உரிய இடத்தில் அகன்று போகாதவாறு ஒட்டப்பட்டுள்ளதா என்பது பற்றி கவனம் செலுத்த வேண்டும் என்பதுடன், பணம் செலுத்திய பற்றுச்சீட்டின் பிரதிகளை தம்வசம் வைத்திருப்பது பயனுள்ளதாக இருக்கும். முறையாக பூர்த்தி செய்யப்படாத விண்ணப்பப்படிவங்கள் மற்றும் உரிய திகதிக்குப் பின்னர் கிடைக்கின்ற விண்ணப்பப்படிவங்கள் அறிவித்தலின்றி நிராகரிக்கப்படும். பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப்படிவங்களின் பிரதியை தம்வசம் வைத்திருப்பது பயனுள்ளதாகலாம்.

12.1 **பொய்யான தகவல்களுக்கான தண்டனை.-** விண்ணப்பங்களை நிரப்பும் போது மிகவும் கவனமாக சரியான தகவல்களை வழங்க வேண்டும். இப்பரீட்சையின் சட்டங்கள், விதிகளுக்கு அமைய யாராயினுமொரு விண்ணப்பதாரி தகுதியற்றவர் என்பது வெளிப்படுத்தப்படுமாயின் பரீட்சைக்கு முன்னர் அல்லது பரீட்சை நடைபெறும் போது அல்லது பரீட்சையின் பின்னர் அல்லது எந்தவொரு சந்தர்ப்பத்திலும் அவரது விண்ணப்ப அந்தஸ்தை ரத்துச் செய்ய முடியும்.

13. வரத்தமானி அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளைக் கொண்டுள்ளவர்கள் மாத்திரம் விண்ணப்பித்துள்ளார்கள் எனும் கருதுகோளின் அடிப்படையில் அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள வயதெல்லைக்கு உட்பட்ட, விண்ணப்பம் ஏற்றுக்கொள்ளும் இறுதித் திகதி அல்லது அதற்கு முன்னர் உரிய பரீட்சைக் கட்டணத்தைச் செலுத்தி, அதற்கான பற்றுச்சீட்டுடன் சரியாக பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப்படிவங்களை அனுப்பியுள்ள விண்ணப்பதாரர்களுக்கு பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் பரீட்சை அனுமதிச்சீட்டை அனுப்பிவைப்பார். பரீட்சை அனுமதிச்சீட்டு அனுப்பப்பட்டவுடன் அது பற்றிக் குறிப்பிட்டு பத்திரிகை அறிவித்தலொன்று இலங்கைப் பரீட்சைகள் திணைக்களத்தினால் வெளியிடப்படும். அறிவித்தல் வெளியிடப்பட்டு 02 அல்லது 03 நாட்கள் கடந்த பின்னரும் தமது அனுமதிச்சீட்டுக்கள் கிடைக்காத விண்ணப்பதாரிகள் இருப்பின், அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு அது பற்றி இலங்கைப் பரீட்சைகள் திணைக்களத்தின் ஒழுங்குபடுத்தல் (நிறுவன மற்றும் வெளிநாட்டுப் பரீட்சைகள்) கிளையிடம் வினவ வேண்டும். அவ்வாறு வினவும் போது விண்ணப்பதாரி தாம் விண்ணப்பித்துள்ள பரீட்சையின் பெயர், விண்ணப்பதாரியின் முழுப் பெயர், முகவரி, தேசிய ஆள் அடையாள அட்டை இலக்கம் மற்றும் முகவரியை சரியாகக் குறிப்பிடுதல் வேண்டும். விண்ணப்பதாரி கொழும்புக்கு வெளியே உள்ள பிரதேசத்தைச் சேர்ந்தவராயின், உங்களது மேற்படி விபரங்களுடன், பெக்ஸ் மூலம் அனுமதிச்சீட்டின் பிரதியை துரிதமாக பெற்றுக்கொள்வதற்காக உங்களின் பெக்ஸ் இலக்கத்தையும் குறிப்பிட்டு உங்களின் கோரிக்கைக் கடிதத்தை இலங்கைப் பரீட்சைகள் திணைக்களத்திற்கு பெக்ஸ் மூலம் அனுப்பி வினவுவது உகந்ததாகும். அவ்வாறு வினவும் போது பரீட்சைகள் திணைக்களம் கோருகின்ற ஏதும் தகவல்களை உறுதி செய்வதற்காக உங்கள் வசம் வைத்திருக்கும் விண்ணப்பப்படிவத்தின் பிரதி, பரீட்சைக் கட்டணம் செலுத்தியமைக்கான பற்றுச்சீட்டின் பிரதி மற்றும் விண்ணப்பப்படிவத்தைத் தபால் மூலம் அனுப்பும் போது பதிவு செய்தமைக்கான பற்றுச்சீட்டையும் ஆயத்தப்படுத்தி வைத்திருப்பது பயனுள்ளதாக இருக்கும். விண்ணப்பப்படிவம் கிடைத்ததாக அறிவிக்கப்படுவதில்லை. விண்ணப்பப்படிவத்தை இட்டு அனுப்பும் கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் "அரசாங்க தொழிற்சாலைகள் திணைக்களத்தின் கண்காணிப்பு முகாமைத்துவ உதவியாளர் தொழில்நுட்பம் சாராத - வகுதி 2 அலுவலர் தொகுதியைச் சேர்ந்த பதவிக்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சை 2020 - (2021)" எனத் தெளிவாகக் குறிப்பிடுதல் வேண்டும்.

13.1 **பரீட்சைக் கட்டணம்.-** ரூபா 750.00 ஆகும். மேற்படி பரீட்சைக் கட்டணத்தை பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தின் வருமானத் தலைப்பு 20-03-02-13 இற்கு செலவு வைக்கப்படக்கூடியவாறு எந்தவொரு தபால்/ உப தபால் அலுவலகத்திலும்/ மாவட்டச் செயலகத்திலும்/ பிரதேச செயலகத்திலும் காசாகச் செலுத்தி விண்ணப்பதாரியின் பெயரில் வழங்கப்படுகின்ற பற்றுச்சீட்டை விண்ணப்பப்படிவத்திலுள்ள உரிய கூண்டில் அகன்றுபோகாதவாறு உறுதியாக ஒட்ட வேண்டும். இந்த பரீட்சைக் கட்டணத்திற்கு மேலதிகமாக வேறு எவ்வித கட்டணமும் அறவிடப்படமாட்டாது. பரீட்சைக் கட்டணத்திற்கு காசுக் கட்டளை அல்லது முத்திரைகள் ஏற்றுக்கொள்ளப்படுவதில்லை என்பதுடன், பரீட்சைக்காகச் செலுத்தப்பட்ட கட்டணம் எந்தவொரு காரணத்தினாலும் திருப்பிச் செலத்தப்படவோ அல்லது வேறு பரீட்சைக்கு மாற்றப்படவோ மாட்டாது. பற்றுச்சீட்டின் பிரதியை எதிர்கால உபயோகத்திற்காக தம்வசம் வைத்திருப்பது பயனுள்ளதாகலாம்.

13.2 அபேட்சகருக்கு பரீட்சைக்கான பரீட்சை அனுமதிச்சீட்டை வழங்குவதானது, அவர் பரீட்சைக்குத் தோற்றுவதற்கு அல்லது குறித்த பதவிக்கான தகைமைகளைப் பூர்த்தி செய்திருப்பதற்கான அங்கீகாரமாக கருதப்படக்கூடாது.

14. விண்ணப்பப்படிவத்திலும், பரீட்சைக்கான அனுமதிச்சீட்டிலும் விண்ணப்பதாரியின் கையொப்பம் சான்றுப்படுத்தப் பட்டிருத்தல் வேண்டும். ஏதேனுமொரு நிறுவனத்திலிருந்து பரீட்சைக்கு விண்ணப்பிக்கின்ற விண்ணப்பதாரியொருவர் தமது கையொப்பத்தை நிறுவனத் தலைவர் அல்லது அவரினால் தத்துவமளிக்கப்பட்டுள்ள அலுவலர் ஒருவர் ஊடாகவும், அவ்வாறல்லாத விண்ணப்பதாரியொருவர் தமது கையொப்பத்தை அரசாங்க பாடசாலையொன்றின் அதிபர்/ ஓய்வுபெற்ற அலுவலர், பிரிவின் கிராம அலுவலர், சமாதான நீதவான், சத்தியப்பிரமாண ஆணையாளர், சட்டத்தரணி, பகிரங்க நொத்தாரிசு, முப்படைகளின் தத்துவமளிக்கப்பட்ட அலுவலர், அரச அல்லது மாகாண அரச சேவையின் நிரந்தரப் பதவிநிலை தரத்தைச் சேர்ந்த அலுவலர் அல்லது பௌத்த விஹாரையொன்றின் விஹாராதிபதி அல்லது தலைமை பிக்கு ஒருவர் அல்லது பிற மதவழிபாட்டுத்தளமொன்றுக்குப் பொறுப்பான மதத் தலைவரொருவராகக் கருதக்கூடிய அந்தஸ்திலுள்ள ஒருவர் ஊடாக சான்றுப்படுத்திக்கொள்ளல் வேண்டும். ஏற்கனவே அரச நிறுவனமொன்றில் சேவையாற்றுகின்ற விண்ணப்பதாரிகள் தமது நிறுவனத் தலைவர் ஊடாக விண்ணப்பப்படிவங்களை சமர்ப்பித்தல் வேண்டும்.

15. பரீட்சை விண்ணப்பதாரி பரீட்சை மண்டபத்தினுள் தாம் தோற்றும் ஒவ்வொரு பாடத்திற்கும் பரீட்சை மண்டப மேற்பார்வையாளர் திருப்தியடையக்கூடியவாறு தமது ஆள் அடையாளத்தை உறுதி செய்தல் வேண்டும். இதற்குப் பின்வரும் ஆவணங்களில் ஏதேனுமொன்று ஏற்றுக்கொள்ளப்படும்.

(i) தேசிய ஆள் அடையாள அட்டை ;
(ii) செல்லுபடியான வெளிநாட்டுக் கடவுச்சீட்டு ;
(iii) செல்லுபடியான இலங்கை சாரதி அனுமதிப்பத்திரம்.

மேலும் பரீட்சை விண்ணப்பதாரியின் ஆள் அடையாளத்தை உறுதி செய்துகொள்ளக்கூடியவாறு முகம் மற்றும் இரு காதுகளையும் மூடிமறைக்காதவாறு பரீட்சை மண்டபத்தினுள் பிரவேசித்தல் வேண்டும். அவ்வாறு தமது ஆள் அடையாளத்தை உறுதி செய்ய நிராகரிக்கும் விண்ணப்பதாரிகள் பரீட்சை மண்டபத்திற்குள் அனுமதிக்கப்படமாட்டார்கள். மேலும் பரீட்சை மண்டபத்திற்குள் பிரவேசித்தது முதல் பரீட்சை நிறைவடையும் வரை பரீட்சை அதிகாரிகளுக்கு விண்ணப்பதாரியை இனங்காணக்கூடியவாறு முகம் மற்றும் இரு கைகளையும் மூடிமறைக்காதிருத்தல் வேண்டும்.

16 **பரீட்சை பெறுபேறு**.- இந்த அறிவித்தலின் 9.1 பந்திக்கு அமைய ஒவ்வொரு பாடத்திற்கும் 40% புள்ளிக்கு குறையாதவாறு புள்ளிகளைப் பெற்றுக்கொள்ளும் விண்ணப்பதாரர்களின் தேர்ச்சி ஒழுங்குவரிசையின் அடிப்படையில் தயார் செய்யப்படுகின்ற பெறுபேறு ஆவணம் "பணிப்பாளர் நாயகம், அரசாங்க தொழிற்சாலைகள் திணைக்களம், கொலன்னாவை" இற்கு பெற்றுக்கொடுக்கப்படும். பரீட்சைக்குத் தோற்றிய சகல விண்ணப்பதாரிகளுக்கும், பெறுபேறுகளை தனிப்பட்ட வகையில் அனுப்பிவைக்கப்படும் அல்லது இலங்கைப் பரீட்சைகள் திணைக்களத்தின் www.results.exam.gov.lk எனும் இணையத்தளத்தின் மூலம் பெறுபேறுகள் பகிரங்கப்படுத்தப்படும்.

17. இந்த அறிவித்தலின் சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில மொழி மூலமான அறிவித்தல்களுக்கு இடையே ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில், சிங்கள மொழி மூலமான அறிவித்தலே மேலோங்கி நிற்கும்.

பணிப்பாளர் நாயகம்,
அரசாங்க தொழிற்சாலைகள் திணைக்களம்.

அரசாங்க தொழிற்சாலைகள் திணைக்களம்,
கொலன்னாவ வீதி,
கொலன்னாவ.
2021.02.09.

மாதிரி விண்ணப்பப்படிவம்

**அரசாங்க தொழிற்சாலைகள் திணைக்களத்தின் கண்காணிப்பு முகாமைத்துவ உதவியாளர் தொழில்நுட்பம் சாரா- வகுதி 2 அலுவலர் தொகுதியைச் சேர்ந்த பதவிகளுக்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சைக்கான விண்ணப்பப்படிவம் - 2020 (2021)**

அலுவலக உபயோகத்திற்கு மட்டும்

பரீட்சைக்குத் தோற்றும் மொழிமூலம் :
சிங்களம் - 2, தமிழ் - 3, ஆங்கிலம் - 4 (உரிய இலக்கத்தை கூட்டில் குறிப்பிடுக.)

**விண்ணப்பிக்கின்ற பதவி** : விண்ணப்பதாரியின் விருப்பத்தின் ஒழுங்குவரிசையின் அடிப்படையில் பதவிகளை இலக்கம் 1, 2, 3 எனக் குறிப்பிடுக.

| பதவி இலக்கம் | பதவி |
|---|---|
| 01 | வேலைத்தள உதவியாளர் |
| 02 | வேலைத்தள இலிகிதர் |
| 03 | நேர இலிகிதர் |

| விருப்பம் | பதவி இலக்கம் |
|---|---|
| முதலாவது | |
| இரண்டாவது | |
| மூன்றாவது | |

01. விண்ணப்பதாரியின் பெயர் (ஆங்கில கெப்பிட்டல் எழுத்தில்):
.....................................................................................................................................................
.....................................................................................................................................................

02. பரீட்சை அனுமதிச்சீட்டை அனுப்ப வேண்டிய முகவரி : (ஆங்கில கெப்பிட்டல் எழுத்தில்)

..............................................................................................................................................
..............................................................................................................................................

03. பால் : ஆண் - 0
பெண் - 1 ☐
(உரிய இலக்கத்தைக் கூட்டினுள் குறிப்பிடுக.)

04. தேசிய ஆளடையாள அட்டை இல : ☐☐☐☐☐☐☐☐☐☐☐☐

05. செல்லிடத் தொலைபேசி இல. : ☐☐☐☐☐☐☐☐☐☐

06. முகவரி :

(i) தனிப்பட்ட முகவரி : ..............................................................................................................................
..............................................................................................................................................

(ii) மாவட்டம் : ..............................................................................................................

07. பிறந்த திகதி :
ஆண்டு : ☐☐☐☐ மாதம்: ☐☐ திகதி: ☐☐

08. விவாகமானவரா/விவாகமாகாதவரா என்பது :.........................................................................................

09. பிரசாவுரிமை : பரம்பரை பரம்பரையாக/பதிவு மூலம் :.........................................................................................

10. கல்வித் தகைமைகள் :

I. க. பொ. த. (சா/த) பரீட்சை :
பரீட்சை சுட்டெண் : .............................. ஆண்டு: ...................... மொழி மூலம் :...................

| | சித்தியடைந்த பாடங்கள் | தரம் | | சித்தியடைந்த பாடங்கள் | தரம் |
|---|---|---|---|---|---|
| (1) | ................................................ | ............... | (6) | ................................................ | ............... |
| (2) | ................................................ | ............... | (7) | ................................................ | ............... |
| (3) | ................................................ | ............... | (8) | ................................................ | ............... |
| (4) | ................................................ | ............... | (9) | ................................................ | ............... |
| (5) | ................................................ | ............... | (10) | ................................................ | ............... |

II. க. பொ. த. (உ/த) பரீட்சை :

பரீட்சை சுட்டெண் : .............................. ஆண்டு: ...................... மொழி மூலம் :...................

| | சித்தியடைந்த பாடங்கள் | தரம் |
|---|---|---|
| (1) | ................................................ | ............... |
| (2) | ................................................ | ............... |
| (3) | ................................................ | ............... |
| (4) | ................................................ | ............... |

*11.* தொழில்சார் தகைமைகள் பற்றிய விபரம்:

| *தொடர் இல.* | *பாடநெறியின் பெயர்* | *நிறுவகம்* | *கால எல்லை* | *பெறுபேறு* |
|---|---|---|---|---|
| *(1)* | | | | |
| *(2)* | | | | |
| *(3)* | | | | |

*12.* தற்போது ஏதும் பதவியை வகிப்பவராயின் அது பற்றிய விபரம்

(I) பதவியும், தரமும் : ......................................................................
(II) நியமனம் பெற்ற திகதி : ......................................................................
(III) நிறுவனம் : ......................................................................
(IV) ஓய்வூதிய உரித்துடைய பதவியொன்றா என்பது :......................................................................

**விண்ணப்பதாரியின் உறுதியுரை.-**

இந்த விண்ணப்பப்படிவத்தில் என்னால் குறிப்பிடப்பட்டுள்ள தகவல்கள் எனது அறிவுக்கு எட்டிய வகையில் உண்மையானவை என்றும் சரியானவை என்றும் உறுதி செய்கின்றேன். இந்தத் தகவல்கள் உண்மைக்கு முரணானது அல்லது தவறானது என்பது நியமனம் செய்யபபட முன்னர் உறுதி செய்யப்படும் பட்சத்தில் நான் தகுதியற்றவராவேன் என்றும், நியமனம் செய்யப்பட்ட பின்னர் உண்மைக்கு முரணானது அல்லது தவறானது என்பது உறுதி செய்யப்படும் பட்சத்தில் நியமனம் இரத்துச் செய்யப்பட முடியும் என்பதையும் அறிவேன். மேலும் பரீட்சையை நடாத்துவது மற்றும் பெறுபேறுகளை வெளியிடுவது தொடர்பில் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தினால் விதிக்கப்படுகின்ற சட்டங்கள், விதிகளுக்கும் நான் கட்டுப்படுகின்றேன் என்றும் தெரிவிக்கின்றேன்.

......................................................................
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

திகதி : ..........................

*13.* பரீட்சைக் கட்டணம் செலுத்தியமை பற்றிய விபரம் :

*13.1* செலுத்தப்பட்ட பரீட்சைக் கட்டணம் ரூபா (எழுத்தில்): ..................................................
*13.2* பற்றுச்சீட்டு இலக்கம் : ..................................................
*13.3* வெளியிட்ட அலுவலகம் : ..................................................
*13.4* திகதி : ..................................................

| |
|---|
| பற்றுச்சீட்டினை கழன்றுபோகாதவாறு இங்கே உறுதியாக ஒட்டவும். (பற்றுச்சீட்டின் பிரதியை உங்கள் வசம் வைத்திருக்கவும்.) |

*14.* **விண்ணப்பதாரியின் கையொப்பத்தை சான்றுப்படுத்தல் :**

இந்த விண்ணப்பப்படிவத்தை சமர்ப்பித்துள்ள .................................. என்பவரை நான் தனிப்பட்ட வகையில் அறிவேன் என்றும், உரிய பரீட்சைக் கட்டணம் செலுத்தப்பட்டுள்ளது என்றும், குறித்த பற்றுச்சீட்டு ஒட்டப்பட்டுள்ளது என்றும் ................ ஆம் திகதி அவர் என் முன்னிலையில் இதில் கையொப்பமிட்டார் என்றும் நான் சான்றுப்படுத்துகின்றேன்.

..........................................
சான்றுப்படுத்துபவரின் கையொப்பம்.

சான்றுப்படுத்துபவரின் பெயர் : .........................
பதவி : .......................
முகவரி : ..........................
பதவி முத்திரை: ..........................
திகதி : ..........................

*15.* **அரசாங்க சேவையின்/மாகாண அரசாங்க சேவையின் ஊழியராயின், திணைக்களத் தலைவரின் சிபாரிசு:**
திரு./ திருமதி/ செல்வி .............................................. என்பவர் இந்த அமைச்சில்/ திணைக்களத்தில் நிரந்தர ஊழியராக சேவையாற்றி வருகின்றார் என்றும், இப்பதவிக்கு தெரிவு செய்யப்படும் பட்சத்தில் அவரை சேவையிலிருந்து விடுவிக்க முடியும்/முடியாது என்றும் அறியத்தருகின்றேன்.

..........................................
திணைக்களத் தலைவரின் கையொப்பம்
மற்றும் பதவி முத்திரை.

திகதி : ..........................

*02-585/2*

## நீதி அமைச்சின் இலங்கை தொழில்நுட்ப சேவையின் தரம் III ஐச் சேர்ந்த தொழில்நுட்ப அலுவலர் (சிவில்) பதவிக்கு ஆட்சேர்ப்புச் செய்தல் (திறந்த அடிப்படையில்) - 2021

*நீதி அமைச்சின் இலங்கை தொழில்நுட்ப சேவையின் தரம் III ஐச் சேர்ந்த தொழில்நுட்ப அலுவலர் (சிவில்) பதவிகள் 07 இற்கு தகுதிவாய்ந்தவர்களை ஆட்சேர்ப்புச் செய்வதற்கு திறந்த அடிப்படையில் விண்ணப்பங்கள் கோரப்படுவதுடன். இதன் போது சிவில் துறையில் சான்றிதழ்களைப் பெற்றுக் கொண்டுள்ளவர்களின் விண்ணப்பங்கள் மாத்திரம் கவனத்தில் கொள்ளப்படும். இந்த அறிவித்தலின் இறுதியில் குறிப்பிடப்பட்டுள்ள மாதிரிப்படிவத்திற்கு அமைய தயார் செய்யப்பட்ட விண்ணப்பப்படிவங்களை கீழே குறிப்பிடப்பட்டுள்ள திகதி அல்லது அதற்கு முன்னர் "செயலாளர், நீதி அமைச்சு, மீயுயர் நீதிமன்றக் கட்டிடத் தொகுதி, கொழும்பு - 12" எனும் முகவரிக்குக் கிடைக்கக்கூடியவாறு பதிவுத் தபாலில் அனுப்பி வைத்தல் வேண்டும். கடித உறையின் இடதுபக்க மேல்மூலையில் "நீதி அமைச்சின் இலங்கை தொழில்நுட்ப சேவையின் தரம் III ஐச் சேர்ந்த தொழில்நுட்ப அலுவலர் (சிவில்) பதவிக்கு ஆட்சேர்ப்புச் செய்தல் (திறந்த)" எனத் தெளிவாகக் குறிப்பிடுதல் வேண்டும்.*

*விண்ணப்பம் கோரப்படும் இறுதித் திகதி 2021.03.12 ஆந் திகதியாகும்.*

***குறிப்பு.-*** *விண்ணப்பப்படிவம் அல்லது அது சம்பந்தமான கடிதமொன்று தபாலில் காணாமல் போனதாக அல்லது தாமதமானது எனச் சமர்ப்பிக்கப்படுகின்ற முறைப்பாடுகள் பற்றிக் கவனம் செலுத்தப்படமாட்டாது. இறுதித் திகதி வரை விண்ணப்பப்படிவத்தை தாமதப்படுத்துவதன் காரணமாக ஏற்படக்கூடிய நட்டங்களை விண்ணப்பதாரிகளே ஏற்றுக் கொள்ள வேண்டும்.*

*01.* **சேவைக்கு ஆட்சேர்ப்புச் செய்யும் முறை.-** *பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் அல்லது நீதி அமைச்சின் செயலாளரினால் அங்கீகரிக்கப்படுகின்ற நிறுவனமொன்றினால் நடாத்தப்படுகின்ற எழுத்து மூலமான பரீட்சையின் பெறுபேறுகளின் அடிப்படையில் நீதி அமைச்சின் செயலாளரினால் நியமனம் செய்யப்படுகின்ற பொதுவான நேர்முகப் பரீட்சைக் குழுவினால் தகைமைகள் பரிசீலிக்கப்பட்டு தெரிவு இடம்பெறும்.*

*02.* **சேவையில் ஈடுபடுத்துவதற்கான நிபந்தனைகள்.-**

(i) *இப்பதவி நிரந்தரமானது.*

*குறிப்பு : பதவிக்கு உரித்தான ஓய்வூதிய முறை பற்றி எதிர்காலத்தில் அரசாங்கத்தினால் மேற்கொள்ளப்படுகின்ற கொள்கைசார் தீர்மானங்களுக்கு உட்பட்டது.*

(ii) *இப்பதவிக்கு நியமனம் செய்யப்படுகின்ற ஒரு அலுவலர் மூன்று வருட தகுதிகாண் காலத்திற்கு உட்படுவதுடன், மேற்படி 03 வருடங்களுக்குள் முதலாவது வினைத்திறன்காண் தடை தாண்டல் பரீட்சையில் சித்தியடைதல் வேண்டும்.*

(iii) *அரசாங்க நிருவாக சுற்றறிக்கை 18/2020 மற்றும் அதன் விளைவாய்ந்தன்மை வாய்ந்த சுற்றறிக்கைகளுக்கு அமைய அரச கரும மொழித் தேர்ச்சியை 05 வருடங்களுக்குள் பூர்த்தி செய்துகொள்ளல் வேண்டும். அரச கரும மொழியல்லாத மொழி மூலமாக சேவையில் இணைந்து கொண்டுள்ள அலுவலர்கள் 3 வருடங்களுக்குள் ஒரு அரச கரும மொழி பற்றிய தேர்ச்சியைப் பெற்றுக்கொள்ளல் வேண்டும் என்பதுடன், மற்றைய அரசகரும மொழி தொடர்பிலான தேர்ச்சியை 05 வருடங்களுக்குள் பெற்றுக்கொள்ளல் வேண்டும்.*

(iv) *அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் நடவடிக்கைமுறை விதிகளுக்கும், இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் தாபன விதிக்கோவைக்கும், அரசாங்க நிதிப் பிரமாணங்களுக்கும், திணைக்களம்சார் ஏனைய கட்டளைகளுக்கும் இப்பதவி உட்பட்டதாகும்.*

*03.* ***சம்பள அளவுத் திட்டம்.-*** *இப்பதவிக்கு அரசாங்க நிருவாக சுற்றறிக்கை இலக்கம் 3/2016 எனும் சம்பளச் சுற்றறிக்கைக்கு அமைய MN-3-2016 ரூபா 31,040.00 -10×445 - 11 × 660-10×730-10×750- ரூபா 57,550.00 ஆன (மாதாந்த) சம்பள அளவுத்திட்டம் உரித்தாகும். (2016.02.25 ஆந் திகதிய அரசாங்க நிருவாக சுற்றறிக்கை இலக்கம் 03/2016 இன் அட்டவணை II இற்கமைய சம்பளம் செலுத்தப்படும்.)*

*04.* **தகைமைகள் :**

(i) **கல்வித் தகைமைகள் :**

(அ) *கல்விப் பொதுத் தராதரப் பத்திர (சாதாரண தர) பரீட்சையில் சிங்களம்/ தமிழ்/ ஆங்கில மொழி, கணிதம், விஞ்ஞானம் மற்றும் மேலும் ஒரு பாடத்திற்கு திறமைச் சித்திகளுடன் (06) ஆறு பாடங்களில் இரு அமர்வுகளுக்கு மேற்படாதவாறு சித்தியடைந்திருத்தல்.*

*மற்றும்*

(ஆ) கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர் தரப்) பரீட்சையில் பௌதீகவியல், இணைந்த கணிதம். இரசாயனவியல் ஆகிய பாடப் பிரிவுகளுக்கு உரித்தான சகல பாடங்களிலும் (சாதாரண பொதுப் பரீட்சை தவிர) ஒரே தடவையில் சித்தியடைந்திருத்தல் வேண்டும். (பழைய பாடத்திட்டத்தின் கீழ் 03 பாடங்களில் ஒரே அமர்வில் சித்தியடைந்திருப்பது போதுமானது.)

(ii) **தொழில்சார் தகைமைகள் :**

(அ) மொரட்டுவை பல்கலைக்கழகத்தின் அல்லது அம்பாறை ஹாடி நிறுவனத்தினால் வழங்கப்படுகின்ற தேசிய தொழில்நுட்ப டிப்ளோமா (சிவில்)

அல்லது

(ஆ) தேசிய பயிலுநர் மற்றும் தொழிற்பயிற்சி அதிகார சபையினால் வழங்கப்படுகின்ற தேசிய பொறியியல் டிப்ளோமா (சிவில்)

அல்லது

(இ) கல்வி மற்றும் உயர் கல்வி அமைச்சினால் வழங்கப்படுகின்ற உயர் பொறியியல் டிப்ளோமா (சிவில்)

அல்லது

(ஈ) இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தால் வழங்கப்படுகின்ற தேசிய தொழில்நுட்ப டிப்ளோமா (சிவில்)

அல்லது

(உ) இலங்கை பொறியியல் நிறுவகத்தினால் நடாத்தப்படுகின்ற பொறியியல் பரீட்சையின் 1 ஆவது பகுதியை வெற்றிகரமாக பூர்த்தி செய்திருத்தல் (சிவில்)

அல்லது

(ஊ) உயர் கல்வி அமைச்சு மற்றும் மேலே குறிப்பிடப்பட்டுள்ள தொழில்நுட்ப சான்றிதழ்களை வழங்கிவைக்கும் நிறுவனங்களிடம் வினவி கருத்துக்களைப் பெற்றுக்கொண்ட பின்னர் மேலே குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளுக்கு சகல வகையிலும் சமமானதென இலங்கை மூன்றாம் நிலை மற்றும் தொழிற்கல்வி ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்படுகின்ற வேறு தொழில்நுட்பத் தகைமைகளைப் பெற்றிருத்தல்

அல்லது

(எ) தொழில் துறை தொடர்பிலான தேசிய தொழில்சார் தேர்ச்சி (NVQ) 06 ஆம் மட்டத்தின் தகைமைகளைப் பூர்த்தி செய்திருத்தல்

05. **அனுபவம்.**- குறித்த துறையில் பெற்றுக்கொண்டுள்ள சேவைசார் அனுபவம் விசேட தகைமையாகக் கருதப்படும்.

06. **உடல்சார் தகைமை.**- ஒவ்வொரு விண்ணப்பதாரியும் இலங்கையில் எந்தவொரு பிரதேசத்திலும் சேவையாற்றுவதற்கும், பதவியின் கடமைகளை நிறைவேற்றுவதற்கும் போதியளவு உடல்சார் மற்றும் உளவியல்சார் தகைமையைக் கொண்டவராக இருத்தல் வேண்டும்.

07. **ஏனைய தகைமைகள்.**-

(i) விண்ணப்பதாரி இலங்கைப் பிரசையாக இருத்தல் வேண்டும்;

(ii) விண்ணப்பதாரி சிறந்த நன்னடத்தை உடையவராக இருத்தல் வேண்டும் ;

(iii) சேவைக்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான போட்டிப் பரீட்சைக்குத் தோற்றுவதற்கு தேவையான சகல தகைமைகளையும் பூர்த்தி செய்திருப்பதாக ஏற்றுக் கொள்ளப்படுவது விண்ணப்பதாரி குறித்த சகல தகைமைகள் மற்றும் உரிய வயதெல்லை விண்ணப்பம் கோரப்படுகின்ற அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள திகதியில் சகல வகையிலும் பூர்த்தி செய்திருந்தால் மாத்திரமாகும்.

08. **வயதெல்லை.**- விண்ணப்பங்களை ஏற்றுக்கொள்ளும் திகதிக்கு 18 வயதுக்குக் குறையாதவராகவும், 30 வயதுக்கு மேற்படாதவராகவும் இருத்தல் வேண்டும்.

09. **ஆட்சேர்ப்புச் செய்யும் முறை.**- எழுத்து மூலமான பரீட்சை மற்றும் பொதுவான நேர்முகப் பரீட்சையின் பெறுபேறுகளின் அடிப்படையில் ஆட்சேர்ப்புச் செய்யப்படும் எழுத்து மூலமான பரீட்சையில் சித்தியடையும் விண்ணப்பதாரிகளின் மொத்தப் புள்ளிகளின் திறமைகளின் ஒழுங்குவரிசை அடிப்படையில் ஆட்சேர்ப்புச் செய்ய எதிர்பார்க்கப்பட்டுள்ள எண்ணிக்கைக்கு சமமான எண்ணிக்கையானோர் பொதுவான நேர்முகப் பரீட்சைக்கு உட்படுத்தப்பட்டு தகுதிவாய்ந்தவர்கள் தெரிவு செய்யப்படுவார்கள்.

10. **எழுத்துமூலமான பரீட்சை .-**

| பாடம் | உச்சபுள்ளிகளின் எண்ணிக்கை | சித்திய பெறுவதற்குப் புள்ளிகள் |
|---|---|---|
| 1. சாதாரண தரப் பரீட்சை | 100 | 40% |
| 2. பொது அறிவு மற்றும் உளச்சார்புப் பரீட்சை | 100 | 40% |

11. **பொதுவான நேர்முகப் பரீட்சை.**- நீதி அமைச்சரின் செயலாளரினால் நியமனம் செய்யப்படுகின்ற நேர்முகப் பரீட்சைக் குழுவினால் விண்ணப்பதாரிகளின் தகைமைகள் பரிசோதிக்கப்படும்.

12. (1) விண்ணப்பப்படிவத்தை செ.மீ. 22 - 29 அளவான A4 தாளில் தயார் செய்துகொள்ள வேண்டும் என்பதுடன், இலக்கம் 1 - 12 வரையான தலைப்புக்களை முதலாம் பக்கத்திலும், 13 இறுதி வரையான தலைப்புக்களை இரண்டாம், மூன்றாம் பக்கங்களிலும் உள்ளடக்கும் வகையில் தயார் செய்து கொள்ளல் வேண்டும். அவற்றுக்கான தகவல்களை தமது கையெழுத்து மூலம் தெளிவாக உட்புகுத்தல் வேண்டும் . சகல வகையிலும் பூர்த்தி செய்யப்பட்டுள்ள, அடிப்படைத் தகைமைகள் இல்லாத, உரிய திகதியின் பின்னர் கிடைக்கின்ற மற்றும் மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கு இசைவாக இல்லாத விண்ணப்பப்படிவங்கள் அறிவிப்புச் செய்யாது நிராகரிக்கப்படும். மேற்படி விண்ணப்பப்படிவத்தின் பிரதியை தம்வசம் வைத்திருப்பது பயனுள்ளதாக இருக்கும். மேலும் பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப்படிவம் அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கு ஏற்புடையவாறு உள்ளதா என்பதை விண்ணப்பதாரி ஆராய்ந்துப் பார்த்தல் வேண்டும் என்பதுடன் அவ்வாறல்லாத விண்ணப்பப்படிவங்கள் நிராகரிக்கப்படும் என்றும் மேலும் அறியத்தருகின்றேன். விண்ணப்பப்படிவம் இத்துடன் இணைக்கப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கு அமையத் தயார் செய்யப்படுதல் வேண்டும். விண்ணப்பப்படிவம் கிடைத்தமை பற்றி அறியத்தரப்படமாட்டாது.

**கவனிக்க.-**

(அ) விண்ணப்பப்படிவத்திற்கு ஏற்புடையதல்லாத எந்தவொரு ஆவணமோ அல்லது அதன் பிரதியோ இணைக்கப்படக் கூடாது;

(ஆ) கோரப்படுகின்ற சந்தர்ப்பத்தில் ஆவணங்களின் மூலப் பிரதியை சமர்ப்பிக்கத் தவறும் அபேட்சகர்களின் விண்ணப்பப்படிவங்கள் கவனத்தில் கொள்ளப்படமாட்டாது;

(இ) அரசாங்க சேவை/ மாகாண அரசாங்க சேவை, அரசாங்கக் கூட்டுத்தாபனங்களில் சேவையாற்றும் விண்ணப்பதாரிகள் தமது திணைக்கள/ நிறுவனத் தலைவர் ஊடாக விண்ணப்பப்படிவத்தை சமர்ப்பித்தல் வேண்டும்.

13. **பரீட்சைக் கட்டணம் .**- ஒவ்வொரு விண்ணப்பதாரியும் பரீட்சைக் கட்டணமாக ரூபா 500 ஆன தொகையை மக்கள் வங்கியின் நகரக் கிளையின் நீதி அமைச்சின் செயலாளரின் பெயருக்கு 176100199025184 ஆம் இலக்க கணக்கிற்கு செலவு வைத்தல் வேண்டும். குறித்த பற்றுச்சீட்டின் மூலப் பிரதியை உரிய இடத்தில் ஒட்டி அனுப்பி வைத்தல் வேண்டும்.

14. அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் நடவடிக்கைமுறை விதிகள் காலத்திற்குக் காலம் அரசாங்க சேவை தொடர்பில் வெளியிடப்பட்டுள்ள சுற்றறிக்கைகள் மற்றும் நீதி அமைச்சின் இலங்கை தொழில்நுட்ப சேவையின் தொழில்நுட்ப அலுவலர் பதவிக்குரிய ஆட்சேர்ப்பு ஒழுங்குமுறையில் நிபந்தனைகள் இப்பதவிக்கு ஏற்புடையதாகும்.

15. இந்த வெற்றிடங்களை முழுமையாக அல்லது அதன் ஒரு பகுதியை மாத்திரம் பூர்த்தி செய்வது நீதி அமைச்சின் செயலாளரின் தற்றுணிபின் பிரகாரம் மேற்கொள்ளப்படும்.

எம். எம். பீ. கே. மாயாதுன்னே,
செயலாளர்,
நீதி அமைச்சு.

மாதிரி விண்ணப்பப்படிவம்

இல. : ..................
(அலுவலக உபயோகத்திற்கு)

**நீதி அமைச்சின் இலங்கை தொழில்நுட்ப சேவையின் தரம் III ஐச் சேர்ந்த தொழில்நுட்ப அலுவலர் (சிவில்) பதவிக்கு ஆட்சேர்ப்பு செய்வதற்கான விண்ணப்பப்படிவம் - 2021 (திறந்த அடிப்படையில்)**

01. (அ) முதலெழுத்துக்களுடன் பெயர் (சிங்களம்/தமிழில்): ...................................

..................................................................................................................

முதலெழுத்துக்களுடன் பெயர் (ஆங்கில பெரிய எழுத்தில்) : .........................................

..................................................................................................................

(ஆ) முழுப் பெயர் (சிங்களம்/தமிழில்): ...................................

..................................................................................................................

முழுப் பெயர் (ஆங்கில பெரிய எழுத்தில்) : .........................................

..................................................................................................................

02. நிரந்தர முகவரி (சிங்களம்/தமிழில்): ...................................

..................................................................................................................

03. நிரந்தர முகவரி (ஆங்கில பெரிய எழுத்தில்) : .........................................

..................................................................................................................

04. தொலைபேசி இலக்கம் : | | | | | | | | | | |

05. மின்னஞ்சல் முகவரி : ...................................

06. தேசிய ஆள் அடையாள அட்டை இல. : | | | | | | | | | | | | |

07. பால் : ...................................

08. பிறந்த திகதி :

ஆண்டு :............................ மாதம் : ..................... திகதி : .....................

09. விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதிக்கு வயது :

வருடங்கள் : ............... மாதங்கள் :................. நாட்கள் : ...................

10. இனம் : ...................................

11. திருமணமானவரா/திருமணமாகாதவரா என்பது : ...................................

12. க.பொ.த. (சா. தர) பரீட்சை

பரீட்சை சுட்டெண் : ..........................   பரீட்சைக்குத் தோற்றிய ஆண்டு : ..........................

பாடம் : ............................ பெறுபேறு : .....................   பாடம் : ............................ பெறுபேறு : .....................

பாடம் : ............................ பெறுபேறு : .....................   பாடம் : ............................ பெறுபேறு : .....................

பாடம் : ............................ பெறுபேறு : .....................   பாடம் : ............................ பெறுபேறு : .....................

பாடம் : ............................ பெறுபேறு : .....................   பாடம் : ............................ பெறுபேறு : .....................

பாடம் : ............................ பெறுபேறு : .....................   பாடம் : ............................ பெறுபேறு : .....................

13. க.பொ.த. (உயர் தர) பரீட்சை

பரீட்சை சுட்டெண் : ..........................   பரீட்சைக்குத் தோற்றிய ஆண்டு : ..........................

பாடம் : ............................ பெறுபேறு : .....................   பாடம் : ............................ பெறுபேறு : .....................

பாடம் : ............................ பெறுபேறு : .....................   பாடம் : ............................ பெறுபேறு : .....................

பாடம் : ............................ பெறுபேறு : .....................   பாடம் : ............................ பெறுபேறு : .....................

14. விண்ணப்பம் கோரும் அறிவித்தலின் 04 ஆம் பந்தியின் (II) ஆம் பிரிவுக்கு அமையத் தகைமைகள் :

(i) ..........................................................................

(ii) ..........................................................................

(iii) ..........................................................................

(iv) ..........................................................................

(v) ..........................................................................

(vi) ..........................................................................

15. மொழித் தேர்ச்சி – (உரிய நிரலில் ✓ அடையாளக் குறியிடுக.)

| பாடம் | மிக்க நன்று | நன்று | சாதாரணம் | பலவீனம் |
|---|---|---|---|---|
| சிங்களம் | | | | |
| தமிழ் | | | | |
| ஆங்கிலம் | | | | |

16. பரீட்சைக் கட்டணம் செலுத்தப்பட்ட பற்றுச்சீட்டு –

குறித்த பற்றுச்சீட்டின் மூலப் பிரதியை அகற்ற முடியாதவாறு இங்கே ஒட்டவும்.

**விண்ணப்பதாரியின் உறுதியுரை**

............................................ ஆகிய நான் இதில் குறிப்பிட்டுள்ள சகல விடயங்களும் உண்மையானவை என்றும் சரியானவை என்றும் தெரிவிக்கிறேன். நான் அரசாங்க சேவையிலிருந்து பதவி நீக்கம் செய்யப்படவோ அல்லது கருணை அடிப்படையிலான மாற்றுவழிமுறையாக வினைத்திறனின்மையின் அடிப்படையில் சேவையிலிருந்து ஓய்வுறுத்தப்படவோ இல்லை என்றும், பதவி வெறிதாக்கிய ஒருவராகக் கருதப்படவில்லை என்றும் உறுதிப்படுத்துகின்றேன். இதில் உள்ளடங்கும் விடயங்கள் எதுவும் உண்மைக்கு மாறானவை என்பது அல்லது தவறானது என்பது என்னைத் தெரிவு செய்துகொள்ள முன்னர் வெளிப்படுத்தப்படுமாயின் தகுதியற்றவராக்கப்படுவதற்கு உட்படுவேன் என்றும், தெரிவு செய்யப்பட்ட பின்னர் அவ்வாறான நிலைமை வெளிப்படுத்தப்படுமாயின் எந்தவொரு நட்டஈடும் செலுத்தாது தொழிலில் இருந்து நீக்கம் செய்யப்பட முடியும் என்பதையும் நான் அறிவேன்.

....................................
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

திகதி : ..........................................

**திணைக்களத் தலைவரின் உறுதியுரை (தற்போது அரசாங்க சேவையில் ஈடுபட்டுள்ள அலுவலர்களுக்கு மாத்திரம் ஏற்புடையதாகும்.)**

இந்த விண்ணப்பப்படிவத்தைச் சமர்ப்பிக்கின்ற திரு./ திருமதி/ செல்வி ......................................................... என்பவர் ......... ஆந் திகதி முதல் ................ அமைச்சில்/ திணைக்களத்தில் நிரந்தர/ தற்காலிக/ அமய அலுவலராக சேவையாற்றி வருகின்றார் என்றும் அவர் மேலே குறிப்பிட்டுள்ள தகவல்கள் சரியானவை என்றும், மேற்படி பத்திரிகை அறிவித்தலுக்கு அமைய அவர் இதற்குத் தோற்றுவதற்கு தகைமை பெற்றுள்ளார் என்றும், குறித்த அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள ஒழுங்குவிதிகளுக்கு அமைய அவர் இப்பதவிக்கு தெரிவு செய்யப்படும் பட்சத்தில் அவரை சேவையிலிருந்து விடுவிக்க முடியும்/ முடியாது என்றும் அறியத்தருகின்றேன்.

................................
நிறுவனத் தலைவரின் கையொப்பமும்
பதவி முத்திரையும்.

திகதி : ..............................
பெயர் : ..............................
பதவி : ..............................
அமைச்சு/திணைக்களம் : ..............................

2-708

## இலங்கைப் புகையிரத திணைக்களத்தின் முகாமைத்துவ உதவியாளர் தொழில்நுட்ப பிரிவு - 2 சேவைத் தரத்தின் புகையிரத தொழில்நுட்ப முகாமைத்துவ உதவி இயந்திர மற்றும் புகையிரத தொழில்நுட்ப முகாமைத்துவ உதவி மின்னியலாளர் பதவிகளின் III ஆம் தரத்திற்கு ஆட்சேர்ப்பு செய்யும் திறந்த போட்டிப் பரீட்சை - 2021

Open Competitive Examination for Recruitment to Grade III of Railway Technological Management Assistant (Machanical) & Railway Technological Management Assistant (Electrical) in management Assistant Technological Service Category Segment - 2- 2021

**திருத்தம்**

*மேற்குறிப்பிட்ட பதவிகளுக்கு ஆட்சேர்ப்பு செய்வதற்காக பிரசுரிக்கப்பட்ட 2021.02.05 ஆந் திகதிய வர்த்தமானி அறிவித்தலின் 04 இல் உள்ள கீழ் குறிப்பிடப்பட்டுள்ள நிபந்தனை திருத்தம் செய்யப்படுகின்றது.*

*4. ஆட்சேர்ப்பு செய்யும் நிபந்தனை.- 2017.06.15 ஆந் திகதி வரையில் இலங்கைப் புகையிரத ஜேர்மன் பயிற்சி நிறுவனத்தில் பயிற்சி நெறிக்காக சேர்த்துக் கொள்ளப்பட்ட பயிற்சியாளர்களுக்கு மாத்திரம் குறித்த பயிற்சி நெறியை சாதகமான முறையில் பூரணப்படுத்தியதன் பின்பு வழங்கப்படும் பயிற்சி சான்றிதழை பெற்றிருந்தால் மேற்குறிப்பிட்ட கல்வி தராதரத்தை கருத்திற் கொள்ளாது விண்ணப்பிப்பதற்கு சந்தர்ப்பம் வழங்கப்படும்.*

*என்பது கீழுள்ளவாறு திருத்தம் செய்யப்படுகின்றது.*

*அமைச்சரவையின் செயலாளரின் இலக்கம் අමප / 17/ 2882/ 709/ 102-1 உடன் 2017.12.19 ஆந் திகதியுடைய அமைச்சரவையின் தீர்மானத்தின்படி புகையிரத திணைக்களத்திற்காக புதிய சம்பள அளவுத் திட்டத்தை தயாரிக்கும் வரை இலங்கை ஜேர்மன் புகையிரத தொழில்நுட்ப பயிற்சி நிறுவனத்தில் பயிற்சி நெறிக்காக சேர்த்துக்கொள்ளப்படும் பயிற்சியாளர்களுக்காக மாத்திரம் குறித்த பயிற்சிநெறியை சாதகமான முறையில் பூரணப்படுத்தியதன் பின்பு வழங்கப்படும் பயிற்சி சான்றிதழை பெற்றிருப்பின் 2021.02.05 ஆந் திகதியுடைய வர்த்தமானி அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள கல்வித் தராதரத்தை கருத்திற் கொள்ளாது விண்ணப்பிப்பதற்கு சந்தர்ப்பம் வழங்கப்படும்.*

*வர்த்தமானி அறிவித்தலிலுள்ள ஏனைய விடயங்கள் அதிலுள்ளவாறே செயற்படுத்தப்படும்*

எச். எம். நந்தசேன
மேலதிக புகையிரத
முகாமையாளர் (நிருவாகம்),
புகையிரத பொது முகாமையாளருக்காக.

*2021, மாசி 09.*

*02-719*